கா[illegible]

ஆராய்ச்சி[illegible]

[illegible]

[illegible]

செய்யப்ப[illegible]

[illegible]

பெருந்த[illegible]

கவிதை

[illegible]

[illegible] யீடு

தமிழ்த் திருநாள் வெளியீடு : 6

# வழி காட்டும் வள்ளுவர்

நெல்லை அருணகிரி இசைக் கழகத்தின்
எட்டாவது 23—1—54 தமிழ்த் திருவிழாவிலே நிகழ்த்திய
ஆராய்ச்சிச் சொற்பொழிவுகள்

பதிப்பாசிரியர்
இராவ் சாகிப்
கு. அருணசலக் கவுண்டர்
ம. தி. தா. இந்துக் கல்லூரி
திருநெல்வேலி.

தருமையருள் பெறு நெல்லை
அருணகிரி இசைக் கழக வெளியீடு
1954

*விற்பனையாளர் :*

**தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்**

*1. திருநெல்வேலி*

*2. 1/140, பிராட்வே, சென்னை*



தருமபுர ஆதீனம் 25-வது மகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

உ

குருபாதம்

# உரிமையுரை

தருமபுரவாதீனத் தலைவரவர்களாக எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ

**சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த**

**பரமாசாரிய சுவாமிகளாகிய**

எங்கள் குரு

மகாசந்நிதானம்

எங்களை ஆட்கொண்ட

பெருங் கருணைக்கும், சைவ

சமயத்தையும் தமிழ் மொழியையும் தமிழர்

சமுதாயத்தையும் காலவரையறையின்றி எப்போதும் பேணி

வளர்த்து வருகிற பெருவள்ளன்மைக்கும்,

கழிபெருங் களிகூர்ந்து இந்நூலை உள்ளன்

போடுகூடிய வணக்கத்துடன்

பாதகாணிக்கையாகச்

சமர்ப்பிக்

கின்றோம்.

**சைவஞரவர் சார்வலால் யாதும்சார்விலோம் நாங்களே.**

திருநெல்வேலி
*23—1—'54*

அருணகிரி இசைக் கழகத்தார்

தருமபுரவாதீனம்

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம்

சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அருளிய

# அணிந்துரை

வள்ளுவர் பல கோணங்களிலிருந்து பார்க்கக்கூடிய அறிவியல் ஒளிமணி; அவரை அறம், அரசியல், பொருளியல், மெய்யறிவு கவிதை, பெருந்தகை என்ற கண்களைக் கொண்டு பல புலவர்கள் கண்டு காட்டியிருக்கிறார்கள்.

வள்ளுவரை அரசியற்கண்கொண்டு கண்ட அறிஞர், அரசு என்னும் சொல் எவ்வெப்பொருள்களில் வழங்கி வந்துள்ளது; அதன் மறு பெயர்கள் யாவை; அவற்றின் வேர்ப் பொருளால் பெறப்படும் விழுமிய பொருள்கள் யாவை; இயல் என்பது எப் பொருளில் வந்துள்ளது; அறிவென்னும் சொல்லாற்றல் யாது; வள்ளுவர் காலத்து அரசியல் எங்ஙனமிருந்தது, என்பவற்றை விளக்கியிருக்கிறார். வள்ளுவர் காலம் பெருநிலக் குறுநில மன்னர்கள் சிறப்புறக் காவல் நடாத்திய காலமாதலின், அரசியல் வாழ்வும் தாழ்வும் வள்ளுவர் கண்ணிற்பட அவற்றின் விளைவுகள் நீதியாகக் குறளில் இடம் பெற்றுள்ளமையும், முப் பால் என்பது ஒன்றிலொன்று பிணைந்துள்ள முழுப்பால் ஆன மையும் நன்றாக விளக்கியுள்ளார்.

'பொருளியற் கண்ணால் பொய்யில் புலவரைக் கண்ட அறிஞர், வள்ளுவம் எத்தகைய பொருளாதாரக் கொள்கையை உரைப்பது; பொருளின் தன்மை, பயன் பற்றி வள்ளுவர் வழங்கிய கருத்துக்கள் இன்ன; வள்ளுவர் காண விரும்பும் மனித சமுதாயத்தில் தாழ்விலாச் செல்வர் பெருகி இருக்க வேண்டிய அவசியம் இன்னது; வள்ளுவத்தோடு பிறகொள்கைகளை ஒப்பிடுங்கால் வள்ளுவமும் பொதுவுடைமைக் கொள்கையும் அடிப்படையிலே எவ்வாறு வேறுபட்டவை; அறநெறிச் சார்பிலே பொருளியற் கருத்துக்கள் வளர வேண்டுவதே வள்ளுவம்' என்று இன்னோரன்ன கருத்துக்களை நன்றாக விளக்கியுள்ளார்.

மெய்யறிவுக் கண்ணுல் கண்ட அறிஞர் பொறிக்காட்சி உண்மைக் காட்சியன்று; நுனித்துணர்வதே மெய்யுணர்வு; என்பனவற்றை வள்ளுவர் நூல்கொண்டு ஆராயப் புகுந்து துறவோரியல்பையும், மெய்ப்பொருளுணர்த்திய ஆசிரியரியல்பையும் எடுத்து விளக்கியுள்ளார். மக்களது ஐந்து நிலைகளையும் கூறி இறை, உலகம் முதலான பொருள்களைப்பற்றி அகச்சான்று கொண்டு விளக்கியிருப்பது அணிக்கு அணி செய்தது போலாம்.

இங்ஙனமே ஏனைய சொல்லோவியங்களும் கருத்துயிரைத் தாங்கியிருக்குமென்று கருதுகிறோம்.

வள்ளுவரைப்பற்றி — வள்ளுவத்தைப்பற்றி எத்துணை ஆராய்ச்சிகள் தோன்றினும், வள்ளுவம் அவற்றுக்கு அப்பாற்பட்டுச் 'சிவம்' என, தவப்பயனுக்கேற்பத் தன்னொளியைத் தந்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

கருத்துக்கள் காற்றிற் கரைந்து வானில் உறைதலைக் கருவியின்றி அறியமாட்டாத உலகிற்கு இம்முயற்சி ஏற்றதுணை. இது இளைஞர் எல்லாருள்ளத்தும் குடியேறின், நாடு தழைக்கும்; தமிழ் வளரும்.

---

# பதிப்புரை

எங்கள் அருணகிரி இசைக்கழகம் 1938-லே தொடங்கியது; தமிழறிவையும் சமய வுணர்வையும் பாதுகாத்து வளர்ப்பது அதன் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை எய்தும் முயற்சியிலே, கழக மேடையில் ஞாயிறு தோறும் ஆராய்ச்சி விரிவுரைகளுக்கு இடம் வகுத்தும், தேவாரம் திருவாசகம் குறளதிகாரங்களுக்கு இசைவகுத்தும், நூலரங்கு கவி மன்றங்களை நிறுவிப் புதிய நூல்களையும் கவிதைகளையும் வெளியிட்டும் வருகின்றது. நாடோடிப் பாடல்களுக்குப் புத்துயிர் தந்தும், நாடகங்கள் நடித்தும், வருடந்தோறும் தமிழ் விழாக்களை நடத்தியும் — இவ்வாறு முத்தமிழ்த் துறைகளிலும் முயன்று பணி செய்து வருகின்றது.

எங்கள் நான்காம் தமிழ்த் திருநாளிலே — 26–1–'50 ஒருநாள் சொற்பொழிவுகளைத் தொகுத்துப் புத்தகமாகத் **தமிழ்க் கருவூலம்** என்று வெளியிட்டோம். **மாயூரம் வேதநாயகம் பிள்ளை — வரலாறும் நூலாராய்ச்சியும்** என்ற நூலை, கு. அருணசலக் கவுண்டரவர்களைக் கொண்டு எழுதுவித்து ஆறாந் திருநாளிலே 4—2—'52-ல் அரங்கேற்றினோம். ஏழாம் விழாவிலே **அரசியலறிவு** என்ற சொற்பொழிவு நூலை வெளிக்கொணர்ந்தோம். எட்டாவது தமிழ் விழாவிலே 23-1-'54 — 28-1-'54 மூன்று நாள் சொற்பொழிவுகளைத் தொகுத்து மூன்று தனி நூல்களாகத் தமிழுலகுக்குத் தருகின்றோம். அவையாவன :

1. வழி காட்டும் வள்ளுவர்
2. தமிழக வரலாறு
3. இந்திய விஞ்ஞானிகள்

இவற்றுள், **வழிகாட்டும் வள்ளுவர்** என்பது பேராசிரியர் அறுவருடைய 23–1–54 ஒரு நாள் சொற்பொழிவுகள் அடங்கிய ஆராய்ச்சி நூல். தற்போதைய சிக்கல்களைத் தீர்த்து, சிறந்த வாழ்க்கையை நடத்துவதற்கு வள்ளுவர் வழி

காட்டுவது போலவே, எங்கள் பேராசிரியர்கள் இந்நூலால் வள்ளுவரை ஆராய்வதற்கும் வழி காட்டுகின்றார்கள். இவர்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்நூலைப் பாதகாணிக்கையாக ஏற்றருளிய எங்கள் குரு மகா சந்நிதானத்துக்கு நாங்கள் என்றும் அடியோமே; மகா சந்நிதானம் 'எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்'.

இந் நூல் எங்கள் அருணகிரி இசைக் கழக வெளியீடு; எங்கள் வெளியீடாக நின்று இது நிலவுவதற்கு உறுதுணையாய் உற்ற விருதுநகர் வள்ளுவவேள் சு. வெள்ளைச்சாமி நாடாரவர்களுக்கும், சங்கர் — கணபதி மில்களின் அதிபர் சி. ச. அருணாசலம் பிள்ளையவர்களுக்கும் நாங்கள் மிகவும் நன்றியுடையோம். தங்கள் பொறுப்பான வேலைகளுக்கிடையே எங்கள் வெளியீட்டை விரைந்து செம்மையாக அச்சிட்டு உதவிய ஹிலால் அச்சக அதிபரவர்களுக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

தருமையருள் பெறு
நெல்லை அருணகிரி இசைக் கழகம்
திருநெல்வேலிச் சந்தி
23—1—54

இராம. கனகசபாபதி
அமைச்சர்

'திருவள்ளுவர் அரசியலறிஞர் - அரசியலறிஞருட் டலை சிறந்தவர்' என்று மொழிந்தால் திருக்குறளைக் கற்றறிந்தோர் எவரும், அவ்வாறு கூறக் காரணம் யாது, என்று கேளார்; திருக்குறளைப்பற்றிக் கேட்டறிந்தோரும் கேளார்.

அஃதவ்வாருக இதனைப்பற்றி யேன் எடுத்து மொழிதல் வேண்டும்?

அவரை அரசியலறிஞர் என்று ஒப்புவோருட் பலர் பலவாறு அவரது அரசியலறிவைப்பற்றி மொழிவர்; பலர் பலவாறு மொழிந்துள்ளனர். மற்றும் மற்றும் அதனைப்பற்றிக் கூறுதல் மிகையாகாதென்னுங் கருத்தோடுதான் இங்கொரு வாருக அஃதெடுத்து மொழியப்படுகிறது. திருவள்ளுவர் யார் என்பதுபற்றி எதுவும் இங்கே யியம்புதல் வேண்டுவதன்று. அவருடைய அரசியலறிவு தான் யாது என்றியம்புதல் முயலப் படுகிறது.

அரசு+இயல்+அறிவு என்னும் இச்சொற்கள் குறிப் போர் குறிப்பின்படி பொருள் குறிப்பன. இங்கே நினைக்கப் படும் பொருள் யாது?

அரசு எனப்படுவது பொதுவாகப் பிறரை யடக்கியாளு தல் என்னும் பொருளில் வழங்குகிறது. செய்யுளில் அது அரசன் ருெழிலையும் அரசனையும் குறிக்கிறது. பிறபொருள் களையும் பிற மக்களையும் 'உடைமை' யாகக் கொண்டவன் அரசன் என்ற பொருள் படும்படியமைந்துள்ளது. 'படைகுடி கூழமைச்சு நட்பர ணாறும் உடையா னரசரு ளேறு,' என்னுங் குறளில் ஒன்று கருத இடமுண்டு. எவன் இவ் வாறனையுமோ இவற்றுட் சிலவற்றையோ உடையானே அவன் அரசனு மென்பதாயிற்று. அரசன் என்ற பொருளில் வழங்கப்படும். 'மன்னன்' என்பது என்றும் நிலைபேறுடையவன் என்னும் பொருளது. 'மன்னனிறந்தான் மன்னன் வாழ்க' எனும் ஆங்கில

வழக்கிற்போல, மன்னன் என்போன் என்றும் நிலைபேறுடையவன் என்பது கருத்துப்போலும்.

நிலனாள்பவன் என்னும் இப்பொருட்சொல் நிலத்தைத் தன் வழிப்படச் செய்யும் நிலையினன் என்று குறிப்பது.

வேந்தன் என்னுஞ் சொல், 'அரசர் தலைவன்' என்னும் பொருளிலேயும் 'முடிமன்னன்' என்னும் பொருளிலேயும் பண்டு வழங்கியது. இவற்றையெல்லாம் விட்டுக் 'காவலன்' என்னுஞ் சொல்லைக் காண்போம்:

'காவல் குழவி கொள்பவரி னோம்புமதி'
'ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்'

'மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே'

'புலிபுறங் காக்குங் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப'

என்னும் புலவர் சொற்களிலே வருங் 'காவல்' என்னுஞ் சொல் 'தன் ஆட்சிக் குட்பட்ட மக்களுக்குக் காவலாவோன்' என்னும் பொருளையுடையது. இக்காவல் கோல் கொண்டும் வேல்கொண்டுஞ் செய்யப்படுவதென்பதும் பண்டை நூல்களாற் போதரும். கோலாவது கொல்லுதல். கொல்லுதல் என்பது ஒறுத்தல் என்னும் பொருளது. வேலாவது வெல்லுதல். தனக்குடைமையாகிய மக்களுள் அறவாழ்வு நிலைபெறக் குற்றஞ் செய்தாரை யொறுத்தல் கோல். தனக் கடங்காதோரை யடக்கி வெல்வது வேல். தன் ஆட்சிக்கடங்காதோர் தன் காவற் கீழ்ப்பட்டாரை நலிந்தால் வேல் பயன் கொள்ளப் பெறுவதாம்.

இந்தக் காவல் யாது?

மக்கட்கூட்டம் தனது இயல்பான கூட்டுவாழ்க்கையிலே உள்ளிருந்தும் தங்கூட்டத்தின் வெளியிருந்தும் வரும் வாழ்க்கையியல்புக்கு மாறான பகைகளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள முயல்கிறது. ஒவ்வொருவனுக்குந் தன்னைக் காத்துக்கொள்ளுந் திறம் இயல்பிலே யமைகிறது.

ஒவ்வொருவனும் தன்னைக் காத்துக்கொள்ளவுள்ள திறத்தை யாளும்போது பிறனொருவனுடைய காவல் சிதைகிறது. எல்லோரும் சிலவற்றைப் பெற விரும்புகின்றனர். ஒருவர் பெற அவற்றை மற்றொருவர் பெறமுடியாது போகிறது.

எனவே, தாம் அமைதியாகப் பசியுங் குளிரு மின்றி வாழவும் தம்மைத் தங்குழூவினரிடமிருந்தும் புறத்தாரிடமிருந்துங் காத்துக்கொள்ளவும் கூட்டம் முழுவதும் ஒரு பொதுமையான காவலுணர்ச்சியைக் கொள்கிறது. இப் பொதுமைக் காவலுணர்ச்சி பொதுவான சில கட்டுப்பாடுகளை யுண்டாக்கத் தூண்டுகிறது. நாளடைவில் இக் கட்டுப்பாடுகளைக் கொண்டு செலுத்துவோனொருவன் வேண்டப்படுகிறான். எனவே காவலனொருவன் தோன்றுகிறான். இவற்றைக் கொண்டு செலுத்த அவன் பூண்டு கொள்கிறான். அதற்கேற்ற ஏவலுங் கருவியும் மேற்கொள்கிறான். பிறர் அவனுக் கடங்கி நடக்கும் பான்மை பெறுகின்றனர். இவ்வாறாக முதன் முதலில் காவலுணர்ச்சியும் கட்டுப்பாடுகளும் கொண்டு செலுத்துவோரும் தோன்றுகின்றனர். பூண்டு கொண்டவாறு காவலைக் கொண்டு செலுத்த இயலாதவன் களையப் படுகிறான்; அத்தொழிலை வேறொருவனோ, ஒரு சிறு கூட்டமோ செய்கிறது. இவ்வாறு காவலை மேற்கொண்டவர் தாம்பெற்ற இடம் பொருளேவல்களால் வலிமை பெறுகின்றனர். காவற்றொழில் அவரது குடும்ப உடைமையாகி விடுகிறது. அவர் வழித்தோன்றல்கள் இயற்கையாகவே — அம்மக்கட் கூட்டத்தாருடைய ஆய்வின்றியே — காவலராகின்றனர்.

இவரே பின்னர் மன்னர், நிலனாள்பவர், வேந்தர் என்றெல்லாமாகி யிறுதியில் 'இறைவ' ருமாகின்றனர். எனவே 'அரசு' என்பதனைக் காவலன் தன் வலிமையினாற் பெறுகிறான். 'அரசு' என்றுள்ள பிறரை வென்று 'வேந்து' ஆகின்றான். அவன் தலை முடியை யெய்துகிறது. தான் மக்களுளொருவன் என்று கொள்ளப்படத்தக்கவனல்லன் என்பது காட்டவே முடியுங் குடையுமாகிய இச்சிறப்புக்கள் உண்டாகின்றன. தன்னைக் கடவுளொடு ஒப்ப மதிக்குங் கருத்தாலேயே 'இறை'ப் பட்டம் புனைந்துகொள்கிறான்; அல்லது அவனைக் கடவுளொடொப்பவோ கடவுளாகவோ எண்ணியோ பிறர் 'இறைவன்' என்று புனைகின்றனர். அரசு என்பதற்கு இங்கே கொள்ளப்படும் பொருள் 'காவல்' என்னும் இந்த முதற் சொற் பொருளே:

அப்பொருளாவது மக்கட் கூட்டத்தின் பொதுமைக் காவ லுணர்ச்சி.

அடுத்து 'இயல்' என்பதன் பொருள் யாதென்று கருது வோம்.

காவல் வேண்டிய மக்கட்கூட்டம் அவ்விருப்பத்தால் காவலனைப்பெற்றது. அக்காவலன் தன் காவற் றொழிலை நடாத்த— காவற் சாகாடுகைக்க— என்று கொண்ட இடம் பொருளேவல்கள் எவை? கோல் செலுத்தவும் வேல் செலுத்த வும் துணையாவாரைக் கூட்டிக் கொள்கிறான். பசி குளிர் முதலியவற்றினின்று காக்க நாட்டைப் பண்படுத்திக் கொள் கிறான். புறத்தார் தன்னை யெளிதிலழிக்க முடியாதபடி யரணை யமைத்துக் கொள்கிறான். தன்னைக் காவலனாகப் பெற்ற மக்கட் கூட்டத்தைத் தனக்காக்கமாகும் நிலையில் வைக்கிறான். அவர் பால் கடமை பெறுகின்றான், தன் காவல் நிலத்தின் அயல் நில மக்கட் கூட்டக் காவலரைத் தனக்கு நண்பராக்கிக் கொள் கிறான். இவற்றை யெல்லாங் குறிக்கவேண்டும் 'இயல்' என்பது என்று கொள்வோம்.

இனி மூன்றாவதான் 'அறிவு' என்னுஞ் சொற்பொருள் கருதுவோம்.

காவலுணர்ச்சி மக்கட் கூட்டத்திற் பிறந்து காவலனுண் டாகிறான். காவலனுண்டாகிக் காவற் றொழிலைச் செலுத்த ஆவன படைத்துக் கொள்கிறான். ஏன் இந்த நிலை யுண்டா யிற்று? ஏன் ஒருவன் ஆள்கிறான்? ஏன் பிறர் பணிகின்றனர்? ஆளலுங் காவலும் நிகழச் செய்கின்ற பணியாளருங் கருவி களும் எத்தகைய? இந்த நிலையில் மாறுபாடுகள் வேண்டுமா? இந்த நிலை பொருந்துமா? இந்த நிலையின் விரிவு யாதாம்? என்றெல்லாம் ஆய்ந்தறியும் அறிவே இங்கே குறிக்கப்படுவது.

மக்களுட்பலர் இவ்வாறு ஒவ்வொரு கணத்தெண்ணுவர். பின்னர் மறப்பர். ஒரு சிலரே இவற்றின் அடிப்படைகளைத் துருவியாயும் இயல்பு படைத்தோர். அவருள்ளும் ஒரு சிலரே தம் மாய்வின் பயனைப் பிறர்க்கு விளங்கச் செய்யும் ஆற்றலுடை யவர். அச்சிறு கூட்டத்தாருள் ஒருவரே வள்ளுவர்.

## II

அரசியலறிஞர் உலகில் மிகச் சிலர். வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் 'அரசியல்' பற்றி யாராயும் நிலையை யடைந்திருந்த நாடுகளே மிகச் சில. அவர் காலத்தும் அவர்க்கு முன்னும் இவ்வுலகில் வாழ்ந்தாராகக் கருதப்படும் அரசியலறிஞர் கிரேக்க நாட்டினராகிய ப்ளேட்டோவும் அரிஸ்ட்டாட்டிலும், வட நாட்டினராகிய சாணக்யருமே யாவர். நாகரிகம் ஓரளவு பெற்றிருந்த வேறு நாடுகளில் மனிதர்க்குக் கூறிய அறிவுரைகள், புகழுரைகள் முதலியனவே சிதறுண்டு கிடப்பனவாம்.

பிளேட்டோவும் அரிஸ்டாட்டிலும் வெளியிட்ட அரசியற் கருத்துக்களால் அவர் நாடு பயன் பெறவில்லை. அவர்தங் கருத்துக்கள் அவர்க்குப் பின்வந்த பல நாட்டுப் பல அறிஞர்களைப் பயன்கொள்ளச் செய்து நின்றன; நிற்கின்றன. அவர்கள் வாழ்ந்த காலம் கி. மு. ஐந்தாம் நான்காம் நூற்றுண்டுகள்.

அர்த்த சாஸ்த்திரம் என்ற நூலையியற்றிய சாணக்கியன் கி. மு. நான்காம் நூற்றுண்டினன். பேரரசன் சந்திரகுப்த மோரியனின் உடனிருந்தவன். தன் காலத்துக்குமுன் எழுதப் பட்டு அங்கங்கே சிதறிக் கிடந்த வடநூற் கருத்துக்களும், அவன் காலத்திலுண்டான அரசியல் மாற்றங்களும் அவனை அந்நூலாக்கச் செய்தன. • சந்திரகுப்தன் பெருவேந்தனுன அலெக்ஸாண்டரை நேரிற் கண்டவன். அலெக்ஸாண்டர் வென்றுகொண்ட பல பகுதிகளைத் திருப்பியவன். கிரேக்க தூதுவர்களைத் தன்னவையிற் கொண்டிருந்தவன். ஆகையால் கிரேக்கருடைய அரசியலறி வாராய்ச்சிப் பயனைச் சாணக்கியனும் பெற்றிருப்பானென்றே கொள்ளலாம்.

வள்ளுவர் காலம் கி. பி. முதல் நூற்றுண்டாகலாம் என்று இங்கே கொள்ளப்படுகிறது. அரசியலைப்பற்றி அரசியலறிஞர்கள் வெளியிடுங் கொள்கைகள் அவர்தம் கால அமைதியைப் பொறுத்தனவாகவே இருக்குமென்றும் அவர் கால நிலையறியாமல் அவர் கருத்துக்களை விளக்கமாக அறிதல் இயலாதென்றும் கூறுவார் அறிஞர் லாஸ்க்கி.

> **எவ்வ துறைவ துலக முலகத்தோ**
> **டவ்வ துறைவ தறிவு**

என்று கூறிய இவ்வரசியலறிஞரும் தங்காலத் தமிழகமாகிய தம் நாட்டின் நிலைமையை யுட்கொண்டே தம் கருத்துக்களை

மொழிகிருரென்றே நாம் கொள்ளவேண்டும். 'அறிவுடையா ராவ தறிவார்' என்ற அவ்வறிவுடையார் அக்கருத்துக்களுக்கு முற்றுருவந் தந்து முதிர்வித்துக் கூறுகிருரென்றுங் கொள்வோ மெனிற்றவறில்லை.

## III

வள்ளுவர் காலத் தமிழகத் தரசியல் நிலைகண்டு அதன் வழி வள்ளுவர் கருத்துக்களையறிய முயல்வோம். வள்ளுவர் கி. பி. முதல் நூற்ருண்டினராகலாம் என்று கொண்டோம். ஏன்?

திருக்குறளிற் காணப்படும் வாழ்வியல் அரசியல் நிலைகள் மூவேந்தரும் குறுநில மன்னரும் சிறப்புறக் காவல் நடாத்திய தமிழகத்தையே குறிப்பனவாம். ஆவதறிவாராகிய இவ்வறிஞர், தங்காலப் போக்குச் சில குறைகளையுடையதாயிற்றென் றெண்ணி, மக்களுங் காவலரும் அடிப்படைக் கொள்கைகளை யறியின் நன்றென்று இந்நூல் வகுத்தார் போலும். இத்தகு பெருமுயற்சிகள் ஞாலம் ஏங்கி நிற்கும்போது வேண்டப்படு கின்றன. அம்முயற்சிகள் வல்ல 'செயற்கரிய செய்வார்' அப்போது உருவாகின்றனர். இக்கருத்து இவர்க்கு முன்ன வராகக் குறிப்பிட்ட அரசியலறிஞர்க்கும் பொருந்துவதே.

தமிழ்நாட்டரசியலில் தளர்ச்சிகள் இவ்வறிஞர் கண்ணிற் படுகின்றன. 'எதிரதாகக் காக்குமறிவு' தூண்ட அரசியலடிப் படைகளை யையத்துக்கிடமின்றி வெளியிட முனைகிருர். ஆனல் தமிழகமும் இவர் கருத்துக்களாற் பெரும்பயன் கொள்ளவில்லை போலும். தளர்ச்சிகள் வலுத்துக் களப்பிரர் நாட்டில் நெட் டோட்டம் போட்டனர். அதன் பின்னர்ப் பல்லவர் என்ற புது மரபினர் பேரரசராகின்றனர். தமிழ் மூவேந்தர் தண் ணிழல் சுருங்குகிறது. அதனல் இவ்வறிஞர் வாழ்ந்த காலம் களப்பிரர் குழப்பத்துக்குமுன் அக்குழப்பத்துக் கடிப்படை யான தளர்வுக்குறிகள் தமிழக நிலையிற் காணப்பட்ட கால மாதல் வேண்டுமென்று கொள்வோம்.

ஒற்றையாளின் வாழ்க்கை மக்கட் கூட்டத்தின் வாழ்க்கை யிரண்டும் மோதியபோது, ஒற்றையாளினின்று அவர் கூடிய கூட்டம் வேறுபட்ட உணர்ச்சியதாயிற்று; பொதுமைக்காவ லுணர்ச்சியெய்தியது என்று குறித்தோம்.

இவ்வாறு தமிழகப் பரப்பில் அங்கங்கே சிதறுண்டு பல கூட்டங்கள் வாழ்ந்தன. அக்கூட்டங்களின் காவலருண்டாயினர். கூட்டம் பெருகப் பெருகக் 'காடு கெடுத்து நாடாக்கி' நிலமும் பெருக்கி அவ்வக் கூட்டத்தின் நிலவெல்லை பெருகுகிறது. எல்லை பெருக்கும் ஒரு கூட்டம் பிறிதொரு கூட்டத்தோடு மோதுகிறது. வாழ் நிலமும் மக்கட்டொகையும் பெருகப் பெருகப் புதிய புதிய சிக்கல்கள் தோன்றுகின்றன. ஒரு கூட்டமும் பிறிதொரு கூட்டமும் வரையறுத்த இயற்கை யெல்லைகளை யிழக்கின்றன; மோதுகின்றன; ஒன்றுபட்டு ஒரே கூட்டமாகின்றன. ஒரு கூட்டத்தின் காவலன் பிறிதொரு கூட்டத்தின் காவலனைவிடப் பெருங் காவலனாகிறான். காவலரையே பெற்றிராத கூட்டங்கள் இவனைக் காவலராய்ப் பெறுகின்றன. மக்கள் பிற கூட்டங்களுடன் தொடர்பு கொண்டு புதியன காண்கின்றனர்; புதியன காட்டுகின்றனர்.

இடையறாத இவ்வாழ்வியல் முயற்சியின் மோதுதல்கள் கலத்தல்களிவற்றால் தமிழ் நிலப்பரப்பிற்பெரும்பகுதி யியற்கை யெல்லைகளால் வரையறை பெற்று மூவேந்தராட்சிக்குள் வருகிறது. அப்போதும் மூலை முடுக்குகளிலும் மலைகளிலும் காடுகளிலும் நல்ல கூட்டவுணர்ச்சியோடும் விரும்பிய காவலர்ப் பெற்றும் வாழ்ந்த சில கூட்டங்கள், இம் மூவேந்தராட்சியுட் படாமல் தம்மியல் சிதைவின்றி வாழ்கின்றன. அக்கூட்டத் தலைவர் வழிவழி வந்த காவல் மரபினர். தம் மக்களைத் தம் கோல்வலி, வேல்வலியால் தம்பாற் பிணித்துக் கொண்டவர். மூவேந்தரினுள் சிறப்பாகத் தங் காவலை நடத்துகின்றனர். தம் 'செல்விடங்' களில் இருந்தமையால் அச் 'சிறுபடையாரை' வேந்தரும் அவர் போக்கில் விட்டனர்.

தமிழ்மொழி, தமிழக முழுமையுந் தன் திகிரியுருட்டியாட்சி செலுத்தியது; எவ்வாட்சியுட்பட்டாலும் தமிழகத்தில் எங்குஞ் செல்லும் நிலையிருந்தது. 'தமக்கென முயலா நோன்றாட், பிறர்க்கென முயலுநர்' ஆய புலவோர் பலர் நாட்டின் எல்லா இடங்கட்கும் சென்று காவலர்க்குத் தம் அறிவுரை வழங்கினர். தமிழகம் பலராலாளப்பட்டாலும் அப்பலரையும் 'வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தி, யுள்ளியது முடிக்கு முரனுடை யுள்ளத்து, வரிசைக்கு வருந்தும்' பரிசில் வாழ்க்கையினராகிய கூட்டம் தம்மாட்சியில் ஆண்டு வந்தது என்று கூறினுந் தவறில்லை.

மக்கள் தம் முயற்சியளவுக்கேற்பப் பொருளீட்டினர். அப்பொருள் ஈட்டிய அவரவர்க்குரியதாயிற்று. ஈட்டியாரின் பின்னர் அவர் வழியினரதாயிற்று. தனிச் சொத்துரிமையென்பது முறைமையாக இருந்தது. காவலன் தன் குடிகளிடமிருந்து கடமை பெறுகிறன். அயல் நாடுகளிற் போர் செய்து திறை பெறுகிறன் அல்லது கொள்ளை கொள்கிறன். காவலும் வழிவழிச் சொத்தேயாகிறது. பொருளியல் வாழ்வில் தன் பொருள் பெருக்குவதும் தன் குடிகளின் சொத்துரிமையைக் காத்தலும் அவன் கடமைகளாக ஆகி நின்றன்.

எனவே சிறு சிறு கூட்டங்கள் கலந்து பெருங் கூட்டமாயின. ஒருவன் காவலுக்குட்பட்ட பெருங் கூட்டத்தின் நில வெல்லை ஒரு நாடு எனப்பட்டது. அந்நாட்டு மக்கள் அக்காவலன் மக்கள்; அந்நாடு அவனது நாடு; பாண்டி குலத்தவனது நாடு பாண்டிநாடு; அந்நாட்டு மக்கள் பாண்டி மக்கள்; அவன் பாண்டியன் என்பது போல. பசி குளிராலலைந்து நீக்க முனைந்து மோதுதல் விளைத்த மக்கள் அமைதியான முயற்சிகளால் பொருளீட்டிக் காத்தனர். காவலன் தன் தொழிலுக்கமைந்த அறிவுடையாரும் படைஞருமாகியோரையும் பொருளையும் அரணையும் பெற்று அசைக்கமுடியாத நிலையையடைந்தான்.

வல்லரசர் சிலர் தமிழக வரைப்பைக் கடந்து வடக்கண்ணுஞ் சென்று ஏற்று நடை நடந்தனர். கடல் கடந்து ஈழமுங் கண்டு மீண்டனர் போலும். அக்காலத்திலிருந்த போக்குவரவு நிலையை யெண்ணின் அப்பேரரசரும் பிற மொழி வரைப்புக்களைத் தம்மாட்சியில் நிலைபெறற் செய்யாமையியல்பானதொன்றே என்பது புலப்படும். இவர் திறலும் நாட்டு வளமுங் கருதி வடபுலத்தாரும் தெற்கே கண் வைத்தனர். ஆனல் தமிழ்நாட்டைப் படை வலியாலொருவரும் தாழ்த்தித் தம்மாட்சியுட் கொண்டிலர். அசோகன் ஆட்சிக் காலத்தில் தமிழ் மூவேந்தர் சிறப்புற்றுப் பிறர்க்குத் தாழாது வாழ்ந்தனர். களப்பிரர் காலம் வரை அவர் அடி பணியவில்லை.

தமிழ் மக்கள் கடவுளொருவனுண்டென்றும் மறு பிறப்புண்டென்றும், ஊழ் தன் பயனூட்டுகின்றதென்றும், அறஞ் செய்தோர் மறுமையிற் சிறப்புறுவரென்றும் நம்பி வந்தனர். இந்த நம்பிக்கை இவர்தம் உள்ளத்தை வாழ்வியற் செலவில் கட்டுப்படுத்தியுய்த்தன. வள்ளுவர் நூலெழுதிய காலத்தில்

இவர்கள் தொலையவும் நணியவுமான பலநாட்டு மக்களொடு பழகும் வாய்ப்பும் பெற்றனர். யவனர் தேறல் தந்தனர். மிலேச்சர் அரசர்க்கு மெய்க்காப்பாளராயினர். பிறநாட்டுத் தச்சர் முதலிய தொழில் வல்லுநர் தமிழ்நாட்டுப் பேரூர்களிலே வாழ்ந்தனர். இரேக்க ரோம நாட்டினர் வாணிகங் கருதி வந்து சென்று கொண்டிருந்தனர். வடநாட்டைத் தமிழ் நாட்டினர் நன்கறிந்திருந்தனர். பாடலிபுத்திரம், வாரணவாசி, கங்கை, இமயம் இவை அவர்களால் நன்கறியப் பட்டன. வடுகரை அடிக்கடி கலந்து கொண்டனர். மோரிய வரசு மைசூர் வரை பரவி இவர் தம் எல்லைக்கண் ஆட்சி செலுத்தியது. அசோகன் உய்த்த மதம் பரப்புநர் நம் நாட்டில் புத்தக் கொள்கைகளை வித்திநர். ஜைனரும் தம் பணி செய்தனர். வைதிகர் தமி ழரசரை வேள்வி புரிவித்தனர். நாகரிகம் படைத்தமேலை நாடு களிலும் அக்காலத்து முடியாதென்று கருதப்பட்ட பேரரசு பரப்பிய வடநாட்டிலுந் தோன்றிய பல கருத்துக்களை அவர்க ளறிந்தனர்.

சுருங்கக் கூறின் அக்கால நாகரிக உலகொடு தமிழ்நாடு அரசியல், வாணிகம், வாழ்வியல்களில் தொடர்புகொண்டு, கொண்டுங் கொடுத்தும் அமைதியாக உச்சநிலையில் வாழ்ந்தது. அஃகியகன்ற வறிவுடைய விவ்வறிஞர் வள்ளுவர் தம் அறி வெல்லையுள் நாகரிக உலகின் கருத்துக்களனைத்தையும் அடக்கி நின்றார். தமிழ்நாட்டின் வாழ்வியலை நன்கறிந் துளங் கொண்டார். 'மதிநுட்பம் நூலோடுடைய' இவர் தமிழுலகு புகழ்பெற மண்ணுலகு பயன்பெறத் தம் நூலை யாத்தார்.

## IV

ஒற்றையாளைக் காதலன், அரசியல் மனிதன், வாழ்க்கைப் போராளன் என்றெல்லாம் பிரித்துக் கூறலுண்டு. ஒவ்வொரு வனும் எல்லாங் கலந்து ஒருவனே தவிர ஒவ்வொரு துறைக் கெனப் பிளவுபட்டு நிற்போனல்லன். மக்கள் வாழ்வு ஒரு முழுதுறழ் பெருஞ்செயல்.

இதனையறிந்த இப்பெரியார் மக்கள் வாழ்க்கை முழுவதை யுங் கூறும் பெருநூல் யாத்தார், தனியாக அறவாழ்வு, காதல் வாழ்வு, பொருள் வாழ்வு என்று பிரிவு கொண்டிலர். அதனல் தான் இந்நூல் முப்பால் எனப் படுவதாயிற்று. முப்பாலாவது

மூன்று பிரிவு. மூன்று பிரிவுங் கலந்ததே முழு நூல். ஒவ்வொரு பிரிவைத் தனியே எடுத்துக் கொண்டாய்தல் இந்நூலமைப்புக்குத் தகுவதொன்றன்று.

முன்னர்க் குறித்தோம், கூட்டப் போர்கள் ஓய்ந்து நிலவளம் பெருகி மக்கட்டொகை பெருகி ஆட்சியெல்லைகளாகப் பிரிந்து நாகரிக வுலகொடு தொடர்பு பூண்டு நின்றது தமிழ் நாடு என்று. அமைதியும் வளமும் மக்களை முயற்சி சுருங்கியாராகவும் காவலர்களைக் காவலில் மடியுடையோராகவும் ஆக்குவது உலகெங்கணும் இயல்பே. வடவராட்சி தமிழெல்லைவரை பரவித் தலைமேல் நின்றது. அவரைப் பகைத்து முதுகிட்டோர் தமிழ்நாட்டில் பரவிக்கொண்டிருந்தனர். தமிழ்நாட்டு வேந்துருள் ஒற்றுமை வளர்ந்திலது. குறுநில மன்னர் தங்குழுக்களோடு தனிவாழ்வு நடத்தினர். பிறபுல மதக் கொள்கைகள் மன்னரை யாட்டத் தொடங்கின.

வள்ளுவருள்ளத்தில் தமிழ் நாட்டோருக்கு வாழ்வியற் பாடக்குறிப்புகளை நினைவுபடுத்த வேண்டுமென்று பட்டது. நாக்கடிப்பாக வாய்ப்பறை யறைந்திருப்பார். எழுத்தாணி கருவியாக முப்பால் என்னும் வெற்றித் தூணில் குறள்களைப் பொறித்தார். ஓரளவாவது அவை மக்களுள்ளத்தில் பதிந்தமையால்தான் தமிழ்நாடு இன்றும் பெருமையுடையதாகிறது. தமிழுலகைப் புகழ் போர்த்த இந் நூலில் அரசியற்பால் என்றொரு பிரிவு கிடையாது. பொருட்பால் என்றொரு பிரிவுதான் உண்டு. ஏன்? மக்கள் வாழ்க்கையிற் பெறற்குரிய அரும் பயன்கள் அறம் பொருளின்பங்களே.

அறவாழ்வின்றெனிற் பொருள் வாழ்வு அமையாது. அறமும் பொருளும் அமையாது பெறக்கடவதாகிய அக வாழ்க்கை – காதல் வாழ்க்கை – இன்ப வாழ்க்கை, விலங்கின்ப வாழ்க்கையே யாம். தனிச் சொத்துரிமை இந்நாட்டு வாழ் முறை யென்பது முன்னரே குறிக்கப்பட்டது. பொருள் அறவழியிலேதான் ஈட்டப்பட வேண்டுமாதலின் அறம் முன்னர்க் கூறப்பட்டது.

பொருட்பாலின் முதலில் இறைமாட்சி முதல் எழுபததிகாரங்களால் அரசும், அரசியலும், அதன் பயனுயுறும் பெருமை

மிக்க குடிமக்கள் வாழ்வும் பேசப்படுகின்றன. எனின், அறத்துப் பாலிற் கூறப்பெறும் வாழ்க்கைக்கு அரசும், அரசியலும் வேண்டப்படாவா?

'கற்றேன்றி மண்டோன்ருக் காலத்தே' மக்கள் தோன்றி வளர்ந்த இத்தமிழகத்தில் தோன்றி வளர்ந்து கிடந்த வாழ்வியலையே நுனித்தறிந்து விளங்கவுரைக்கிருர் வள்ளுவர். உருப்பெருதுழலும் பெருங் கருத்துக்களுக்கு முதிர்வு தந்து முற்றுவித்துக் காட்டுகிருர்.

அறம் இன்னதென்பது மக்கள் தாமே யமைத்துக்கொண்ட வரையறையே. வழிவழியாக வாழ்க்கைப் போரிற் பண்பட்டுக் கைவந்த அறக் கொள்கைகள் தமிழ் மக்களது பொதுவுடமையாக நின்றன. அவற்றை மக்கள் மனத்தில் மங்காது விளங்கச் செய்வது அரசியலன்று. அறத்தின் அடிப்படையுமரசியலன்று. ஒவ்வுமறம் இன்னதெனச் செவ்வையுறச் செப்புவதுமரசியலன்று. அறவாழ்க்கையினடிப்படை இறையருளாம். அறம் மறவாது மக்கள் மனத்தில் நிலைபெறச் செய்வோர் துறந்தார். அறங்களை விளங்கச் செப்பிப் பதிப்போரும் துறந்தாரே.

இவ்வறங்களை யின்னவின்னவென நன்கறிந்த அறிஞர் பலர் நாட்டிலிருந்தனர். 'உலகத்தாருண்டென்பதில்' லென்று கூறிக் கயமையாலும் பேதைமையாலும் அறத்தின் வழுவிப் பிறர் வாழ்வைச் சிதைப்போரை யொறுத்தல் அரசின் கடன். அறமறிந்த அறிஞரை யரசு அறங் கூறவைய வினைஞராகக் கொள்ளுகிறது. இவ்வளவே அரசின் கடன் அறவியலில். அதனுல் அரசுக் கறவாழ்வில் அறவே பங்கில்லையெனல் ஒவ்வாது.

பொருள் வாழ்வுக்குக் காவல் மிகவும் வேண்டப்படுவது. அக்காவலும் தக்க காவலரால் தக்காரைக்கொண்டு தகு முறையில் நடத்தப்படவேண்டும். ஆயினும், பொருள் வாழ்வில் அறத்துக்குப் பங்கில்லாமலில்லை. அறமேயரசனையும் ஆட்டுவது; அவனைச் சூழ்வாரையும் ஆட்டுவது. அறமின்றி வந்த பொருள் பொருளாகாதென்ருர் வள்ளுவர். எனவே அறமும் பொருளும் நெருங்கிய தொடர்புடையன.

'சிறப்புடை மரபிற் பொருளு மின்பமுமறத்து வழிப்படூஉம்' ஆதலின் இன்ப வாழ்வும் அறத்து வழிப்பட்டே நிற்கும்.

அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்

ஆதலினாலும் 'பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை' யாதலி ஞலும் பொருள் மக்கள் வாழ்வியலிலாராயப்படும் பெரும் பொருளாயிற்று. வள்ளுவரும் அறப்பால் இன்பத்துப்பால் இரண்டனையும்விடப் பெரிதாகத்தம் பொருட்பாலையமைத்தார். அறவுலகும் பொருளுலகும் அழகுற இணைக்கப்பட்டுள்ளன வள்ளுவர் வாய்மொழியில்.

அறவுலகில் இறைவன் தான் உலகுக்கு முதலாக நின்று மழையென்னுந் தன் அருட்டன்மையால் மக்களை யறவழி நிறுத் தும் நிலையைப் படைக்கிறன். பொருளுலகில் காவலன் தான் முதலாக நின்று கோலின் செம்மையால் மக்களைப் பொருள்வழி முயலும் நிலையினராக்குகிறன்.

அறங்களை யின்னவென விளக்கி நெறி காட்டுகின்றனர் துறந்தார். பொருள் வகையின்னவென் விளக்கி நெறி காட்டு கின்றனர் காவலன் சூழ்வார். இக்கருத்துக்கள் வள்ளுவருள் ளத்தன என ஐயுறல் நேர்கிறதா?

அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடி சேரா தார்.

வாழ்க்கைப் பெருங்கடலில்

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

தானந்தவ மிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.

வானின்றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

துறந்தார் பெருமை - சூழ்வார் கண்ணுக வொழுகல் - அறன்வலியுறுத்தல் - செங்கோன்மை வலியுறுத்தல் இவற்றை ஒருங்கியைத்து நோக்குவார்க்கு அவ்வையுறல் நேராதென்றே கருதப்படுகிறது.

அவ்வாறே அறவாழ்வின் முடிந்த பயன் புகழ்; பொருள் வாழ்வின் முடிந்த பயனும், குடிமையும் நாணுடைமையும் மானமும் சான்ருண்மையுமுடையராக மக்களையாக்கும் புகழ்மையே. அறவாழ்விற் பங்குகொண்டு புகழ்ப்பயனெய்தியோர் துறவுபூண்டு மெய்யுணர்கின்றனர். பொருள் வாழ்வில் நற்காவலிலுயர்ந்த மக்கள் இந் நற்பண்புடையராகி உலகு நிலை பெற வாழ்கின்றனர். அறவாழ்வும் பொருள் வாழ்வும் ஒன்றையொன்று பின்னிக் கிடப்பனவே.

இம்முழுதுறழ் வாழ்வியலில் இன்பத்துப்பால் எவ்வாறியைகிறது? அறம் அதன் அடிப்படையன்றேல் களவு களவாகவே நின்றுவிடும். கற்பாக மலராது. பொருள் அதன் அடிப்படையன்றேல் அஃது இன்பவாழ்வேயாகாது. இன்ப வாழ்விலீடுபடும் தலைவன் தலைவியரே அறவாழ்விலீடுபடும் குடும்பங்களையுண்டாக்குகின்றனர். ஒருவரொருவர்க்குடைந்து குழைந்த அந்த வாழ்வே காவலன் குடிகள் என விணைந்து வாழவும் வழி பாவுகின்றது.

இவ்வாறு முப்பால் வாழ்வும் ஒன்றிலொன்று பிணைந்துறும் முழுப்பால் வாழ்வே வள்ளுவர் நூல்காட்டும் வாழ்வாம்.

V

அறவாழ்வைக் குறைகடிந்து முறைநிறுத்திப் பொருள் வாழ்வைப் பொருளுடையதாக்கி மக்களை மண்ணுலகு வாழச்

செய்வோராக்குகின்ற அரசியல் வள்ளுவரால் பொருட்பாலிற் கூறப்படுகிறது.

அரசியலின் முதலது காவல். காவல் செய்வோன் காவலன். அவன் தன் ஹெழிலுக்கேற்ற 'படைகுடி கூழமைச்சு நட்பர ணுறும் உடையானுதல்' வேண்டும். தன்னையாளும் பான்மை யுடைய 'அறனிழுக்கா தல்லவைநீக்கி மறனிழுக்கா மான முடைய' னுதல் வேண்டும். பொருளை 'இயற்றலு மீட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலு வல்ல' னுதல் வேண்டும். 'முறை செய்து காப்பாற்று மன்னவ' னுதல் வேண்டும். தன்னையற னிழுக்காது நிறுத்தப் பெரியோர்தம் 'செவிகைப்பச் சொற் பொறுக்கும் பண்பு' டைய னுதல் வேண்டும்.

இத்தகு நன்மாட்சிகள் நிறைந்தோனுக அவன் கல்வி, கேள்வி, அறிவுடைமை, குற்றங்கடிதல், பெரியார்துணை, சிற்றினஞ் சேராமை, செயத் தக்க தெரிந்து செயல்வகை, தனக்குச் சூழ்ச்சித் துணையாவோரைத்தெரிந்து தெளிதற்றிறம், தெளிந்தாரை வினையாடுந் தெரிவு, பொச்சாவாமை, செங் கோன்மை, ஒற்ருளுந் திறன், ஊக்கமுடைமை, மடியின்மை, முயற்சியுடைமை, இடுக்கணழியாமை முதலிய பண்புகளை யுடையனுதல் வேண்டும்.

வள்ளுவர் தம்பொருட்பாலிலே காவலர்க்கென்றுமட்டு மன்றிப் பொருளியல் வாழ்க்கையில் மக்களறியவேண்டிய பலர்க்கும் பொதுவான கருத்துக்களைப் பல்லிடத்தும் மொழி கின்ருர். காவலர்க்கென்றே சிறப்பாக அமைந்த பாடங்களைக் கூறுமிடங்களில் அவரைக்குறிக்குஞ்சொல்லொன்றைப்பெய்தே யுரைக்கிருர். இதனை வள்ளுவர் நூலைப் பயில்வோர் எளிதிற் காணலாம்.

'மருத்துவனே உன்னை முதலில் உடல்நலமுடையவனுக்கிக் கொள்' என்பது போல மக்கள் வாழ்கையைத் திருத்திச் சான்ருளராக ஆக்கும்பணியில் நின்ற காவலன் தன்னைத் தூயோனுகச் சான்ருளனுக முதலில் ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதனை மிகவும் வலியுறுத்திக் கூறுகிருர்.

பெரியாரைத் துணைகொள்ள வேண்டும் என்று கூறு மிடத்துக் குறிக்கப்படும் பெரியார் அமைச்சர், தூதர், ஒற்றர், படைஞர், ஊராண்மையார் முதலியோரன்றி அவன் பண்புகளை

விரும்பி அவன்வழி யுலகுக்கு நன்மைதரப் 'பிறர்க்கெனமுய லும்' பெரியார் கூறப்படுகின்றனரென்று கொள்ளவேண்டும். அவன் பண்புக் குறையினனெனினும் அக்குறையை நீக்க அத்தகு பெரியார் அவனைச் சூழ்வர். அவர்களை மதிக்குமறிவு பெற்றோனாயின் திருந்துவன். திருத்தமுடியாதவனென்று கண்டால் விலகுவர். அவன் சிற்றினத்தைச் சுற்றமாக் கொள்வான்.

தான் செய்யுஞ் செயல்களைத் 'தெரிந்தவினத்தொடு' தேர்ந் தெண்ணித் தெளிவுபெற்றே தொடங்குவன். அவன் செயல்கள் அவனது நாட்டையே தாழ்த்தவும் உயர்த்தவும் வல்லனவாகை யால், எண்ணித் துணிந்து ஆற்றின் வருந்தி எள்ளாத வாய்ந்து செயல் வேண்டுவது நினைவு படுத்த வேண்டிய பாடமாயிற்று. துணிந்த கருமம் முடித்தற்கேற்ற வலி, காலம், இடமிவற்றை யாய்ந்தறியவேண்டும்.

கல்வியுங் கேள்வியும் வழிவழிப்பட்ட நுண்ணறிவும் பட்டாங்கறிந்த உலகநடையு மறிந்தவனாயினும் இவ்வெல்லா வற்றையும் ஒருவனே செய்தல் இயலுமா? தன்னையடுத்துப் பக்கத்திலிருந்து கடமை பெறுதல், நாட்டில் நடப்பன, நாட்டார் நினைப்பனவறிதல், படை நடத்தல், நட்பும் பகையுமுடையோர் பால் தூது செல்லல், நாட்டு வளம் பெருக்கல் முதலிய பல வற்றிற்கும் பண்பட்ட கருத்துக்களையாய்ந்து தருவோரைத் தேர்ந்து தெளிதல் வேண்டும்.

பலவகைக் கடுந்தேர்ச்சிகள் இங்கே கூறப்படுகின்றன. காதன்மை கந்தாக அறிவறியார்த் தேறுதல் தேறியானுக்குப் பேதைமை தருமென்றும் தேராது தெளிந்தவன் தன் வழிமுறைக் கும் இடும்பையை யிழைப்பானென்றும், தெளிந்தபின் அவர் கூறும் பொருள்களை ஐயுறலாகாதென்றும் வள்ளுவர் கூறுகிறார்.

அவ்வாறு தனக்கு அறைபோகா துடனிற்பாரைத் தெரிந்த பின் அவரவர்க்குத் தக்க வினைகளிலே ஆளவேண்டும். 'வினைவகையான் வேறாகு மாந்தர் பலர்' என்றுட்கொண்டு அவர் செயல்களை யொற்றரா லாய்ந்துவர வேண்டும்.

> வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
> யதற்குரிய னாகச் செயல்

என்னுங் குறளில் அவர் வினையாற்றலுக் கேற்ற பொறுப் பினராக்கப்பட வேண்டுமென்பதும் அவர் வினையாற்றலில்

இடையிடையே தடையாற்றல் கூடாதென்பதும் கூறப்படு கிறது. இறுதியாக

**நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்**
**கோடாமை கோடா துலகு**

என்று வினைசெய்வாரை நாடும் இன்றியமையாமையை விளக்கு கிறுர்.

ஒருவன் அரசுபெற அக்குடியிற்றோன்றிய பலர் அரசுரிமை பெருது இருப்பாராவர். அவர்களை யென்றுந் தழுவிக் கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் அறிவுரைக்கிறுர்.

பின்னர்ச் செங்கோன்மை யியல்பு செவ்வன் விளக்குகிறுர்.

**ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை**

**குடிதழீஇக் கோலாச்சு மாநில மன்னன்**
**அடிதழீஇ நிற்கு முலகு**

**வேலன்று வென்றி தருவது மன்னவன்**
**கோலதூஉங் கோடா தெனின்**

என்று புகட்டி, இவ்வாறு கோலோச்சுழிக்

**குடிபுறங் காத்தோம்பிக் குற்றங்கடிதல்**
**வடுவன்று வேந்தன் தொழில்**

**கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களைகட் டதனொடு நேர்**

என்று அவன் ஒறுத்தல் ஒப்பினைச் செப்புகிறுர். செங் கோன்மையை வற்புறுத்த ஆசிரியர் கூறும் 'கொடுங்கோன்மை' யதிகாரம் முழுவதும் படித்து நினைவிலழுத்தத் தக்கது. குடிகள்மாட் டளவறிந்திறைபெறல், நாடொறு நாடி முறை செய்தல், மக்களல்லற் பட்டுக் கண்ணீர் விடாதபடி பார்த்தல் முதலியன வற்புறுத்தப் படுகின்றன. 'வெருவந்த செய்யாமை' யும் நெறிபிறழாது ஒறுத்தல், மக்கள்பால் இன்னுச்சொல் லுருமை, இன்மொழியும் அளவுபட்ட தண்டமும் உடைமை, இனத்தாற்றி யெண்ணுதல், கல்லாரைத் தன்னவராகக் கொள்ளாமை முதலிய கோன்மை நெறியுரைப்பதே.

மன்னன் நாடொறும் நாடி. வினைசெய்வார் நேர்மையுடைய ராம் நிலையில் வைக்கவும் நாடொறு நாடி முறை செய்யவும் குடிகள் 'இன்னுச்சொல்' அறியவும் 'ஒற்றுடல்' கொள்ள வேண்டும். ஒற்று மன்னனுக்குப் புறத்தே நிகழ்வனவெல்லாந் தெளியக் காட்டுங் கண் (நூல் அறம் பிறழாது காவலாற்றக் காட்டுங்கண்.) தனது நாட்டிலும் நட்பு பகை நொதுமல் நாடுகளிலும் 'எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை' ஒற்றினுல் வல்லறிதல் வேந்தன் தொழில்.

> வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
> கனைவரையு மாராய்வ தொற்று

ஒற்றுதலில் வல்லாரை யொற்றராகக் கொள்ளவேண்டும். ஓரொற்றன் தந்த பொருளைப் பிறிதோரொற்றனுல் ஒப்புப் பார்த்துக் கொள்ள வேண்டும்; ஒற்றர் ஒருவரையொருவர் அறியாது ஒன்றையறிய உய்க்கப்படவேண்டும். மூவர் சொல் தொக்கன தேறப்பட வேண்டும். ஒற்றரின்னுரென்று பிறரறிதல் கூடாதாதலின் ஒற்றர்க்குச் சிறப்புச் செய்யுங்காலும் பிறரறியச் செய்தல் கூடாது. இவ்வொற்றரே ஒற்றையாளாகிய காவலன் பெறும் பெருநிலைக்குக் காரணமாகலாம். 'இவர் அரசன் கண்' எனல் மிகவும் பொருந்துவதே. தன் செயல்களிலே எக்காரணங் கொண்டும் ஒருகணமும் மறதி கொள்ளுதல் கூடாதென்றும், விழிப்புடன் எக்கணமும் நினைவுகூர வேண்டுமென்றும், மகிழ்ச்சி முதலிய காரணங்களால் மறதிவாய்ப் படும்போது அவ்வாறு செய்து 'இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக' என்று சரித்திரங் காணவும் சொல்கிருர்.

அதன்பின்னர் ஊக்கமுடைமை, மடியின்மை, ஆள்வினையுடைமை யிவற்றைக் காவலன் பண்புகளாகப் பெற வேண்டுதலை வற்புறுத்துகிருர். அதன்பின்னர்ப் பல்லாற்ருனுந் தெளிந்து தேறப்பட்ட அமைச்சர் பண்பும் செயலும் கூறப்படுகின்றன. காவலனுக்குக் கூறப்பட்ட எல்லாவற்றையுங் கடைபோக நடத்தத் துணைசெய்வாரே யிவர்கள் என்பது இப்பகுதியிற் பொதுவாக அறியப் பெறும்.

> பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
> ரெழுபது கோடி யுறும்

என்ற குறளில் அரசன் எத்துணை விழிப்பாக அவரைத் தேர்ந்து வினையாடவேண்டுமென்பது மற்றும் வலியுறுக்கப் படுகிறது.

'தூது' செல்வோரும் அமைச்சருட்பட்டாரே. இக்காலத்துப் போலப் பிற நாடுகளில் ஒரு நாட்டுத் தூதுவர் தங்கி அவ்வரசொடு தொடர்பு கொள்ளும் நிலை யக்காலத் திருந்திலதிங்கு. வேண்டியபோது தூதுவிடுத்தலே மரபாயிருந்தது.

அந்நாள், மன்னன் 'எல்லாந்தானே' யென்றநிலையினனன்றே? அவன்பாற் சேர்ந்தொழுகுவார் மிகவும் அவனது அகச்செவ்வி புறச்செவ்விகளை யறிந்தோராதல் வேண்டுமென்பது கூறுகிறூர். கொள்ளப்பட்டேமென்றும் பழையமென்றுங் கருதித் தம் வரையிறவாமை முதலியன அவனைச் சேர்ந்தொழுகுவோர் உளங்கொளத்தக்கன. அவர் முகமுங் கண்ணும் முதலாகிய உறுப்புக்களைக் கொண்டே குறிப்பறிதல் வல்லராதல் வேண்டும். அவையறிதல், அவையஞ்சாமை யிப்பண்புகளை யுடையோ ராதல் வேண்டும். அமைச்சர் குழுவினரைப்பற்றிக் குறித்த பின் நாடு, அரண், படை, நட்பிவற்றைப் பற்றிக் கூறுகிறூர்.

காவலன் தனது நாட்டை யென்நிலையிலிருப்பதாக ஆக்க வேண்டுமென்னுங் குறிக்கோள் தெளிவாகப் பொறிக்கப் படுகிறது.

> **பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்**
> **கிறையொருங்கு நேர்வது நாடு**
>
> **உறுபசியும் ஓவாப்பிணியுஞ் செறுபகையும்**
> **சேரா தியல்வது நாடு**
>
> **பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம**
> **மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து**

என்று குறிக்கோள் நாடு குறிக்கப் படுகிறது. அக்காலப் போர் நிலைக்கமைவுடைய தாக்கற்கும் தடுப்புக்கு மேற்ற அரணின் நிலை கூறுகிறூர். இவற்றையெல்லா முளவாக்கப் பொருள் வேண்டுமே? அதனைச் செய்யும் வகை யறிவிக்கிறூர். தீதின்றி வந்த பொருள், அருளொடும் அன்பொடும் புல்லிய பொருள் இவையே அரசன் ஆக்கத்தக்க பொருளாம்.

அடுத்துப் படையுடைமையைச் சிறப்பிக்கிறூர். அறை போகாதவழிவந்த வன்கணதுவாகிய உறுப்பமைந்த,

நிலமக்கள் சாலவுடைத்தெனினும் தானை
தலைமக்க ளில்வழி யில்

லென்று பகர்கிறார். அந்நாள் நிலைப்படை மறவர்தம் மறமும் அது பேராண்மையாற் கொள்ளும் மறமரபும் அப்படையினர் 'சுழலுமிசை வேண்டி வேண்டாவுயிரார்' என்றும், இறைவன் செறினுஞ் சீர்குன்றுதலின்றிப்

புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பின் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து

என்னும் நெஞ்சினரென்றுங் கூறுகிறார். பிறகு நட்பும் பகையும் பலவாறு விரித்துப் பேசப்படுகின்றன. இவற்றை யினி யிந்நாள் நிலையினின்று பலவாற்றான் நோக்குவோம்.

## VI

வள்ளுவர் வாழ்வியற் பெருநூலில் 'அரசியல்' கண்டோம். அவ்வரசியல் அரசனையே யடிப்படைக் கல்லாகக் கொண்டது. அரசனே 'தான்றோன்றி' போலக் காட்டப்படுகிறான். மக்கள் வாழ்வு மண்ணிலே எவ்வாறு மறுகிச் சுழன்றது? மக்கட் குழவிகள்-முன்னோர்-வாழ்வு நடை எவ்வாறு குறுகுறு நடந்து பயின்றனர்? ஏன் அரசனுண்டாயினான்? என்பனபற்றி யவர் பேசவேயில்லை. 'அரசன் ஒருவனுளன்; அவன் மாட்சிகள் இவை' என்று பொத்தென்று வானிலிருந்து விழுந்ததுபோலத் தொடங்கிப் பேசுகிறார் என்றோராசிரியர் கூறியுள்ளார். வள்ளுவர் அரசியலறிவுக்கிஃதொரு குறையாமா?

தமிழ்நாடு தாங் கூறுவதை யறிந்துகொள்ளுந் தகுதியான அறிவு நிலையும் நாகரிகமும் அடைந்திருந்ததனால் இக்குழவிக் கதைகளை விட்டு வாழ்க்கைப் பாடங்களை நினைவுபடுத்தவே பூண்டாரென்று நாம் கருதுவோம். அது மட்டுமன்றி இவ் வறிஞர் கால நிலையிலேயே 'அரசன் ஒருவனிருந்தான்' என்று கூறுவதற்கு ஒரு பெரிய அடிப்படை கூறவேண்டாத நிலையிருந்ததாயின் அவர் அதனை ஏன் கூறுவார்? அவர் கருத்துக்களை யாழ்ந்து நோக்க முயலாது 'அவர் அதனைக் கூறிலர்; இதனைக் கூறிலர்' என்று தங்கால நிலை யல்லது தாமறிந்த வேறெங்கோ அக்காலத்திருந்த நிலையைக் கொண்டு அவரை எடைபோட முயலல் பயனில் செயலேயாம்.

ஆழ்ந்து நோக்கின் அரசனைத் தோற்றுவித்த சமூக நிலை அங்கங்கே தோன்றாமலில்லை வள்ளுவர் நூலில். குடும்பம்,

பொருளுரிமை, அமைதியான பல தொழில் நடப்பு முதலியன அங்கங்கே தோற்றமளிக்கின்றன. குடும்பத்தொடு இல்வாழ்வில் உழவு முதலிய பல தொழில் செய்து பொருளீட்டி வாழ்கின்ற கூட்டத்தைக் காண்கிறோம். இச்சமூக நிலையில் 'தீவினை யென்னுஞ் செருக்கு' அஞ்சாத தீவினையாரு முளராகின்றனர். பிறரீட்டங்கண்டு வெஃகுவாருளராகின்றனர். பிறர்மனை விழை வாருளராகின்றனர். பிறராக்கங் கண்டு அழுக்கறுப்பாருள ராகின்றனர். மக்கள் கொள்ளத்தக்க அறத்தின் மாறுபட்டவை யிவையெனலை அவரும் அறிவரெனினும் அவ்வறிவினைக் கையி கந்து செல்கின்றதவர் நடத்தை. 'படைகொண்டான் நெஞ்சம்' நன்றூக்காதாகிறது. 'வேலொடு நின்றான் இடு' என்கிறான். பேதையருளர்; கயவருளர்; புல்லறிவாளருளர். எல்லாம் நிறைந்து நின்ற தமிழகத்திலே இவர்தாம் இல்லாராவரோ?

மக்களை-குடிகளை-மண்ணுலக வாழ்வு விளங்கச்செய்யும் மாண்பினராகச் செய்தலை மேற்கொண்டு அரசு நிலைத்த அக் காலத்தும் இலைமறை காய்போல் இத்தீயன காணப்பட்டன எனின் அவை முன்னும் முன்னுமாய சென்ற நாட்களிலே எவ் வாறிருந்திருக்கும்? இக்காரணங்களால்தான் 'அரசன் ஒருவன் இருக்கின்றான்' என்று வள்ளுவர் தொடங்கிக் கூறுகிறார். அவ்வாறேதான் 'உலகுக்கு முதல்வன் ஒருவன் உளன்' என்று தொடங்கினார் அவ்வறிஞர். அங்கும் கருத்துப் பின்னல் களுள் நுழைந்து விடுவித்து விளக்க அவர் முனையவில்லை.

அவ்வாறே 'ஆடவனுளன்; பெண்டொருத்தியைக் காண் கிறான்' என்று தொடங்கினார் வள்ளுவர் காமத்துப்பாலை. ஆட வனும் பெண்டும் எவ்வாறுண்டாயினர்? அவர் ஏன் ஒருவரை யொருவர் கண்டதும் நெஞ்சு நெகிழ்கின்றனர் என்றெல்லாம் விளக்க அவர் முனையவில்லை.

அவர் காலத்தில் 'உலகத்தாருண்டென்பது' உண்டென்று கொண்டே அவர் வாழ்வியலை விரிக்கிறார். அவை உள்ளனவா இல்லனவா என ஆராய இடமேயில்லாதன. அவருண்டென்று கொண்ட சில இல்லாதன என்று முனைத்த அறிவுகொண்டு தருக்க நடையிலே சொல்லிக் காட்டும் வல்லுநருளராகலாம். அவரைப் பொறுத்தவரை – அவரையடியொற்றும் பிறரைப் பொறுத்தவரை – அவையெல்லாம் இல்லாதனவெனினும் 'புரை தீர்ந்த நன்மை' மக்கள் வாழ்க்கைக்குப் பயப்பனவாதலின் வாய்மைகளே.

இங்கே காட்டப்படும் மாட்சி நிறைந்த இறை எவர்க்கு அடங்கியவன்? எவர்க்காவது தன் செயல்களை ஒப்புக்காட்டும் கடமையவனுக்குண்டா? எவர்க்கும் பொறுப்பாகாத இவனை யிவன் பொறுப்பில் நிறுத்துவோர் யாவர்? எல்லாப் பொருள் களும் இவன் உடைமைகள் தாமே? இவனை நல்வழி நிற்கச் செய்வதுதான் எது? வழிவழி வந்த இவன் மாட்சிகளும் கடமை யுணர்ச்சியும், புகழ் பேணுமவாவும், அறக்கட்டுமே இவனை யடங்கி நிற்கச்செய்வன என வள்ளுவர் காட்டுகிறார்?

இவை பேச்சளவில் சிறந்த கட்டுக்களாகவே படுகின்றன. இவற்றை அரசன் பேணுமல் ஒழுகினுல் என்ன நேரும்? அவ் வாறு பேணுமல் ஒழுகுவோரும் இலராயின ரென்னவியலாது. அவர்தமை நல்வழி நிறுத்தும் பல உறுதியுரைகள் வள்ளுவர் வழங்குகிறார்.

**இறைகடிய னென்றுரைக்கு மின்னுச்சொல் வேந்தன்**
**உறைகடுகி யொல்லைக் கெடும்**

**ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை**
**யாஅது மென்னு மவர்**

அரசர் தம்மாக்கங் கருதியேனும் நல்வழி நிற்பராவர். தங்குடி விளங்கத் தமக்கேலாதன செய்யாராவர். செய்வோரழிவர் என்பதும் புகலப் பட்டது. கடவுளுக்கும் அரசனுக்குமுள்ள வேறுபாடுஇதுவே. தனக்குத் தகாதன செய்யுமரசனழிவான். மக்கள் அவனைமடியச் செய்வர். அப்போது மக்கள்

**அல்லற்பட் டாற்ரு தழுதகண் ணீரன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை**

என்கிறார். 'அறத்திற்குமாதியாய் நின்ற' மன்னவன் கோல் கோடின் அறமும் அழிவுறும். மக்கள் மன்னனை மன்னுதானுக் குவரென்பது ஒருங்கு நோக்கிற் புலப்படுங்கருத்தாம்.

அமைச்சர் முதலியோர் கடமைகளாகவும் பல கூறப்பட் டுள்ளன. ஆனுல் இவ்வமைச்சர் முதலியோரைத் தெரிந்து கூட்டித் துணைகொள்ளல் அரசன் உரிமையே என்பதை நாம் மறக்க முடியாது. அவன் பெரியாரைத் துணைகோடல் வேண்டும். ஆனுல் சிற்றினத்தைப் பெரியாராகக் கொண்டால் செயற்பாலதெதுவு மில்லை.

நுனிக்கொம்ப ரேறினர் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்

என்றறிந்து அரசர் அளவுட்பட்டு நில்லாராயின் மக்கள் புரட்சி செய்வரென்பது மட்டும் வள்ளுவர் மறுக்கவில்லை.

அரசன் என்போன் தனக்குத்தானே தலைவன்; எல்லோரும் அவனுக்கடங்கி வணங்க வேண்டும். அவனை நியமிப்பாரெவருமிலர். அவன் எவர்க்கும் வணங்குவோனல்லன். அறத்துக்குப் பணிதல் வேண்டும் என்பது தனக்குத்தானே அறிவித்துக் கொள்ளுவ தொன்றே. பணியாக்காலும் அவ்வுரிமையும் அவனதே.

அமைச்சர், அறங்கூறவையத்தார், வினை செய்வாரெல்லோரையும் அவனே அமைக்கின்றான். அவரெல்லாம் அவனுக்கேயாட்செய்வோர். படையுமன்னதே. ஆனால் இத்தகைய வணங்காமுடியும் பேருடைமையும் பேருரிமையுமுடைய அவன் அறம் வழுவிக் கொடுங்கோலனாயின் மக்கள் ஆற்றாது கண்ணீர் விடுவர். அக்கண்ணீர் அவர்தம் மங்கிக் கிடந்த ஆண்மையைத் துலக்கி அறப்புரட்சியிற் செலுத்தும். அங்ஙிலையிலரசனழிவான் என்னும் இப்பொற்கருத்து என்றும் எங்கும் உலகமக்களால் போற்றப்படாது மறக்கத்தக்கதன்று.

மன்னர்கள் மலையேறி ஒருகணம் மன்னி மறுகணம் பிறர்க்கிடங்கொடுத்துத் தாம் எதிர்க்கட்சியாராகின்ற இக்காலவரசியலுக்கு இவ்வறிஞரது கருத்துக்கள் எவ்வாறுவ்வும்? இவர் கருத்துக்கள், பழங்கால அரசியற் கருத்துக்கள் என்று பழம்பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டு அவ்வப்போது துருப்பிடிக்காது நெய்தேய்த்துப் போற்றப்பட வேண்டுவனதாமா? அன்றன்று; இன்றும் மன்னர் மன்னரே. ஒரு கட்சியார் மன்னரல்லராயின் மறுகட்சியார் மன்னராகின்றனர். அரசியல் - காவலியல் - என்றும் இடையறாது ஒழுகி வருவதொன்றே. இவ்வாறான ஜனநாயகக் கட்சியரசுக்கும் அம்முறையில் நாடாள்வோருக்கும் இவர் இறைக்கென்று கூறிய எல்லாம் ஒவ்வுமெனல் கூறாமலே தெளிவாம். இக்காவலர் வேந்தரை மடித்த மக்கட் புரட்சிகளாலுண்டான புதுக் காவலரே. இவர் அக்கருத்துக்களின் வழியொழுகிலராயின் மடிவர். புதுமுறைக் காவலர் தோன்றுவர்.

ஹிட்லர், முஸோலினி முதலியோர் வள்ளுவர் அமைப்புக்குப் புறம்பான காவலரல்லர். 'குடிதழீஇக்கோ' லோச்சியவரை மக்கள் அவரை யடிதழீஇ நின்றனர். நட்பும் பகையும் பற்றிய வள்ளுவர் கருத்துக்களை மறந்து 'வியந்தார்'. விரைந்து கெட்டனர். எத்தகைய இக்கால முறையிலரசு செய்யும் காவலரும் இக் கருத்துக்களுக்குப் புறம்பானவரல்லர். இவ்வாருன காவலர் எவரும் இறைநிலை கொண்டின்றில்லை யெனின் அதன் காரணம் அந்நிலை நிற்பதற்கேற்ற செந்நெறியில் எவரும் நின்றிலரென்பதே. பெயருக்கு 'வேந்தர், இறை' எனநிற்போர் உளபோல இல்லாகித் தோன்ருக் கெடும் பொருளரே.

தெரிந்து தெளிதல் இன்றும் தேர்தல்கள், வினைசெய்வார்த் தேறுமவையம், படைக் காள் பொறுக்கும் மன்றம், சட்டமன்ற உறுப்பினர் தலைவரைத் தேர்ந்தெடுத்தல், அத்தலைவர் மந்திரிமாரையாய்ந்து துணைகொள்ளல் முதலிய வகைகளில் சொல்லுங் கருத்துக்களையே சொல்கிறது. 'நட்பும் பகையும்' பற்றிய கருத்து இக்கால அரசாங்கம் எதுவே மறக்க முடியாதவை.

அமைச்சரைப்பற்றிக் கூறியபோது அவர் 'அவையறிதல்' 'அவையஞ்சாமை' இவற்றையுடையராதல் வேண்டுமெனக் கண்டோம். எவ்வவைகள் இங்கே குறிக்கப்பட்டன? ஓரவையென்பது பலதிறப்பட்ட மக்கள் கூடுவதாயின் அதனையறிதல் எவ்வாறு? இங்கே கூறப்பட்டது அரசவையாதல் வேண்டும். இங்கே கூடுவோர் அவனது அமைச்சர் பலரே. (தூதராவோரும் அமைச்சரேயென முன்னர்க் குறித்தோம்.) ஓரமைச்சன் தான் துணிந்த கருத்தினைப் பிறரெல்லாமுடம்பட நிரந்தினிது சொல்லுதல்வேண்டும். அமைச்சராவோர் பலர். வினைசெய்வார் தலைவராயோர், படைத்தலைவராயோர், தூதராவோர், குறுநிலத் தலைவராவோர், ஊராள் தலைவராவோர், முறைசெய்வார் தலைவராவோரென இவர்வகைப்படலாம். இவரெல்லாம் வேந்தனது 'தெரிந்த வினம்'. எல்லாரோடும் தேர்ந்தெண்ணியே வினை துணியப்படுகின்றது.

காவலன் பிறரைத் தனக்கு நேர்ந்தோராக்கவும், அச்சுறுத்தவும் அவையாகக் கூட்டலாம். அவ்வவைகளிலே 'புல்லவை' யுமுளதாகலாம். அவர்க்குச் சொல்லாற்றவல்ல நிலையினரே — அவர் மனப்பாங்கு நன்கறிந்தோரே அங்கே உரை நிகழ்த்தலாம்.

அறமன்று – திறமறிந்து உளத்துப்பட வுரைக்கும் அவர் நிலைக்கேற்ற சொல் ஆங்கே வேண்டப்படுவது. இங்கே குறிக்கப்பட்டன இக்காலச் சட்ட மன்றங்கள், ஒரு பொருளை யாய்தற்கென்ற ரசமைக்குங் குழுக்கள் முதலியன என்று கோடல் தகாது. எனினும் மக்கள் மனத்தைத் தங் குறிப்போடு கொண்டுசெல்லச் சொல்லாற்றுவோரனைவர்க்கும் இக்கருத்துக்கள் என்றும் பயன் படுவனவேயாம்.

'நாடு' பற்றிய நல்லுரைகள் இன்றும் என்றும் எவர்க்குங் குறிக்கோளாகக் கொள்ளத்தக்க செல்லுரைகளே. 'அரண்' போர்நிலை, படைக்கலநிலை யிவற்றால் காலநிலைக்குத்தக மாறுவதாம்.

ஒற்று ஒற்றையாள் அற்றைக் காவலன் போலப் பொறுப்புடையனுயின் இற்றை நாளிலும் வேண்டப்படுவதே. ஹிட்லர் போன்றோர் ஒற்றினைக் கண்ணெனவே கொண்டு நின்றனர். இந்நாளிற் பல நாடுகளிலும் 'இரகசியப் போலீஸ்' என்றிருப்பதும் ஒற்று என்னும் அமைப்பின் மாற்றுருவமே யெனல் மிகையாகாது.

படையின்றி எதனையும் படைத்துக் காக்குமாற்றல் எந் நாட்டு எம்முறையரசியலுக்கும் இன்னும் உண்டாகவில்லை. 'வழிவந்த வன்கணது படை' 'அழிவின்றறை போகாதது படை' 'உயிர் வேண்டாதது படை' 'தலைமக்களில் வழி பயனில்லது படை' என்னுங் கருத்துக்கள் ஊன்றியுன்னிப் பயன்கொளத் தக்கனவே. தமக்கொத்த அறவழியிற் பொருளீட்டிப் பொலிவுறு தஅரசும் என்றும் மதிக்கப்படும் நிலையிலிருந்ததில்லை.

இவ்வாறாக வள்ளுவப் பெருந்தகை யற்றை நிலையுளத்துட் கொண்டு சொற்றன பல எற்றைக்குமுரியவாயின. கால மாறுதலாலும், மக்களின் வாழ்க்கை வளர்ச்சியாலும், உலகு குறுக்கி யோரடியாலளந்து காண முயல்கிற அறிவியல் வளர்ச்சியாலும், காவலர் வள்ளுவருரைத்த பாடங்களை மறவாதிருக்கத் தப்பினராதலாலும், அதனால் நேர்ந்த பல புரட்சிகளாலும் ஒருசிலவே பழையனவாய்க் கழிவனவாயின. அவற்றுட் பலவும் புதியனவாய்ப் புகுவனவற்றுக் கடிப்படையுமாயின. எனவே மக்கட் சமூகமும் அதற்கோரரசியலமைப்பும் இருக்கும்வரை அவர் தந்த பாடங்கள் 'சுழலுமிசை' யுடையனவாய் நிற்றல் நிகழ்ந் தே செல்லும்.

## VII

கலத்தினுங் காலினும் வந்த புலம்பெயர் நாட்டினர் தொடர்பாலும், வடபுலப் பேரரசின் அணுக்கத்தாலும், ஜைன பௌத்த வைதிக மதப் பரவல் நிலையாலும், செல்வக் கொழிப்பும் அமைதியும் நிறைந்த வாழ்க்கை நிலையாலும் தமிழ்நாட்டு வாழ்வியற் கருத்துக்களும் குறிப்பாக அரசுப் பண்புகளும் நெஞ்சவுலையில் வெந்துகொண்டிருந்த காலத்தே வள்ளுவர் வழிவழி வந்த தமிழ் நிலப் பெருங்கருத்துக்களை நினைவுறுத்தி வழிகாட்டத் தம் நூலையாத்திருப்பாரென்று குறித்தோம். நாகரிக நிலையில் நின்ற நாடுகளின் வாழ்வியற் கருத்துக்களிற் பலவற்றை அவர் தம் அகன்ற அறிவிலடக்கி நின்றிருப்பாரென்றுங் குறித்தோம்.

வள்ளுவர் வாழ்வியற் கருத்துக்களைக் காண முனைந்த பலர் அவர் கருத்துக்களெல்லாமே ஆரியமொழியின் அறநூல்களினின்றும் பொருள்நூல்களினின்றும், காமநூல்களினின்றுமே உருவாக்கப் பெற்றன என்று கொண்டனர். குறிப்பாகச் சாணக்கியனுடைய 'அர்த்தசாஸ்திரம்' அவருடைய பொருட்பாவின் முதநூல் என்று குறித்தோருமுளர். தமிழர் பிறமொழிகளைக் கற்று நூலெழுதினரென்றால் அதனை அத்தமிழர்க்குப் பெருமை யென்றன்றி யிழுக்கென்று யாம் கொள்ளோம். பிறமொழி நூலறிவைத் தம் நுண்ணறிவால் வடித்துத் தெளித்துத் தமிழர்க்கு வார்த்தாரென்றால், தாமின்புறுவதுலகின்புறக் கண்டு காமுறுவாராய நல்லோரே யவர் என்று புகழ்வோம்.

சாணக்கியன், அரசியற் கருத்துக்களுக்கு எழுத்துருத் தந்த கிரேக்கப் பெரியார் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் இவர்தங் கொள்கைகளை யறிந்திருப்பானென முன்னர்க் குறித்தோம். வடநாட்டில் தன் பேரரசைப் பல பகுதிகளில் நிறுவிய கிரேக்கமன்னன் அலெக்ஸாண்டர் அரிஸ்டாட்டிலின் மாணவருளொருவனெனின் அவன் நிறுவிய அரசினையாண்ட தலைவர்கள் அக்கருத்துக்களைச் செயலிற் கொண்டிலரெனல் தகுமா? நந்தப் பேரரசையழித்துக் கிரேக்கப் பேரரசைப் புரட்சியால் மடித்துத் தன் மாணவன் சந்திரகுப்தனைப் பேரரசனாக ஆக்கிய அச்சாணக்கியன் வழிவழி வந்த வடவரரசியற் கருத்துக்களும் கிரேக்கர் அரசமைப்பு முறைகளுங் கருத்துக்களும் அறிந்திருந்ததோடு அவற்றைப் புதியதொரு வல்லரசு நிறுவும் தனது அநுபவத்தொடு பொருத்தி மொழியவும் வல்லனாயிருந்தது ஒல்லுவதே.

அவன் விளங்க வடிவாக்கிய கருத்துக்களையோ அல்லது அக்கருத்துக்களின்படி நிகழ்ந்த வடபுல அரசு முறைகளையோ வள்ளுவர் கற்றோ கேட்டோ கற்றுங்கேட்டுமோ நன்னரறிந் திருந்தாரென்றவில் ஒப்பத்தகாத புதுமை யெதுவுமில்லை. ஆனால் தந்தமிழகத்தில் நடைமுறையிலும் கருத்துப் பரப்பிலும் வளர்ந்தோங்கிய அரசு முறைகளை அவர் கண்டிலரென்றல் வியக்கத்தகுவதொன்றே யன்றி யொப்பத்தகுவ தாகாது. வள்ளுவர் வடமொழிக்கடலை நிலைகண்டுணர்ந்தாரென்றால் கொள்ளத்தக்கதே. 'தினையளவு போதாச் சிறுபுன்னீர் பனை யளவு காட்டும்படி'த்தாய்த் தமிழ்ச்சொற்றுளிகளிலே நாகரிக வாழ்வு முழுவதையும் அடக்கிக் காட்டிய அந்நாவலர் தமிழ் மொழித்தண்கடலை நிலைகண்டிலரெனில் எவ்வாறு கொள்ளத் தக்கதாம். நாட்டில் வந்தேறிய பலர்பால் 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு' என்று கொண்டு பல பொருள்களையறிந்த அவர் தம் நாட்டோர் கருத்துக்களையறிந்திலரெனில் எவ்வாறாவ்வும்?

வெறுங்கை முழம் போடுவ தொப்பவும் ஆழ்கடனீரை யொரு நாழியில் அமுக்கி நாழி முகப்பா ரொப்பவும் தம் மொழியறிவும் தந்நாட்டுப் பண்பும் ஒழுகலாறுமறியாது பிற மொழிக் கல்வியும் பிற நாட்டு நிலையை யலசியறிதலும் மேற் கொள்ளும் 'உளபோல இல்லாகித் தோன்றாக்' கெடும் 'அரங் கின்றி வட்டாடுந்' தொழிலை யவரே செய்தாரென்றால் அதனை அவரையறியாத பேதையர் கருத்தென்றே ஓதவேண்டுமன்றோ?

வள்ளுவர் வட நூற்புலமையால் தந்தமிழ் நூலாக்கினா ரென்றால் அது வள்ளுவர்க்கன்று, வளம் நிறைந்து புலஞ் செழித்து அரசமைந்து சான்றோர் நிரம்பிப் புகழ்படுத்து நின்ற தமிழகத்துக்குச் செல்லும் வசைமொழியாம். பழந்தமிழகத்தின் புலந்திகழ் நிலையை ஒரு சிறிதனவறிந்த எவனும் இவ்வசை மொழியை யேற்க வொருப்படுதல் முடியாது. பலாப்பழத்தில் மொய்த்த ஈப்போலத் தமிழகத்தில் பலரும்வந்து மொய்த்தனர். அப்பலருடைய அறிவொளிநிலாவியல்பைத் தமிழ் நாட்டறிஞர் பலர் அறிந்தனர் என்றால் அவர்க்கது பெருமையே.

இவையெல்லாம் வெறுஞ் சொற்களே. வள்ளுவர்க்கு முன்னெழுந்த வடநூல்களைக் காட்டுதும். அந்நூல்களில் வள்ளுவரருளிய கருத்துக்களைக் காட்டுதும். நீரவற்றையொப் பீராயின் 'காணாதாற் காட்டுவான் தான்காணான் காணாதான்

கண்டானுந் தான் கண்டவாறு' என்று விலகுதுமென்பீரேல், தமிழ் நாட்டில் வழிவழி வளர்ந்து தமிழ்ப் புலவர்கள் எட்டுத் தொகை, பத்துப் பாட்டு முதலிய பெரு நூல்களில் பெய்து வைத்த அரசியற் கருத்துக்களைக் காட்டுதும்; அவற்றில் மிகப் பல வள்ளுவரருளுரைகளின் முன்னைப்படிகளே. அவரெல்லாரு மவற்றை வடநூல்களிலிருந்தே கற்றுச் சொல்லினரென்பீ ராயின் நும் பாடத்தையே திருப்பிப் படித்து விலகுவோம் என்று நாம் கூறுவோம். கண்டகண்ட விடத்தெல்லாங் காட்சி யளிக்குமப் பழம் புலவர் கருத்துக்களிற் புறநானூறு கொண் டுள்ள சிலவற்றை மட்டுமே சொல்லிக் காட்டுதும்.

'நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனல், யா னுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே' 186

'அருளு மன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்ருது காவல்
குழவி கொள்பவரி னோம்புமதி' 5

'காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப் புக்குணினே
வாய்புகு வதனி னுங் கால்பெரிது கெடுக்கும்
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்
மெல்லியன் கிழவனுகி வைகலும்
வரிசையறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் தண்ட நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானு முண்ணு னுலகமுங் கெடுமே' 184

இச்சிலவற்ருல் இத்தமிழ் நாட்டின் உச்சநிலை பெற்ற அரசியற் கருத்துக்கள் காண்க. இன்னபல பல்லாண்டு முள்ளன அப்பழ நூல்களிலென்பதெண்ணுக. இவற்றை வள்ளுவர் சொல்லொடும் பொருளொடும் ஒப்பிட்டு நோக்குக. வள்ளுவர் நூலுக்கு முதல் தமிழ் நிலக் கருத்து விளைவே யென்பதை உளங் கொள்க. பிறநிலக் கருத்துக்களைத் தமிழ் நிலங் கொண்டபடி 'உலகத்தோடொட்ட வொழுகல் பல

கற்றுங் கல்லாரறிவிலாதார், என்ற அவ்வறிஞர் எடுத்தாண் டிருப்பாரென்றும் ஒப்பியியைக. அவற்றை யெடுத்தாண்டு அவற்றிற்குப் பெருமைதந்தாரென்று பேசுக.

## VIII

கட்டுரையை ஒருவாறு முடிக்குமுகத்தான் சில ஐயங்களைக் கூறி அவற்றைப் பற்றிய சில கருத்துக்களைக் கூறி விடுதல் தகும்.

வடநாட்டில் வருணாசிரமநிலை வாழ்க்கையறமாக நின்றது. அதனை யொட்டியெழுந்த பல நூல்களில் பார்ப்பனர் முதலி யோருடைய தொழில்களெல்லாங் கூறி வரையறைப் படுத்தப் பட்டன. தமிழ்நாட்டில் வடவர் கலப்பால் காவலர்கள் சத்திரி யருக்குரிய வேட்பித்தல் செய்வாராயினர். எனின் இங்கும், வருணாசிரமம் நிலைகொள்ளக் கால் கோலிட்டிருக்கவேண்டுமே? வள்ளுவர் 'அந்தணர் நூற்கும்' என்றும் 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்றுங்கூறியவற்றை நோக்கின் அவரும் அதனை யொட்டியே நூல் யாத்தனரெனக் கொள்ளல் ஒவ்வுமா? 'மறப்பினு மோத்துக்கொளலாகும் பார்ப்பான், பிறப்பொழுக் கங்குன்றக் கெடும்' என்றும் உரைக்கின்றாரே? அவ்வவ் வருணத் துக்கேற்ற பிறப்பொழுக்கங் குன்றக் கூடாதென்பதவர் கருத்தா?

அவர்காலத் தமிழ் நாட்டில் வடபுலவைதிகர் அங்குமிங்குந் தம்மறிவைப் பரப்பி அரசர்களையும் வேட்பித்தனரென்ப துண்மையே. அவர் தாம் பிறந்த குடிப்பெருமை தம்மைப் பிறர்நலம் போற்றியே வாழுநராக நிறுத்திற்றென்று கூற்று நிகழ்த்தியிருப்பர். அவரவர் பிறந்த குடிக்கியைந்த வாழ்க்கை நடைமுறையிற் கொண்டொழுக வேண்டுமென்பது தமிழகத் திருந்த கருத்துமாம். பிறப்பு என்னும்போது வள்ளுவர் குடிப் பிறப்பை யெண்ணினாரேயன்றிச் சாதிப் பிறப்பு, வருணப் பிறப்பு என்றெண்ணியிருக்கமாட்டார். வடபுல வைதிகரை நன்கறிந்த தமிழகத்துக்குக் குடி நிலை யொடுபட மானம்பேணி வாழ்க்கை நடத்துதலையே வள்ளுவர் குறித்திருப்பார். தொழி லிழிவு முதலியன பற்றி உயர்வு தாழ்வு கொள்ளலைப் 'பிறப் பொக்கு மெல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்' என்ற அவர் இவ்வாறே கொண்டிருப்பா ரெனல் ஒவ்வுமென நம்புகிறோம்.

அறுதொழிலோர்' என்புழி பார்ப்பனர்க்குரிய ஆறு தொழில்களையென்றவர் குறித்தது. அவ்வாறு குறித்திருப்பாராயின் மன்னரைப்பற்றி யெழுந்த பல குறள்களிருப்ப அவர் தொழிலெண் குறியாது விடுவாரா என்பதெண்ணுக. 'அந்தணர் நூற்கும்' என்புழியும் தாம் முன்னர்க் குறித்த 'அந்தணரென்ப ரறவோர் மற்றெவ்வுயிர்க்கும்,செந்தண்மை பூண்டொழுகலான்' என்றபடி துறவோரையே எண்ணியிருக்க வேண்டும். அக் குறளிலுள்ள 'அறவோர்' என்ற சொல்கொண்டு 'அறு தொழிலோர்' என்பதன் பொருளுமறியவேண்டும். அறவு என்றால் அறுதல்; தமக்கென முயலா நோன்றாளராதல். பிறர்க்கென வாழுந் தொழிலறுதலன்று. 'அறுதொழிலோர்' என்பதும் தமக்கென முயலார் என்ற பொருளதென்பதை யிது விளக்கும். காவலன் காவானெனின் அவரும் மக்களுக்கு வாழ்க்கையின் செந்நெறி யுணர்த்தல் இயலாதாகுமென்பதே பெறப்படுவதாமென்று கொள்வோம்.

நூல் என்று பல்லிடங்களிற் கூறுகிறாரே? 'எப்பால் நூலோர்க்குந் துணிபு' என்கிறாரே? 'அந்தணர் நூல்' எனக் கூறுகிறாரே? இவையெவை? நூல் என்றால் இழைத்துக் கொண்டது. நேர்மை காட்டுவது. எழுதப்பட்ட முழு நூல் மட்டுமன்றி வாழ்க்கையில் நேர்வழி காட்டும் எந்நூற் பகுதிகளும் எவ்வெவருரைகளும் நூலே. அவற்றையெல்லா மறிந்தோனே நூலோருள் நூல் வல்லன். வடபுலவைதிகர் 'நூல்' என்று எடுத்துப் பிரித்துப் பேசியவேதமும் வாழ்க்கைச் செந்நெறி காட்டுவதென்றே அவர் தேற்றியிருப்பர். பலபால் நூல்கள் தமிழிலுமிருக்கின்றன. இவர் குறிப்பதெல்லாம் வடபுலவேதமும் அருத்த சாத்திரமும் காம சாத்திரமுமே என்பவர் தமிழ் நிலத்தை நாகரிகமற்றதாயிருந்ததெனக் கொள்வோரே. இவர் கூற்றாராய்ச்சிக்குரிய தன்றென்க.

ஐம்பெருங்குழு, எண்பேராயமென்று சிலம்பு முதலிய நூல்கள் கூற வள்ளுவர் தம்மரசியலிலவற்றைக் கூறிலரே? அவர் கூறிய அமைச்சர் என்னுங் குழுவினருள் பலதுறை யறிஞர் அடங்கி நின்றனர். படைநிலையறிஞர் அல்லது அமைச்சர், தூதுநிலையமைச்சர், பலதுறை வினை செய்வாரைக் கண்காணிக்குமமைச்சர், அறமன்ற நிலையறியமைச்சர், நாட்டுப் பிரிவுகளின் காவலறியமைச்சர் என்றெல்லாமவரிருந்திருக்க

வேண்டும். அவற்றையே பின்னர் எண்கொடுத்து 'ஐம்பெருங் குழு' என்றனர் போலும். எண்பேராயம் அரசனது மெய்க் காப்பு முதலிய பேணும் உரிமை வினைஞரேயாதலின் அவற்றை வள்ளுவர் கூறத்தகு பொருளெனக் கொண்டிலர். இத்தொகை யெண் என்றும் அன்றன்றிருந்த நிலைக்கேற்ப மாறுபாடுற்று நின்றதொன்றே. வடநூல்களிலும் இத்தொகையெண் எவ ரொடு சார்த்தியும் எண்ணப்பட்டிலது.

அமைச்சு, மந்திரி, தூது, அவை முதலிய வடசொற் குறி யீடுகளை வள்ளுவராள்கின்றனரே? இக்குறியீடுகளையாண்ட அவர் அவற்றைப் பற்றிய அம்மொழிக் கருத்துக்களையுமாண்டா ரெனில் தகுமன்றோ? அமைச்சு, தூது, அவை என்னுஞ் சொற்கள் வடசொற்களே யெனல் முடிந்த முடிபன்று. அக் காலத்தில் தமிழரது வடபுலப் படையெடுப்பாலும், வடவரது தென்புலப் படை யெடுப்பாலும் அவர்க்குரிய சில சொற்களைத் தமிழ்மொழி யேற்றுக் கொண்டதெனலாமன்றி அச்சொற் களால் அவை குறிக்கும் பொருள்களே தமிழ் நிலத்தில் முன் பில்லாது புதிதாக முளைத்தனவெனல் பொருந்துவதன்று. தமிழ் புலச் சொற்கள் வேதத்திலும் ஆகமங்களிலும் உள்ளன வாதலும் அருகிய வட தமிழ் மொழிச் சொற் கலப்பைக் காட்டுவதாம். மீனம் நீரம் சிவன் உளியம் (உளி) இச் சொற்கள் அங்கே காணப்படுதல் கருதுக.

வள்ளுவர் அரசியலறிஞரென்றே கூறவெடுத்தோம். அதனால் அவர்குறள் நயங்கள் முதலியன ஈண்டுக் கூறப்பட்டில. அரசியல் பற்றிய அவர் குறள்களெல்லாந் தொகுத்துங் கூறப் பட்டில. தமிழ் நிலத்தார் அவற்றை நூலிலேயே கண்டு கற்பாராக. வள்ளுவர்-அரசியலறிஞர் என்பதும் அவர் கூறிய அரசியல் நெறியின் திறனும் அவர் கூறியன பல காலங்கடந்து நின்று எக்காலத்துக்குமுரியவாந் தன்மையும் அவற்றைப் பற்றி யெழுந்த பலர் பலருடைய பல பல கருத்துக்களின் போக்குமே இங்கே கூறப்பட்டன. வாழ்வியல் வகுத்துத் தமிழ் நிலத்துக்கு வாழ்வளித்த வான்புகழ் வள்ளுவர் அவ் வாழ்வியலின் ஒரு கூறுக வழங்கிய அரசியல் பற்றிய கருத்துக்களால் மக்கள் வாழ்வு மண்ணில் நிலைமன்னுமெல்லை அவர் 'அஃகியகன்ற' யரசியலறிஞர் என வணங்கப் படுவார்.

---

## பொருளிய லறிவு

பட்டப்பகலிலே ஒருவன் விளக்கேந்தி உலகிலே நல்லவன் ஒருவனை நான் தேடுகிறேன் என்று சொல்லித் தெருத்தெருவாக அலைந்தால் அவனைப்பற்றி நாம் என்ன எண்ணுவோம். பித்தன் என்று அவனுக்குப் பெயர் சூட்டுவோம். அத்தகையப் பித்தனொருவன் கொரிந்திலே* வாழ்ந்தான். அவன் பெயர் டயோஜினஸ். "உனக்கு நான் ஏதாவது உதவிசெய்யட்டுமா" என்று மாவீரன் அலெக்சாந்தர் அவனைச் சந்தித்தபோது கேட்டான். "கதிரவனின் ஒளி என்மேல் நன்ருக விழ வேண்டும், ஆகவே சற்றே நீ விலகி நின்ருல் அதுவே போதும்" என்று அக்கேள்விக்கு அவன் பதில் சொன்னுன். ஒரு தொட்டியிலே வசித்து வந்த அவனிடம் ஒரே ஒரு முரட்டுச் சொக்காய்தான் இருந்தது, தண்ணீர் குடிப்பதற்காக அவன் ஒரு கிண்ணம் வைத்திருந்தான். ஆனுல் கைகளால் மொண்டு நீரைப் பருகலாம் என்பதை அறிந்தவுடன் அதையும் அவன் எறிந்து விட்டான். அதனுல் தனது தேவை ஒன்றைக் குறைத்து விட்டதாக அவன் எண்ணினுன். உலகில் ஒவ்வொருவரும் ஒரு டயோஜினஸ் ஆகிவிட்டால் பொருளியலறிவுக்கே அவசியமில்லை. ஏனென்ருல் பொருளியலறிவு தேவையின் அடிப்படையிலே எழுந்தது. விஞ்ஞான அறிவு வளர வளர, நாகரிகம் முதிர முதிர, நம்முடைய தேவைகள் பெருகுகின்றன. பாரீஸ் நகரத்திலே தலைமைக் குரங்கு வழிப்போக்கனின் குல்லாவை அணிவதைப் பார்த்துவிட்டால் உலகெங்கணுமுள்ள மற்றக் குரங்குகளும் உடனே அவ்வாறு செய்யத் துடிக்கின்றன, இந்த வகையிலே உருவாகும் நம்முடைய இலட்சியங்களும் விருப்பங்களும் வரம்பில்லாதவை. ஆனுல் அவைகளை அடைவதற்கு அநுகூலமாய் நமக்கிருக்கும் காலமும் சாதனங்களும் அளவுக்குட்பட்டவை. அக்காலத்தையும் அச்சாதனங்களையும் வெவ்வேறு இலட்சியங்களை யடைய நாம் உபயோகிக்க முடியும். இந்த இலட்சியங்களிலும் சில மற்றவைகளைக் காட்டிலும் முக்கியமானவை. இவ்வெல்லா நியமங்களும் இருப்பதனுல்தான் ஒரு பொருளியல் சிக்கல் ஏற்படுகிறது. நம் தேவைகளில் எவை நெருக்கடியானவை என்றும் அவைகளைத் திருப்தி செய்வதற்காக வரம்பிற் குட்பட்ட சாதனங்களிலிருந்து எதை

* Corinth

உபயோகிப்பது என்றும் தீர்வு காண்பதுதான் இந்தச் சிக்கல். எந்த அலுவலை மேற்கொள்ளுவது அல்லது எந்தப் பண்டங்களை நுகருவது என்று நாம் யோசிக்கிறோம். என்ன வழியில் என்னென்ன பண்டங்களை உற்பத்தி செய்வது அவற்றை எங்கே என்ன விலையில் விற்பது என்று உற்பத்தியாளர் ஆலோசிக்கின்றர். எந்த வழிகளில் எந்த விதமான வரிகளை விதித்து வருமானத்தைப் பெருக்குவது, அதை எந்தத் துறையில் செலவிடுவது என்று அரசாங்கத்தார் ஆலோசிக்கின்றனர். இவையனைத்தும் பொருளியல் சிக்கல்களின் பல உருவங்களே. இத்தகையச் சிக்கல்களைப்பற்றி ஆராய்வதுதான் பொருளியலறிவு. அவற்றை ஆராய்பவன்தான் பொருளியற் புலவன்.

## பொருளியற் கருத்து

மேலை நாடுகளில் கடந்த இருநூறு ஆண்டுகளாகத்தான் பொருளியலறிவு ஒரு தனிச் சாத்திரமாகக் கருதப்பட்டு வருகிறது என்றாலும், அதற்கு முன்னர் பொருளியல் சிக்கலே இருந்ததில்லை என்று யாரும் சொல்லிவிடமுடியாது. அறிஞர்கள் முன்னாளில் பொருளியல் பற்றிப் பேசவில்லை என்று கூறிவிட முடியாது. பொருளியலறிவை அவர்கள் தனி நூலாகக் கொள்ளவில்லையெனினும் பொருளியல்பற்றித் தத்தம் அபிப்பிராயங்களை அவர்கள் சொல்லாமலில்லை. அவற்றைப் பொருளியற் கருத்துக்கள் என நாம் சொல்லலாம். ஒரு காலத்தே உருவாகும் கருத்துக்களும், முறைமைகளும் எக்காலத்தும் வாழும் மக்களினத்தைப் பாதிப்பதால் அவற்றை நாம் புறக்கணிக்க முடியாது. நம்முடைய இந்நாளைய ஆக்கத்திற்கும் முன்னேற்றத்திற்கும் கூடப் பண்டைய கருத்துக்களும் நடைமுறைகளும் நமக்குப் பெரிதும் உதவுவன வாகும். அத்தகையக் கருத்துக்களையும் நடைமுறைகளையும் அறிந்து கொள்ளவாவது நாம் நமது பண்டைய நூற்களையும் தொன்மை இலக்கியங்களையும் அவசியம் ஆராய வேண்டும். ஆனால் அவ்வாறு ஆராயப் புகுங்கால் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. இன்று முதிர்ந்துள்ள சாத்திர அடிப்படையிலே அக்கருத்துக்களைச் சமன் செய்வது முறையன்று. எடுத்துக்காட்டப்படும் கருத்து மலர்ந்த காலம், சூழ்நிலை, இடம் ஆகியவற்றின் பின்னணியிலேயே அவற்றை நாம் மதிப்பிட வேண்டும். திருக்குறளையும் இத்தகைய பின்னணியிலேயே நாம் மதிப்பிடுவோமாக.

திருவள்ளுவர் பொருளியற்புலவரா?

எதிர்பாராத நேரத்திலே ஏதாவது நடந்து விட்டால் நாம் திடுக்கிடுவோம். திருவள்ளுவர் — பொருளியற்புலவர் என்ற தலைப்பைக் கேட்டவுடனேயே சிலர் அதுபோலத் திகைப் படையலாம். அவர் ஒரு அறநெறியாளர், பெருந்தகையாளர், மெய்யறிஞர், அரசியலறிஞர் என்றே அவர்கள் அவரை அறிவர். எனவே அவர் ஒரு பொருளியற்புலவருங் கூட என்று நான் சொல்லும்போது அவர்களுக்குச் சற்றே ஆச்சரிய மெழலாம். நான் மீக்கூறுவதாகவே அவர்கள் எண்ணலாம். மார்ஷல்* அவரைப்பற்றிச் சொன்னதுண்டா? பிகு† அவரைப் பற்றிப் பேசியதுண்டா? கெய்ன்ஸ் ‡ அவரது தத்துவத்தைக் கற்றதுண்டா? இல்லை, வள்ளுவர்தான் இவர்களது கோட்பாடு களில் ஏதாவது ஒன்றைப்பற்றிச் சொல்லியிருக்கின்றாரா? என்றெல்லாம் அவர்கள் கேட்கலாம். மேனாட்டுப் பொருளியற் புலவர்களின் பாராட்டுரைகளுக்கு வள்ளுவர் பாத்திரராகாவிட் டாலும், அவர்களது சிந்தனைக்கொப்ப அவர் சிந்திக்கத் தவறி யிருந்தாலும் வள்ளுவரும் ஒரு பொருளியற்புலவரே. பொருளிய லறிவின் கோட்பாடுகளைக் குறித்தோ அவற்றின் நடைமுறை களைப்பற்றியோ வள்ளுவர் ஒரு தனி நூல் எழுதவில்லை. ஆனால் உளுத்துப்போன இந்தச்சமுதாயம் உயிர்த்தெழ இன்றி யமையாச் சீர்திருத்தங்களை வள்ளுவர் போதித்தார், அதே சமயத்தில் திட்டவட்டமான ஒரு முறைப்பட்ட பொருளியற் கோட்பாட்டையும் அவர் வகுத்தார். ஆகவே ஒரே கோவை யான, ஆனால் ஒன்றோடொன்று தொடர்பற்ற உண்மைகளைச் சொல்லுவதல்ல வள்ளுவம்.

வள்ளுவம் ஒரு தத்துவம்; அது ஒரு மெய்யறிவு.

மெய்யறிவிற்கு விளக்கந் தரப் புகுந்தவருள் ஒருசாரார் அறநெறிக்குச் சிறப்புத் தந்து அதன் அடிப்படையிலே உண்மை களை உணர்ந்தனர். மற்றொரு சாரார் அறவழியைக் கொள்ளாது புறம்பான வேறு காரணங்களின் துணைகொண்டு உண்மைகளை ஆய்ந்தனர். அவர்களுள் முதற் பிரிவினரைச் சார்ந்தவர் வள்ளுவர். அறநெறியின் அடிப்படையிலேயே அவர் உலகிற்கு உண்மைகளை உணர்த்தினார். நீங்காத ஓர் ஒருமைப்பாட்டை அறநெறிக்கும் பொருளியலறிவிற்கும் கற்பித்தார். ஆகவே தான் திருக்குறளெனும் பொற்கட்டி, திறனாய்வு எனும்

* Marshall. † Bigou. ‡ Keynes.

கட்டளைக் கல்லிலே உரைக்கப்படுங்கால் உண்மை நயமும் அறநெறியும் ஒருங்கே மிளிர ஒளி வீசுகின்றது. வைரக்கல் பல வகைப்பட்ட பட்டைகள் தீட்டப்பட்ட பின்னர் பளிச்சிடும் காந்தியைப் பெறுவதைப் போல மனிதனும் பல துறைகளைச் சார்ந்து ஒழுகும்போதுதான் தன் வாழ்க்கையில் சிறப்பெய்து கின்றான். அரசியல், சமுதாயம், பொருளியல் ஆகிய பல துறை களிலே மனிதன் பணி செய்யும்போது அறநெறி நின்றே தன் வினையை மேற்கொள்ள வேண்டும் என்பதை அவன் மறந்து விடலாகாது. இதுவே திருவள்ளுவரின் திருவுள்ளம். இந்த நீதி நெறி விளக்கத்தைப் போதித்ததற்காக வள்ளுவரும், கண்ணன், இயேசு பெருமான், புத்தர், மகாத்மா காந்தி ஆகியோரைப் போன்ற ஒரு தத்துவ ஞானியாக விளங்கு கின்றார்.

வள்ளுவர் தரும் பொருளியல் விருந்து:

செல்வமே இவ்வுலக வாழ்க்கைக்குச் சீவாதாரம். பொருட் செல்வம் இல்லையென்றால் இவ்வுலக வாழ்க்கையே இல்லை. ஆகவே பெற்ற செல்வத்தைப் பாதுகாப்பது பொருள் பெற்றவ வரின் முக்கியமான கடமை. காத்தல் மட்டும் போதாது. மேலும் பெரும் பொருள் ஈட்டுதலும் அவசியம். எனவேதான், "செய்க பொருளை" என்று வள்ளுவர் சொன்னார். செல்வருக்கு மட்டும் சொன்ன சொல்லல்ல இது. பொதுவாக எல்லோருக் கும் சிறப்பாக வறியவருக்கும் பொருந்தும்படி சொல்லப்பட்ட நீதி இது. வள்ளுவர்தம் கருத்துப்படி, வறியவன் என்றுமே வறியவனாக இருக்கவேண்டுமென்பதில்லை. அவனும் செல்வத் தைப் பெற ஏதுவுண்டு. பூப்பதற்கு வழியுண்டு. பொருளைப் பல வழிகளில் சேர்க்கலாம். முயற்சி செய்து சேர்ப்பது கடினம். கவர்ச்சி கொண்டு பிறன் நலத்தைச் சுறண்டுவது எளிது. சிரமமே யானாலும் முயற்சியின் துணை கொண்டே பொருளீட்ட வேண்டும் என்று குறளாசிரியர் குறித்தார். பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வோமென உள்ளத்தால் எண்ணுவது கூட குற்றம் என்று கூறினார். மனிதனது உள்ளத்தின் ஊக்கம் ஓர் நீர் நிலை. அவனது வாழ்க்கை அந் நீர் நிலையிலே மலர்ந்த அழகு மலர். நீர் நிலை பெருகினால் மலரின் தாள் உயரும். மனிதன் சிறப்பாக ஊக்கம் கொள்வானெனில் அவனது வாழ்க்கை உயரும். அவனுக்குச் செல்வம் சேரும். முயற்சி செய்யாது முடங்கிக் கிடப்பவர் பொருள் செய்ய மாட்டாதவர்

ஆவர். சோர்வற்ற ஊக்கமுடையவனிடமே செல்வம் தானே வழிகேட்டுக்கொண்டு போய்ச் சேரும். முயற்சியே திருவினை ஆக்கும் அருமருந்தாகும். போகூழால் கைப்பொருள் போவ தற்குக் காரணமான சோம்பல்தான் ஏற்படுமே யொழிய அத்தகைய ஊழின் காரணமாய்ச் செல்வம் உடனடியாக ஒருவனை விட்டு நீங்குவதில்லை. அத்தகைய ஊழ்வினை முயற் சிக்குத் தடையாக நின்றாலும் சோர்வடையாமல் குறை யில்லாமல் முயற்சி செய்ய வல்லவர்கள் அந்த ஊழையுங் கூட வெல்ல முடியும் என்பது அவருடைய சித்தாந்தம். பொருள் செய்வதிலே ஊக்கம் காட்டுபவர் கவனிக்கவேண்டிய மிக முக்கியமான குறிப்பொன்றுண்டு. அதாவது அவர்கள் பெறும் ஆக்கம் பழியின் வழி வந்ததாக இருக்கக்கூடாது. கீழ்த் தரமான இலக்கியங்களையும் ஆபாச ஓவியங்களையுங் கூடச் சந்தையிலே அவற்றிற்கோர் விலையிருக்கும் காரணத்தால் தேவன் போர்ட்* போன்ற பொருளியற் புலவர்கள் செல்வ மெனப் போற்றும் இந்நாளிலே, வள்ளுவரின் வாதம் பொருளியற் கருத்திற்கு முரண் பட்டதாக இருக்கலாம். ஆனால் அவர் தம் கொள்கையைப் போற்றும் பொருளியற் புலவர்கள் இன்றும் பலர் இல்லாமலில்லை. வள்ளுவர் தம் கொள்கைப்படி பழி யஞ்சி வாராத ஆக்கத்தை விடப் பொல்லாத வறுமையே மேலான தாகும். ஆகவே ஒருவன் சான்றோர் விலக்கிய செயல்களை விட் டொழித்துச் சொந்த முயற்சியிலே ஊக்கங் காட்டுவது சிறப் பாகும். தீய வழிகளைக் கடைப் பிடிப்பவன் தனது முயற்சி யிலே வெற்றி பெறலாம். பெரும் பொருள் குவிக்கலாம். ஆனால் அச் செல்வத்தால் அவனுக்குத் துன்பமேயன்றி இன்ப மில்லை. வஞ்சமெனும் நீர் பெய்ய வளர்ந்த செல்வம் பச்சை மண் கலத்துள் பெய்த நீரைப் போலத் தானும் தங்காது தன்னைப் பெற்றவனும் வாழாது செய்யும் இயல்புடையதாகும். ஆகவே பழியஞ்சியே ஒருவன் செல்வம் சேர்க்க வேண்டு மென்பது தெளிவாகின்றது.)

தனியுடைமை – உரிமையும் ஊதியமும் :

நம்நாட்டுப் பண்டையப் பொருளியலறிஞர்கள் யாவரும் தனியுடைமை உரிமையைத் தாங்கியே விதிவகுத்துள்ளனர். காட்டைத் திருத்தி, கழனியாக்கிய மனிதனுக்கு அந்நிலம்

---

* Daven Port

உரிமைப் பொருள் என்று பேசுகின்றார் மனு. குறைந்த அளவிலே அமைந்த நிலம் குடியானவனின் உரிமைச்சொத்து என்று கூறுகின்றார் கௌடில்யர். வள்ளுவரும் அவர்களைப்போலவே உடைமைக்கு ஒருவனுக்கு இருக்கும் உரிமையை ஒப்புக்கொள்ளுகிறார். முதலீடு செய்து பொருள் சேர்ப்பதையும் ஆதரிக்கிறார்.

பொருளீட்டுதற்கான பலதுறைகளிலே வாணிகமும் ஒன்று. வாணிகம் போற்றலுக்கும் வள்ளுவர் ஒரு முறை செய்தார். கொடுப்பதையும் குறையக் கொடுக்காமல் கொள்வதையும் மிகக் கொள்ளாமல் நடுவு நிலைமையுடன் பிறர் பொருளையும் தம் பொருள் போல் போற்றி முதலீடு செய்வோர் வாழ வேண்டுமென்பது அவரது வாக்கு. வாணிகம் செய்வோர் ஊதியம் பெறுவதை அவர் குற்றமெனக் கொண்டாரில்லை. காரல் மார்க்ஸ் * வழி வந்த பொருளியற்புலவர்கள் ஊதியம் † சேர்ப்பது ஊர்ப்புறத்தே வழிப்பறிசெய்வதைப் போன்றது என்று சொல்லுவர். செல்வரை அவர்கள் வெறுக்கலாம். செல்வர்கள் ஊதியத்தை உண்டு வாழ்கின்றார்கள் என்ற காரணத்திற்காக ஊதியத்தையே ஒழிக்கவேண்டும் என்று அவர்கள் சொல்லுவதைத்தான் நாம் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அருவருக்கத்தக்க அட்டைகள் மனித இரத்தத்தை உறிஞ்சி வாழ்கின்றன என்ற காரணத்திற்காக உடலில் இரத்தமே இல்லாதபடி செய்துவிட வேண்டுமென்று கூறினால் யார்தான் ஒப்புக்கொள்ளுவார்கள்?

வாணிகம் செய்து பொருளியற்றலுக்கு வள்ளுவர் அனுமதி வழங்கினாலும் அவரது பாராட்டுதலைச் சிறப்பாகப் பெற்ற தொழில் உழவேயாகும். இயந்திரத் தொழிலை எவரும் போற்றாத காலம் வள்ளுவர் காலம். மக்களின் வாழ்வு உழவின் சார்பிலே பண்பட்ட காலம் வள்ளுவர் காலம். ஆகவேதான் வள்ளுவர் உழவுத் தொழிலே பலவகைப்பட்ட தொழில்களுக்குள்ளும் தலையானது என்றும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வாரென்றும் உலகிற்குச் சொன்னார்.

## பொருளின் தன்மை

பொருளைச் சேர்த்த பெருஞ் செல்வருக்குத் திருவள்ளுவர் பொருளின் தன்மையையும் உணர்த்தினார். ஈட்டி எட்டிய

---

* Karl Marx. † Profit

மட்டும் பாயும் பொருள் பாதாளம் வரைப் பாயும் என்ற கருத் தடங்க ''எஃகதனிற் கூரியதுஇல்'' என்றார். அறத்தையும் இன்பத்தையும் அருளையும் அளிக்கும் வல்லமை அதற்குத்தான் உண்டு எனச் சொன்னார். பொருளின் வல்லமையைச் சொன்ன அவர் அதன் நிலையாமையையும் உணர்த்த மறக்கவில்லை. பெருஞ் செல்வம் வந்து சேருதல், கூத்தாடுமிடத்தில் கூட்டம் சேருவதைப் போன்றது. அது நீங்கிப் போதலும் கூத்து முடிந்தவுடன் கூட்டம் கலைவதைப் போன்றது என்று அவர் குறிப்பிட்டார்.

## பொருளின் பயன்

பொருளின் தன்மையைப் போதித்ததுடன் மட்டும் அவர் நிற்கவில்லை. பொருள் சேர்த்த ஒருவன் அப்பொருளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்றும் போதித்தார். நிறைந்த பெரும் பொருளைப் பெற்ற ஒருவன் அதை உண்டு நுகர்ந்து பிறருக்கும் கொடுத்து வாழவேண்டும். தனது வருங்காலத்துக்கான ஒரு திட்டத்தையும் வகுத்து ஆனமுதலில் அதிகம் செலவாக்காமல் அளவறிந்து அவன் வாழவேண்டும். அவ்வாறு அவன் ஒழுகு வானால் அவன் வாழ்க்கை மிக்கச் சிறப்புடையதாகும். தானும் துய்க்காது பிறருக்கும் கொடுக்காது ஒருவன் ஒழுகு வானெனில் அவனுக்கு மேலும் பல கோடிப் பொருள் உண்டா னாலும் பயனில்லை. அவன் பூமிக்குப் பாரம். அவன் நடுவூருள் பழுத்த நச்சுமரம். பயன் படாத அவனது செல்வமோ எழில் மிக்க, கன்னியொருத்தி இளமையிலேயே முதுமையுற்றாற் போன்ற தன்மையுடையது.

## சமூக நல நாடு*

பிணியையும் பசியையும் தொலைத்து, குடிமக்களுக்கு நல்ல பாதுகாப்பைத் தரும் ஒரு நாட்டைச் சமூக நல நாடு என்று இந் நாளில் அறிஞர் போற்றுவர். மேலை நாடுகளிற்பல குடி மக்களுக்கு இவ்வகையிலே பணிசெய்தலைத் தத்தம் குறிக் கோளாகக் கொண்டு இன்று செயலாற்றுகின்றன. இந்திய நாடு கூட இந்த இலட்சியத்தை நோக்கியே இன்று முன்னேறு கின்றது. பொருளியற்புலவர்கள் போற்றும் இக்கருத்தை அன்றே சொல்லிவைத்தார் வள்ளுவர். மிக்க பசியும் ஓயாத நோயும் அழிவு செய்யும் பகையும் தன்னிடம் சேராமல் நல்ல

* Welfare state

வகையில் நடைபெறுவதே நாடாகும் என்பது திருக்குறளின் விளக்கம். இத்தகைய ஒரு நாட்டை உருவாக்குவதில் அந்நாட்டு அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் பெரும் பங்கு உண்டு என்பது குறளாசிரியரின் குறிப்பு. பொருள்வரும் வழிகளை மேன்மேலும் இயற்றியும்,வந்த பொருளைச் சேர்த்தும், காத்தும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தும் முறைசெய்வதால் அரசாங்கம் இக் குறைகளைத் தவிர்க்க வேண்டும் என்பது அரசாங்கத்திற்கு அவர் விதித்த கட்டளை. செல்வரான அந்நாட்டு மக்கள் தம்மிலே வறியவரின் அழி பசியைத் தீர்த்தலிலே அரசாங்கத் திற்கு உதவ வேண்டும் என்பது செல்வருக்கு அவர் சொல்லும் அறிவுரை.

வள்ளுவரின் கனவு.

ஒரு நாட்டு மக்களனைவரும் தாழ்விலாச் செல்வராக மாற வேண்டும் என்பதே வள்ளுவர்தம் பேரவா. ஏற்றத் தாழ் விலாத ஒரு சமுதாயம் உருவாக வேண்டும் என்பதே அவர்தம் பெருங் கனவு. இந்த இலட்சியம் நிறைவேற வேண்டுமானுல் ஒரு நாட்டிலே வறுமையின் கொடுமை ஒழிய வேண்டும். இரத்தல் எனும் தீமை இல்லாமற் போக வேண்டும். வறுமை யின் கொடுமையை நன்கு உணர்ந்தவர் வள்ளுவர். தீயிடைக் கூடத் தூங்கலாம் ஆனுல் வறுமை நிலையிலே தூங்குதல் அரிது என்பது அவர் வாக்கு. எல்லாத் துன்பங்களுக்கும் பிறப்பிடம் வறுமை என்ற காரணத்தால் வறுமை நோய் பற்றிய ஒரு நாட்டை அவர் நாடாகக் கருதவில்லை; இரந்துண்ணுபவர் வாழும் ஒரு நாட்டை நாடென்று சொல்ல இசையவில்லை. இரத்தலை எண்ணுந்தோறும் வள்ளுவரது உள்ளம் உருகியது. ஆகவே அத்தகைய சமுதாயத்தை மாற்றியமைக்க அவர் விரும்பியது வியப்பன்று. ஆனுல் அந்த முயற்சியிலும் அவர் அறநெறியை மறந்து விடவில்லை. இன்மை புகுந்ததன் காரணம் இறைவன் திருவுள்ளமல்ல; முயற்சியின்மையே என்று அவர் முடிவுகட்டினுர். தளராத முயற்சியுடன் எல்லோரும் வினை செய்யவேண்டும் என்று எடுத்துரைத்தார். ஒரு நாட்டின் வறுமைப்பட்டோர் யாவரும் தாழ்விலாச் செல்வராக மாறுவ தற்குச் சில காலம் பிடிக்கும் என்பதை அவர் உணர்ந்தார் போலும். ஆகவே அந்தப் பொன்னுள் வரும் வரை பொரு ளற்ருரும் வாழவேண்டுமென்பதற்காக ஒப்புரவறிக என்று செல்வரை நோக்கி அவர் உபதேசித்தார். வறுமைப் பிணியைத்

தொலைக்கும் முயற்சியிலே செல்வரும் உதவ வேண்டும் என்று அவர் விரும்பினார். செல்வர் முயற்சி செய்து சேர்த்த பொருளெல்லாம் தக்கவர்க்கு உதவி செய்வதற்கே யாகும்; ஊருணி நீரைப்போன்ற அச் செல்வம் எல்லோருக்கும் பயன்பட வேண்டியதாகும் என்பது அவர் கொள்கை. செல்வரின் பொருளை ஊருணி நீருக்கு ஒப்பிட்டதனால் நல்கூர்ந்தார் யாவரும் அச் செல்வத்தைத் தங்கள் வசதிப்படி நுகரலாம் என்று வறுமைப் பட்டவரை நோக்கி அவர் சொல்லவில்லை. தாம் பெற்ற செல்வத்தை ஊருணி நீர் போல நினைந்து வறுமைப் பட்டாருக்கு வழங்க வேண்டுமென்று செல்வச் சீமான்களைப் பார்த்தே அவர் செப்பினார். வறுமையுற்றாரை இவ்வாறு வாழச் செய்து இறுதியிலே அவர்களும் தாழ்விலாச் செல்வராக மாறவேண்டும் என்ற தனது இலட்சியம் நிறைவேறவே செல்வருக்கும் வறியவருக்கும் இப் போதனைகளை அவர் செய்தார்.

## வள்ளுவமும் பிற கொள்கைகளும்

தனியுடைமை என்னும் நிலத்திலே, ஊதியம் என்னும் தண்ணீர் பாய, முளைத்தது முதலாளித்துவம் என்னும் பயிர். தண்ணீரையே நம்பித் தழைக்கும் பயிர்போல ஊதியம் ஒன்றையே பெருநோக்காகக் கொண்டு வளருவது முதலாளித்துவ அமைப்பு. அத்தகைய சமுதாய அமைப்பு, கட்டுப்பாட்டைக் கண்டறியாதது. சுதந்திரமாகத் தொழில் செய்ய எல்லாருக்கும் ஒரு சூழ்நிலையை நல்குவது; எனவே ஊதியத்தைப் பெருக்கவேண்டும், அடுத்தவரைவிட அதிகப் பொருள் சேர்க்க வேண்டும் என்ற போட்டி அந்நிலையிலே பெருகுவது இயல்பு. பிறரை முந்தவேண்டும் என்ற இந்தப் போட்டி மனப்பான்மையில் தான் முதலாளித்துவச் சுறண்டல் பிறக்கிறது என்பது பொதுவுடைமைக் கொள்கையினரின் வாதம். ஊதியம் சுறண்டற் பொருளாக மாறும் நிலையில் வள்ளுவம் முதலாளித்துவத்தை விட்டு விலகுகிறது. ஏனென்றால் வாணிகம் கொள்ளை முறையாக மாறுவதை வள்ளுவர் விரும்பாதவர். சமன்செய்து சீர்தூக்கும் துலாக்கோல் போல வாணிகர் தொழில் செய்ய வேண்டும் என்று வழியமைத்தவரல்லவா அவர்! அதுபோல, சுதந்திரமும் தனக்குச் சாதகமான சூழ்நிலையுமிருப்பதனால் பெரிய மீன் சிறிய மீன்களை விழுங்குகின்றது. பெருவணிகர் சிறு வணிகரை நாளடைவில் ஒழிக்கின்றார். இதனால் நாட்டு மக்களிடையே ஏற்றத் தாழ்வு

மேலும் அதிகரிக்கின்றது. இத்தகைய போக்கை முதலாளித்துவ அமைப்பில் பொதுவுடைமைக்கொள்கையினர் காண்பதால் அவர்கள் அத்தகைய அமைப்பைச் சாடுகின்றனர். வளமான சோலை நிலம் ஒருபுறமும், வறண்ட பாலைநிலம் மற்ருேர்புறமும் மனிதனின் சுயநலத்தால் சுறண்டற்கொள்கையால், ஓர் நாட்டில் ஏற்படுவதை விரும்பாத அவர்கள், பொது நலம் எல்லோருக்கும் சொந்தம் என்ற கருத்தை நிலைநாட்டத் 'திறமைக்கேற்ற வேலை, தேவைக்கேற்ற கூலி' என்ற புது மொழியைப் போதிக்கின்றனர். ஒரு நாட்டு மக்களனைவரும் தாழ்விலாச் செல்வராக மாற வேண்டும் என்ற கொள்கையைக் கருவாகக் கொண்ட வள்ளுவமும், பொதுநலம் எல்லோருக்கும் சொந்தம் என்ற போதனையைக் குறியாகக்கொண்ட பொதுவுடைமைக் கொள்கையும் அவற்றின் இலட்சியத்திலே ஒன்றுபட்டனவேயொழிய தங்கள் இலட்சியத்தையடைய இவ்விரு தத்துவங்களும் மேற்கொள்ளும் முறைகளிலே இவை பெரிதும் மாறுபட்டவையே.

வள்ளுவமும் பொதுவுடைமைக் கொள்கையும்!

இரப்பவரே இருக்கக்கூடாது ஒரு நாட்டில் என்று எண்ணியதற்காகப் பேரறிவாளன் திரு ஊருணி நீர்போன்றது எனப் போதித்ததற்காக வள்ளுவத்தையும் பொதுவுடைமைக் கொள்கைய்யும் பொருத்திப் பேசுகின்றனர் இன்று சிலர். இவ்விரு கோட்பாடுகளுக்கு மிடையேயுள்ள வேற்றுமைகளை உணராதவர்களே அவர்கள். வள்ளுவம் தூய்மையான வெண்ணிறம், பொது வுடைமைக் கொள்கை அச்சுறுத்தும் செந்நிறம்; காமாலைக் கண்ணனுக்கோவெனின் இவை வெண்ணிறமுமல்ல செந்நிறமுமல்ல; நல்ல மஞ்சள் நிறம். ஏனென்ருல் அவன் காண்பவை யாவும் அந்த மங்கள நிறம்; வண்ணங்களைப் பிரித்தறியும் உணர்வு அவனுக்கில்லை. அதைப்போலவே எண்ணங்களைப் பகுத்தறியுமுணர்வு சிலருக்கில்லை, ஆகவேதான் வள்ளுவமும் பொதுவுடைமைக் கொள்கையும் பெருமளவில் ஒற்றுமை கொண்டவை என அவர்கள் பேசுகின்றனர்.

வள்ளுவமும் பொதுவுடைமைக் கொள்கையும் அடிப்படையிலேயே வேறுபட்டவை. ஒன்றிற்கொன்று மாறுபட்டவை. வள்ளுவம் அறநெறியின் அடிப்படையிலே எழுந்தது. பொதுவுடைமைக் கொள்கை அறநெறியை மறந்தது. வள்ளுவம்

இன்னா செய்யாமையை வலியுறுத்துவது; இறையின் பெருமையை எடுத்துச் சொல்லுவது.

பொருட்களிலே பற்றுக்கொண்டு அவற்றைப் பெருக்குவதன் மூலம் தனது வாழ்க்கைத் தரத்தைப் பெருக்கிக்கொள்ள மனிதன் முயலவேண்டும் என்ற பொதுவுடைமைக் கொள்கையினரின் தத்துவம் வள்ளுவரின் கருத்திற்குப் புறம்பானதாகும். பொருட் செல்வம் இழிந்தவரிடத்திலுமுள்ளது; உயர்ந்தவரிடத்தில் மட்டுமுள்ள அருட்செல்வமே சிறந்த செல்வமாகும் என்பது வள்ளுவர் கருத்து. இத்தகைய உயர்ந்த தத்துவங்களையும், நீதிநெறி விளக்கங்களையும், ஆன்ம வளர்ச்சிக்கு இறைவன்பால் அகலாத பற்றையும் அவரது நூலில் பரக்கக் காணலாம். பொதுவுடைமைக் கொள்கையினர் இத்தகைய சமயக் கருத்துக்களையும் சாத்திரத் தத்துவங்களையும் "ஏழைகளின் அபின்" என்று சாடுவர். "சமயத்தின் முதற் சொல்லே ஒரு பொய்" என்பது எஞ்சல்ஸின்* கூற்று; வள்ளுவர் கற்பிக்கும் நீதி எங்கே? பொதுவுடைமைக் கொள்கையினரின் கருத்து எங்கே?

வள்ளுவரின் வாய்மொழிக்கும் பொதுவுடைமைக் கொள்கையரின் போதனைக்குமிடையே யுள்ள முக்கிய வேற்றுமை "செயலையும் அவற்றின் பயனையும்" பற்றியது. பயன் நன்றாயின் மேற்கொள்ளும் செயலும் நன்றே என்பது மார்க்ஸீய மாணாக்கரின் மனக்கருத்து. இக் கொள்கையை அடியோடு மறுப்பவர் வள்ளுவர். பயனைப் பற்றி எண்ணியவரல்லர் அவர். எக்காலத்தும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வதையே சிந்தைமேற் கொண்டவர் அவர். பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும் சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவுள்ள செயல்களை ஒருவன் செய்யக்கூடாது என்று கூறும் வள்ளுவருக்கும் அக்கருத்திலே முற்றிலும் முரண்படும் காரல் மார்க்சுக்கும் ஒற்றுமை கற்பிப்பது பொருந்துமா ?

பொதுவுடைமைக் கொள்கையினரின் இறுதிக் குறிக்கோள் ஒரு நாட்டிலே வர்க்கமற்ற சமுதாயத்தை உருவாக்குவதாகும். அத்தகைய சமுதாயத்திலே அரசாங்கம் உதிர்ந்துவிடும் என்பது அவர்கள் கருத்து. அதாவது தங்கள் குறிக்கோளைத் தாங்கள் எய்திய பின்னர் அங்கு அரசாங்கம் தேவை

* Eengels

யில்லை என்பது அவர்களது கொள்கை. இந்தக் கருத்திற்கும் மாறுபட்டதோர் கொள்கையையே வள்ளுவர் வலியுறுத்துகிறார். வேந்தமைவில்லாத நாடு வேறு எல்லா நன்மைகளையும் அடைந்திருந்த போதிலும் அவற்றாற் பயன் பெறாது போகும் என்பது அவர் வாக்கு. வள்ளுவர் வகுத்த வழியும் காரல் மார்க்சு கண்ட பாதையும் எங்கேயாவது கூடுகின்றனவா?

தங்கள் இலட்சியங்களிலே ஒற்றுமைப் பட்டிருக்கலாம் இவ்விரு கோட்பாடுகளும். ஆனால் தத்தம் குறிக்கோள்களை எய்தும் முயற்சியிலே அதன் தன்மையிலே முறையிலே இவை பெரிதும் மாறுபட்டவை; இதை நாம் அவசியம் உணர வேண்டும்.

## வள்ளுவத்தின் வழி நடப்போம்

பொருளியற் கருத்துக்கள் அறநெறிச் சார்பிலே வளர வேண்டுமென வலியுறுத்துவது, அணுக்குண்டு யுகத்திலே பித்தன் ஒருவனின் பிதற்றல் போலத் தோன்றலாம். புதுமை மோகத்திலே அறநெறியை மறந்து விட்ட இன்றைய உலகம் தனது அழிவுப் பாதையை நோக்கியே விரைகிறது என்பது தெளிவு. இந்த வேகம் குறைய வேண்டும், இந்தப் போக்கு மாறவேண்டும், அதற்கான விசை திருக்குறளில்தான் இருக்கின்றது. வழிதப்பி முன்னேறும் உலகத்திற்கு உற்றதுணை வள்ளுவமென்னும் வழிகாட்டி. திசைமாறிச்செல்லும் உலகத்திற்கு அது செல்லவேண்டிய சரியான திக்கை உணர்த்த வல்லது திருக்குறளென்னும் திசைகாட்டி. கணக்கிட்டுச் சொன்னான் வரலாற்று ஆசிரியன் டாயின்பி*: அவன் தயாரித்த பட்டியலிலே 21 பிணங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. அத்தனையும் இதுவரை வரலாறு அறிந்த நாகரிகங்களின் சவங்கள். இன்றைய நாகரிகம் அந்தப் பட்டியலிலே அடுத்த 22-வது இடத்தை அடைந்து விடக்கூடாது. ஆம், அது சாகக்கூடாது. வாழவேண்டும். பலகாலம் நிலைபெற்று வாழவேண்டும். அதற்குரிய சாவா மருந்து வள்ளுவம். உலகத்தின் பாசக் கயிற்றைத் தங்கள் கைகளில் ஏந்தியுள்ளவர்கள் இனியாவது வள்ளுவர் வகுத்த வழியிலே நடப்பார்களாக!

---

* Toynbee

# முன்னுரை

## மெய்யறிவு

நாம் ஒரு பொருளை நேரடியாகப் பார்ப்பதில்லை; உலகப் பொருள்களை யெல்லாம் நேருக்கு நேராய்ப் பார்த்து உணர்ந்து கொண்டதாகவும் எண்ணிக்கொள்கின்றோம்; முடிவும் கட்டி விடுகின்றோம்; பேசுகின்றோம்; எழுதவும் செய்கின்றோம், எவ்வளவு அழகாயிருக்கும் அந்த முடிவுகள் என்பது சொல்லத் தேவையில்லை.

உலகப் பொருள்களின், சாயல்கள் – நிழல்கள் நம்முடைய கண்களின் திரைகளிலே வந்து தலைகீழாக விழுகின்றன. கண்ணாடிக்குள் மலையின் நிழலைப் பார்ப்பது போல, ஏதோ ஒரு வகையாக அந்தப் பொருள்களின் நிழல்களை யெல்லாம் பார்க்கின்றோம். உடனே 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்ற முடிவுக்கு வருவதும் வழக்கமாகி விடுகின்றது.

இவ்வாறு, ஐம்பொறி முதலிய கருவிகளின் துணைகொண்டு அறியும் அறிவெல்லாம் நிரம்பியஅறிவாகாது. உயிரால் உற்று நோக்கி அறியக்கூடிய வழி ஒன்று உண்டு. உயிரே உடம்பில் இல்லை என்று கூறிக்கொள்கின்ற அளவுக்கு அறிவு வளர்ந்து விட்ட பிறகு, உயிரால் நோக்குவதாவது அறிவதாவது இவை யெல்லாம் வெறும் பித்தலாட்டம் என்றுதான் சொல்லத் தோன்றும். அந்த நிலையிலிருந்து தப்பித் தவறி மேல்வந்து உயிரால் நோக்கி அறியும் பழக்கத்தைப் பெற்றால், அது ஒரு சிறிது சிறந்தது தான்; ஆனால் அதுவும் மெய்யறிவாக மாட்டாது. என்றாலும், இவற்றின் துணைகொண்டு ஒரு வேட்கையைப் பிறப்பித்துக்கொண்டு நல்லாசிரியரின் துணையினால் மெய்ப் பொருளை உணர்ந்து, அந்த மெய்யுணர்வின் துணையால் உணரும் உணர்வே உண்மை உணர்வாகும்.

*அறிவறி வென்றங் கரற்றும் உலகம்*
*அறிவறி யாமை யாரும் அறியார்*
*அறிவறி யாமை கடந்தறி வாளுல்*
*அறிவறி யாமை அழகிய வாறே* — திருமந்திரம்.

உணராத காலத்தில் அறிவென்று கொண்டது உணர்ந்த காலத்தில் அறியாமையாக விளங்கும். மெய்யறிவு இன்னதென்று அறியாமற் கிடந்த நிலையைக் கடந்து மெய்யறிவு உடையவராளுல், அதன் பின்பு முன்பு அறிந்த பொய்மையறிவாகிய மயக்க அறிவை அறியாமைதான் அழகிய தன்மையுடையதாகும். 'அறிதோறறியாமை கண்டற்றுல்' என்று திருவள்ளுவர் கூறியதையும் நோக்குக. 'உரை உணர் விறந்து நின்றுணர்வதோர் உணர்வே' என்றும் 'நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே' என்றும் 'உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே' என்றும் கூறிய வண்ணம், நுனித்து உணர்வது தான் மெய்யுணர்வாகும்.

ஆசிரியர் திருவள்ளுவரும் அத்தகைய மெய்யுணர்வினர் தாமா? என்பதை அவர் நூலின் துணைகொண்டு இனி நோக்குவோம். மெய்யறிஞர் என்ற தலைப்பு இங்கே மெய்யுணர்வினர் என்ற பொருள்படக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே அவர் மெய்யுணர்வினர் என்ற நிலைமையையே ஆராய்வோம்.

அறத்தை முதலாகக் கொண்டு வள்ளுவர் நூல் தொடங்குகின்றுர். இல்லறத்தைப் பற்றி முதலிலும், துறவறத்தைப் பற்றி அதன் பின்பும், இல்லறத்தார்கள் துறவறப் பெரியாரைத் துணையாகக் கொண்டு, அந்தப் பெரியோரைப் பிழையாமல் அறநெறி வழி நடாத்துகின்ற அரசு, அமைச்சு முதலியவற்றை அதன் பின்னரும், தனிப்பட்ட சான்றுண்மை வாய்ந்த சான்றேர், குடிப்பிறப்பாளர், உழவர், மருத்துவர் முதலியவர்களைப் பற்றி அவற்றின் பின்னரும், இவர்களின் அகவொழுக்கமாகிய காதல் வாழ்வினை ஈற்றிலும் வைத்துக் கூறி முடிக்கின்றுர். இவ்வாறு கூறப்படுகின்ற எல்லாவற்றுக்கும் சுருக்கமாக, நீத்தார் பெருமை அறன் வலியுறுத்தல் என்ற இரண்டு பகுதியையும் அமைக்கின்றுர். அறன் வலியுறுத்தல் இல்லறத்தாரை நோக்கிக் கூறப்பட்டது. நீத்தார் பெருமை துறவறத்தாரைப் பற்றிக் கூறப்பட்டது. நூல் வைத்த வைப்பு முறைமயை நோக்கிளுல் வான் சிறப்பின் பின்னர் அறன் வலியுறுத்தலையும் அதன் பின்பு நீத்தார் பெருமையையும் வைத்தல்

வேண்டும். ஏன் அவ்வாறு வைக்கவில்லை; தம்முன்னர்க் காணப்படுங் கூட்டங்களில் துறவோர் கூட்டமும் ஒன்று. அவர்கள் எவ்வாறு காணப்பட்டார்கள்?

இருமை வகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டவர்கள், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்களாகிக் கூற்றத்திற்குந் தப்பிக் குதித்தவர்கள், உரனென்னும் தோட்டியால் ஐம்புல யானைகளை அடக்கியவர்கள், செயற்கரிய செய்யும் பெரியவர் கள், மெய்யுணர்ந்த நிறைமொழி மாந்தர்கள், குணமென்னும் குன்றேறி நின்றவர்கள், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட அந்தணர்கள், மருள் தீர்ந்த மாசறு காட்சியவர், புலம் வென்ற புன்மையில் காட்சியவர், யான் எனது என்னும் செருக்கு அறுத்தவர்கள், ஆரா இயற்கை அவா நீத்துப் பேரா இயற்கை பெற்றவர்கள், செயிரிற்றலைப் பிரிந்த காட்சியவர், ஆமை போல் ஐந்தடக்கியவர்கள், நிலையில் திரியாதடங்கிய மலையினும் சிறந்த மாட்சிமை யுடையவர்கள், அளவென்னும் ஆற்றல் புரிந்தவர்கள் என்றெல்லாம் பாராட்டக்கூடிய துறவிகள் தமக் கென வாழாப் பிறர்க்குரியாளர்களாக இலங்கி அறம் முதலியன உரைத்துத் தமிழகத்தை வாழ வைத்தவர்கள். இவர்களைப் பார்த்தார் வள்ளுவர். இவர்கள் பெருமை யெல்லாம் கண்முன் வந்து நிற்கின்றன. அளந்து பார்க்கிறார் வள்ளுவர். எண்ணத் தொலையாத அளவு பெருமை. எவ் வளவோ ஊழிக்காலம் இந்த உலகத்தில் இறந்தவர்களை யெல்லாம் எண்ணினாலும் எண்ணலாம்; அம்மம்ம! இந்த அறவோர்களின் பெருமையை எண்ணமுடியாது என்று நினைத்தார்.

இந்தத் துறவிகள் கூட்டத்துள் தனக்கு மெய்ப்பொரு ளுணர்த்திய ஆசிரியரும் நிற்கின்றார். மறை மொழிகளை யெல்லாம் உணர்த்திய நிறைமொழி மாந்தராக நிற்கின்றார். அவரையும் பார்த்தார். எவ்வளவோ மறைகள், நுட்பமான பயிற்சிகள், நுட்பமான மொழிகள் இவைகளெல்லாம் வழி வழி யாக எழுதா மொழிகளாக வந்து உலவுகின்றன. அவற்றை யெல்லாம் விளக்கிய தமது ஆசிரியரின் மறை மொழியை நினைத்தார். அதனால் அவர் பெருமையும் கண்டார். இந்த நிலத்திலேயே அவர் கூறும் மொழிகளால் — பயிற்சிகளால் தெளிவுக் காட்சியை அடையலாம் என்பதை வற்புறுத்தினார்; ஆனால் அந்த மொழிகளை, மறைகளை, பயிற்சிகளைத் தக்கார்

அல்லாதார்க்கு மொழிய வொண்ணுத வண்ணம் ஆணையிட்டு மொழிந்திருக்கிறுர்கள் பெரியோர்கள். அதனுலேதான் ஆசிரியர் தொல்காப்பியனுரும்,

***நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த***
***மறை மொழிதானே மந்திரம் என்ப***

என்று கூறியருளினுர். அவர் கூறும் மறைமொழியைக் கேட்டா லன்றி அவர் பெருமையை அறிதல் அரிதுதான். அத்தகைய மறை பொருட் கூறுகளை'யெல்லாம் நல்லாசிரியன்பால் திருவள்ளுவர் கேட்டு உணர்ந்தார் என்பதற்கும் அவர்கள் மொழியே நிறை மொழியாம் என்பதற்கும் அவர் குறட் பாடலே சான்ருகும்.

இவ்வாறு நிறைமொழி மாந்தரை ஒரு கணப்போது நோக்கி, இவர்களைப் பற்றித் துறவறவியல் என்று பின்னர் வகுத்துக் கூறப் போகின்றவர் துறவோரின் சிறப்புக் கருதி முதற்கண் இவர்கள் பெருமையைக் கூறுவேன் என்று அவர் பெருமையைக் கூறிவிட்டுப், பின்பு இல்லறத்தாரைப் பார்த்து அவர்களுக்கு அறத்தை வற்புறுத்துவேன் என்று கருதி அதை வலியுறுத்தினுர்.

## துறவு

'துறவறமாவது இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம்' என்று பரிமே லழகர் எழுதியுள்ளார்; இது மிகவும் பொருத்தம். இல்லறத்தி லேயே இருந்துகொண்டு மெய்ப்பொருளுணர்ந்து தெளிவுக் காட்சியைப் பெற்றுத் துறவோர்க்கும் ஆசிரியராக விளங்கிய கமலை ஞானப்பிரகாசர் போன்றவர்கள் மிகப் பலர் இந்த நாட்டிலே இருந்தனர். பண்டை முனிவர்களில் அகத்தியர், வசிட்டர் முதலிய மிகப் பலர் இல்லறத்தினராதலும் தெளிக. துறவறத்திற்குச் சென்றும் மெய்ப் பொருளை உணராமல் புறத் திற்கு மட்டும் துறவியாய் வாழ்ந்தால் அந்தோ! அவர்களை இரண்டும் கெட்டவர்கள் என்றுதான் சொல்லுதல் வேண்டும். இத்தகையவர்களிடத்தில் விழிப்பாய் இருத்தல் வேண்டுமென்று தான் திருவள்ளுவரும் வற்புறுத்துகின்ருர். ஆகவே துறவு என்பது எந்நிலையிலிருந்தாலும் மெய்யுணர்வும் மாசறு காட்சி யும் பெற்று, யான் — எனது என்னும் செருக்கினை அறுப்பது.

## தெளிநிலைக் காட்சி

மக்கள் ஐந்து நிலையை அடைகிறார்கள் - நனவு (விழிப்பு) கனவு, துயில், பெருந்துயில், உயிர்ப்படக்கம் என்ற இந்த ஐந்து நிலைமைகளையும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவனும் அடைகின்றான். இந்த ஐந்து நிலைகளையும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்று வடமொழியிற் கூறுவார்கள். மெய்யுணர்வு பெறுதற்கும் தெளிவுக் காட்சி யடைதற்கும் நனவு நிலையிலேயே (விழித்துக் கொண்டிருக்கும் போதே) ஏனைக் கனவு, துயில், பெருந்துயில் ஆகிய நிலைகளை வரவழைக்கப் பழகுதல் வேண்டும். அவ்வாறு பழகிப் பேருறக்க நிலையை விழிப்பில் வரவழைத்து அதைக் கடந்தால் உயிர்ப்படக்க நிலை தெரியவரும். அத்தகைய நிலையை அடைந்தவர்க்கு எப்பொழுதும் விழிப்பு நிலையிலேயே பேருறக்க (பெருந்துயில்) நிலையிற் காணும் காட்சிகள் புலனாகும். இத்தகைய நிலை எதற்கு என்று கேட்கலாம். உயிர் இருக்கும் இடத்திற்கும் இறை நிலை நிற்கும் இடத்திற்கும் இடையில் பல திரைகள் (தத்துவக் கூட்டங்கள்) இருட் படலங்களாக மறைந்து நிற்கின்றன. நாம் உறங்கும்போது அந்த இருட் படலங்கள் மடிந்து விடுகின்றன. அவ்வாறு மடிந்த நேரத்தில் உயிர் நிலைக்கும் இறைநிலைக்கும் இடைவெளியில் யாதொரு தட்டுத் தடையும் இல்லை. அப்போது இறை நிலையை உயிர் உணரலாம். ஆனால் அப்போது மனம் ஓய்ந்து கிடக்கின்ற காரணத்தினாலே, உயிராலே இறை நிலையை உணரமுடியவில்லை. உயிரும் ஒடுங்கிக் கிடக்கின்றது. விழிப்பு நிலையில் பேருறக்க நிலையை வரவழைத்தற்கு உரிய பயிற்சிகள் உண்டு, அவற்றை மெய்யுணர்ந்த சான்றோர்பால் தெளிந்து அந்த நிலையை வரவழைத்தால் அப்போது மனம் உயிரினிடத்து அணுகி நின்று ஒடுங்க, உயிர் இறைநிலையிற் சென்று அணுகி நிற்க, அதனாற் காணும் ஒளி நிலையும் இன்ப நிலையும் தெள்ளிதிற் புலனாகிவிடும். அப்போது உள்ள நிலைமைதான் துறவுநிலை. அதுதான் மெய்யுணர்வு நிலை. அந் நிலைதான் பிறப்பினை அறுக்கும்.

**இருணீங்கி யின்பம் பயக்கும் மருணீங்கி**
**மாசறு காட்சியவர்க் கு** என்றும்

**ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு** என்றும்

திருவள்ளுவர் கூறியன வெல்லாம் மேற்கூறிய நனவிற் பேருறக்க நிலையில் உணர்கின்ற உணர்வினையே.

உள்ளமானது ஓர்த்து, அஃதாவது கூர்த்தது உள்நோக்கினால் நோக்கி, என்றும் உள்ளதாகிய மெய்ப்பொருளை, இறைநிலையை உணருமானால் (உயிர்ப்படக்கநிலையிற் காணும் காட்சி யுணர் வினைப் பெறுமானால்) அந்த உயிர் மீண்டும் இந்த மண்ணிடைப் பிறத்தல் இல்லை. ஏன் பிறத்தல் இல்லை? உயிரைச் சூழ்ந்து மூடிநிற்கின்ற இருட் படலங்களும் உயிரிற் பின்னிக் கலந்து நிற்கின்ற ஆணவ இருளும் விலகிவிடுகின்றன; விலகவே உண்மையான மெய்ப் பொருளை அறிய முடிகிறது. அழுக்கு நீங்கிய உயிர், தூய மாசற்ற இறையருள் வெள்ளத்திற் கலந்து இன்புறுவதேயன்றி அது மீண்டும் பிறத்தல் இல்லை. இத்தகைய நிலையினரே தீரத் துறந்தவர்கள். இந் நிலையை அடையாதவர்கள் எல்லோரும் மயக்க உணர்வினராகி இருள் வலையில் அகப்பட்டவர்களே யாவார்கள். அதனைக் கருதியே நாயனார்,

**தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி**
**வலைப்பட்டார் மற்றை யவர்** என்றும்,
**தவம்செய்வார் தங்கருமம் செய்வார் மற்றல்லார்**
**அவம்செய்வார் ஆசையுட் பட்டு** என்றும் அருளிச் செய்தனர்.

திருவள்ளுவர், ஓர்த் துள்ளம் உள்ளது உணர்ந்த மெய் யறிஞர்தாம். அவர் போன்ற உணர்வுடையார்களுக்கே உலகம் முதலிய பொருள்களெல்லாம் தெளிவாக விளங்கும். இனி, திருவள்ளுவர் இறை, உலகம், உயிர், மனம், அருள், தெருள், மறுமை, ஊழ், தவம், மெய்யுணர்வு, பேராஇற்கை முதலிய பொருள்களைப் பற்றிக் கூறுகின்ற வற்றை முறைப்படி நோக்குவோம்.

## 1. இறை நிலை

தமிழ் எழுத்துக்களை முதன்முதல் வகுத்தவர்கள் வினையின் நீங்கி விளங்கிய அறிவுடையவர்கள். அவர்கள் தமிழ் எழுத்துக் களை வகுத்த வகுப்பிலேயே மெய்யுணர்வின் பயனை ஒருவாறு நுட்பமாக விளக்கியிருக்கின்றார்கள். உயிரெழுத்து என்றும், மெய்யெழுத்து என்றும், உயிர் மெய்யெழுத்து என்றும், குற்றிய லுகரமென்றும், மற்றும் ஐகார ஔகார மகரக் குறுக்கங்கள் என்றும், ஆய்த எழுத்தென்றும் வகுத்த வகுப்பெல்லாம் பலவகைநுட்பக் குறிப்பின் அடிப்படையிலேதான் வகுக்கப்

பட்டுள்ளன. எழுத்துக்களைச் சொல்ல மனத்தில் நினைத்த அளவில் உந்தியிலிருந்து காற்றைப் பிறப்பிக்கும் பொழுது அதற்கு உந்தியில் வாய் நெகிழ்கின்ற அளவிலேயே அகரம் பிறந்துவிடுகின்றது. அதுதானே தனித்து இயங்குவது மன்றி உயிரெழுத்துக்களுக்கும் உயிராக இலங்கி அடிப்படையாக நின்று பிறப்பிக்கின்றது. அதுவுமன்றி மெய்யெழுத்துக்களுக்கும் அடிப்படையாக நின்று பிறப்பித்து அவற்றிற்குச் சரியாக நின்று இயக்கியும் அவற்ருெடு ஒன்ருக நின்று இயக்கியும் உதவுகின்றது. ஏனை உயிர்களெல்லாம் மெய்யெழுத்தை இயக்கினும் எல்லாவற்றிற்கும் அடிப்படை அகரம் தான். அதுபோல இறைவனும் தன்னியல்பினுல் இயங்கியும் ஏனை உயிர்க்கு உயிராக இருந்து இயக்கியும் மெய்களிற் கலந்து நின்று உறுதுணை செய்தும் விளங்குகின்ருன். இவ்வாறு தமிழ் எழுத்துக் களிலேயே இறைவனின் முதன்மையையும் உயிர் உடல்களின் இயல்பினையும் முன்னோர் அமைத்துத் தந்த மரபின் செப்பத்தை உணர்ந்த நாயனுர் தாமும் அவர்கள் உணர்வினைப் பாராட்டி உவமையாக எடுத்தாண்டு,

> அகரம் முதல எழுத்தெல்லா மாதி
> பகவன் முதற்றே யுலகு

என்று அருளிச் செய்தனர். இதுமுதலாக எட்டுக் குறள்களில் எண்வகைக் குணங்களை இறைவனுக்குக் கூறி, எண்குணத்தான் தாளை வணங்காத் தலைகளாற் பயனில்லை யென்றும் கூறியருளினுர். இதனுல் நாம் அறிவது ஒன்று உண்டு. இறைவன் குணமிலி, (நிர்க்குணன்) என்றும் உலகமெல்லாம் பொய்யென்றும் உயிரினங்கள் பலவல்ல – உயிரென்பவையே இல்லை என்றும் கூறுகின்ற கூற்ருளிகளின் கருத்தும் பொருந்தாது என்பதுதான் நாம் அறியவேண்டுவது. அதுவுமன்றி உலகம், உயிர், முதல்வன் என்ற முப்பொருள்கள் உண்டென்றும் எல்லாவற்றையும் (அகரத்தைப்போல) இறைவன் ஒன்ருகியும் வேருகியும் உடனுகியும் நின்று இயக்குகின்ருன் என்பதும் தெள்ளத்தெளிய வேண்டுவனவாகும். இந்த முப்பொருள் உண்மை முதற் குறளிலேயே அமைந்துள்ளது.

அகரம் ஒன்ருகியும் வேருகியும் உடனுகியும் நிற்றல் காண்க. 'க' என்ற எழுத்தைச் சொல்லும்போது முதலில் அடிப்படையில் அகரம் வேருகி நின்று பிறப்பிக்கின்றது. 'க்' என்ற மெய்யெழுத்தில் ஏறி ஒன்ருக நின்று க, என்னும்

உயிர் மெய்யெழுத்தாக இயக்குகின்றது. 'கசட தபற' என்றும் 'ககரம்' என்றும் மெய்யெழுத்தைக் குறித்துச் சொல்லும்போது சாரியையாக உடனாகியும் நிற்கின்றது. இவ்வாறே இறைவன் உலகத் தோற்றத்திற்கு அடிப்படையாக உலகத்தின் வேறாக நின்று தன்னிலொடுங்கிய உலகத்தைத் தோற்றுவித்தும், ஒன்றாக நின்று உலகம், உயிர், யவற்றை இயக்கியும், உடனாகி நின்று துணைசெய்தும், ஒரே காலத்திலேயே நிகழ்த்துதலைப் பொருத்திக் காண்க. இவையெல்லாம் விரிப்பிற் பெருகும்.

ஆகவே இறைவன் முதன்மை, தூய அறிவுடைமை, அருளுடைமை, நடுநிலைமை, ஒளியுடைமை, பகையின்மை, உவமையின்மை, அறமுடைமை ஆகிய எண்குணங்கள் உடையான் என்பது திருவள்ளுவர் கண்ட முடிவு. மலர்மிசை ஏகினான் என்பது அருளுடைமையைக் குறித்தது. வேண்டுதல் வேண்டாமையிலான் என்பது நடுவுநிலைமையைக் குறித்தது. பொறிவாயிலைந்தவித்தான் என்பது புலப்பகையின்மையை விளக்கிற்று. இருள்சேர் இருவினையும் சேரா என்பது ஒளியுடைமையை உணர்த்திற்று.

எல்லாப் பொருள்களுக்கும் தான்சார்பாக இருந்து தனக்கொரு சார்பில்லாத சார்பாக நிற்றலும், எல்லாப் பொருள்களுக்கும் பற்றாக நின்று தனக்கு ஒரு பற்றுக்கோடில்லாமல் நிற்பதும் இறைவனது முதன்மையின்கண் அடங்கும். இதனையே தன்வயத்தனாதல் என்று கூறுவர். எட்டுக்குணமென்று வரையறை செய்தல் ஒன்று. இனி, எண்குணம் என்பதனை வினைத்தொகையாக்கி நம்மால் எண்ணப்படுகின்ற குணங்கள் எல்லாவற்றையும் உடையவன் என்று இரட்டுற மொழிதலாகவும் ஒரு பொருள் சேரன்மாதேவிப் பண்ணையார், சு. ஆவுடைநாயகம் பிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள்; அதுவும் மிகவும் சாலும் என்க. அடிசேர்ந்தார்க்கு இடும்பையில எனவே அவன் இன்பவடிவினன் என்பதும் அடியடைந்தார் பேரின்ப முறுவர் என்பதும் உரைத்துக்கொள்க.

அடி என்பது இறைவனது அருள் என்று கூறுவார்கள். உயிரானது இறை நிலைக்கும் தனக்கும் இடையில் நிற்கும் இருட்படலங்களை அவன் துணைகொண்டு ஒதுங்கச்செய்து அவனை அணுகி நிற்றல்தான் அடியடைதலாகும். அப்போது அவனது அருளைப் பெறுகின்றானதலின் அருளாகிய அடியை

அடைந்தான் என்று கூறினர். இந்நிகழ்ச்சிகளெல்லாம் உயிர் உடம்பின் கண்ணிருக்கும் போதே அடைய வேண்டியபேறுகள். செத்துப்போன பின்பு போய் அடி அடைதல் என்பது முன்பு அடையாதார்க்கு இல்லை. அதற்காகவே அடியடைதலை வற்புறுத்துகின்றார் என்க. ஆகவே இறைநிலையையும் இறைவனடியடைதலையும் நோக்கினோம். இனி உலகத்தைப் பற்றிக் கூறுபவற்றைக் காண்போம்.

## 2. உலகம்

***உணர்வுடை யார்கட் குலகமுந் தோன்றும்***
***உணர்வுடை யார்கட் குறுதுய ரில்லை***
***உணர்வுடை யார்கள் உணர்ந்தஅக் காலம்***
***உணர்வுடை யார்கள் உணர்ந்து கண்டாரே***

என்ற திருப்பாட்டின் வண்ணம் உணர்வுடையார்கட்குத்தான் உலகமும் தோன்றும்; அத்தகைய மெய்யுணர்வு உடையவர்களே எல்லாப் பொருள்களின் இயல்புகளையும் உணர்ந்து காண்டாற்கு உரியவர்கள். நாயனாரும் அவ்வாறு உணர்ந்து கண்டு உலகத்தைப்பற்றிக் கூறுகின்றார்.

புத்தேளிர் வாழும் உலகு – புலவரைப் போற்றாது புத்தேளுலகு – அடக்கம் அமரருள் உய்க்கும் – அருளில்லார்க் கவ்வுலகமில்லை – கள்ளார்க்குத் தள்ளாது புத்தேளுலகு – மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று – புத்தேளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே – வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் – என்றெல்லாம் கூறுகின்றதனால் வானோர் உலகு உண்டு என்பதையும், அங்கு வானோர் இன்பமாக வாழ்கின்றார் என்பதனையும் அறிவித்தார். 'இமையாரின் வாழினும் பாடிலரே' என்பதெல்லாம் வானவர் நாட்டு நல் வாழ்க்கையைத்தான் குறிக்கின்றது. 'தாமரைக் கண்ணா னுலகு' என்று திருமாலுலகத்தையும் குறிப்பிடுகின்றார். செய்யவள், செய்யாள், தாமரையினாள், திரு என்று திருமகளையும் கூறுகின்றார். உலகியற்றியான் என்று அயனையும் குறிப்பிடுகின்றார். வானோருலகினும் சிறந்த உலகம் ஒன்று அதனினும் மேலாக இலங்குகின்றதென்பதை விளக்குகிறார்.

***வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்***
***தெய்வத்துள் வைக்கப் படும்*** என்பதனால்

நிலவுலகிலிருந்து வானோருலகடைதலாகிய ஒருவகைப் பேற்றையும், தாமரைக் கண்ணானுலகம் புகுதலாகிய ஒரு பேற்றையும்,

வானோர்க்குயர்ந்த உலகம் புகுதலாகிய மற்ரெரு பேற்றையும் குறிப்பிட்டார். இப்பேறுகளெல்லாம் அறம் செய்யும் அருளுடையார்கள் பெறும் பேறு. இருள் உலகமாகிய ஒரு நரகத்தையும் குறிப்பிடுகின்ருர். இதுவன்றி 'அண்ணுத்தல் செய்யாதளறு' 'பூரியர்கள் ஆழும் அளறு' என்று மற்ரெரு கொடிய நரகத்தையும் குறிப்பிடுகின்ருர்.

**வஞ்ச மனத்தான் படிற்ரெழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்** என்பதனுல்

வானவெளியையும் இவர் பூதமாகக் கருதியவர் என்பது தெளிவு. மேல் வானவெளியாகவும் கீழ் வானவெளியாகவும் எட்டுத் திசைகளாகவும் பதினுறு கோணமாகவும் விரிந்து நிற்கின்ற தாதலின் அதற்கு ஒரு எல்லேயே இல்லே. அந்தப் பெருவெளியில் ஞாயிறு, திங்கள், மீன்கள் முதலியவற்றின் ஒளி பரவாத இருள் உலகமும் உண்டு. அருளாகிய நீரினுலே மாசு கழுவாத அழுக்குப் பிடித்த உயிர்கள் அந்த இருளுலகத்தில் கிடந்து துன்பமுறும் என்பதை வள்ளுவர் கண்டார். அதனினும் கொடிய அளறு ஆகிய சேற்றுலகம் ஒன்று உண்டென்று கண்டார். அங்கே தீவினே செய்தவுயிர்கள் கிடந்து தவித்தலேயும் உணர்ந்தார். இவ்வாருக அவர் கண்ட உலகங்கள் பல.

'உணர்வுடையார்கட் குலகமுந் தோன்றும்' என்றவாறு மெய்யுணர்வு நிரம்பிய ஆசிரியர் திருவள்ளுவர் எல்லாவுலகங்களேயும் அறியும் மாட்சிமையுடையவராகவும் இலங்கினுர்.

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணிய துடைத்து** என்று கூறியது,

தெளிவுக் காட்சியடைந்த உயிரின் ஒளியானது வானத்தை ஊடுருவி அப்பாலும் காணும் என்ற உண்மையைக் காட்டுகின்றது. அத்தகைய மாட்சிமை உடையார்க்கு விண்மீன்களே எண்ணிக் கணக்கிடுதலும் எல்லாவுலகங்களேயும் அறிதலும் மிகவும் எளியதே என்க. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றது இவ்வகை உலகங்கள் எல்லாவற்றையும் கருதியே என்க. மண்ணுலகத்தைப்பற்றி அவர் கூறியவை விரிப்பிற்பெருகும். இவ்வாறு ஆசிரியர் உலகத்தைப்பற்றிக் கூறியதேயன்றி 'உலகமே மாயை; எல்லாம் பொய்' என்று கூருத மாட்சிமையையும் உணர்க. இனி உயிரைப்பற்றி நோக்குவோம்.

## 3. உயிர்

உயிர்க்கூட்டங்கள் பல :

பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்—ஊனுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல—ஊனைக் குறித்த உயிரெல்லாம், மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்—என்று உயிரைக் குறித்த இடங்களில் பன்மையாக ஆசிரியர் குறித்திருக்கின்றார். ஆகவே உயிர்கள் அளப்பிலாத மிகப்பல தொகுதிகள் உள என்ற கொள்கையே ஆசிரியர் கொள்கை. 'பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்றதனால், ஓர் உயிரே அது முகந்துகொண்ட வினைக்கு ஏற்பப் பலவேறு வகையான பிறப்புக்களிற் பிறந்து இன்பதுன்பங்களை நுகரும் என்பதும் விளங்கும்.

உயிர்கள் என்றுமுள்ளன :

**பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை**
**மாயுமென் மாயா வுயிர்** என்று

கூறுவதனால் உயிர் என்றும் உளது; அது மாய்வதில்லை, என்ற கருத்தே ஆசிரியர் கருத்து என்பது தெளிவாக விளங்கும். மாயா வுயிர் என்பதற்குப் பரிமேலழகர் கூறிய கருத்து வேறு. இங்கே என்றும் மாயாத இயல்பு உள்ள என் உயிர் பொருள் தேடும் மயக்கம் உள்ள என் காதலரை இந்த மருண்ட மாலைக் காலத்தில் நினைந்து மாய்கின்றதே என்று வருந்துகிறாள். உயிர்கள் புல்லாகவும் புழுவாகவும் மாக்களாகவும் விலங்காகவும், பாம்பாகவும் மற்றும் பல உடம்பிலும் சென்று சென்று பிறந்து கடலனைய துன்பமும் மின்னலனைய இன்பமும் பெற்று வருந்துவதை ஆசிரியர் கருதினார். பிறவித்துன்பமும் சாவின் துன்பமும் வாழ்வின் துன்பமும் நினைந்தார்; உயிர்களுக்காக நெக்குருகி இரங்கினார். ஐயோ! இந்த நிலை பேறுடைய உயிர்களுக்கு என்றும் நிலைத்திருப்பதற்கு உரிய உடம்புகள் வாய்க்கவில்லையே என்று மனம் குழைந்து வருந்துகிறார்.

**புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுள்**
**துச்சி லிருந்த வுயிர்க்கு** என்று அதனைக் கூறுகின்றார்.

இவ்வாறு உயிர்கள் பல்வேறு உடம்பெடுத்துப் பிறந்து துன்புறுவது அது முகந்து கொண்ட நல்வினை தீவினைக்கு ஏற்ப நிகழ்வது என்றும், வினைப்பயனை முகந்துகொள்வதற்கு அடிப்படையாக உயிர்களிடத்தில் ஆணவ இருள் இயல்பாக அமைந்து இடக்கின்றது என்றும், ஆசிரியர் கூறுகின்றார்.

இருள் சேர் இருவினை என்பதனால் இருவினை, இருளாகிய ஆணவத்திலிருந்து முதலில் பிறக்கின்றன என்பதும், ஆணவம் உயிர்க்கு இயல்பென்பதும், வினையையோ இருளையோ உயிர்கட்கு முதல்வன் அமைத்துவிடவில்லை என்பதும், தன்னை நினைப்பவர்க்கு வினைகளையும் இருளையும் போக்கி இன்பம் அருளுகின்றான் இறைவன் என்பதும், தெளிவாக அருளியிருக்கின்றார்.

**மன்னுயி ரோம்பி அருளாள்வார்க் கில்லென்ப**
**தன்னுயி ரஞ்சும் வினை**

என்பதில் உயிர் என்றும் உள்ளது என்பது கருதி மன்னுயிர் என்று அருளினார். தன்னுயிரஞ்சும் வினை என்பதனால், வினைப் பயனை அடைந்து, உயிர் துன்புறும் என்பது குறிப்பித்தார். இருவினை கழிவதற்கு ஏனை உயிர்களிடத்தில் அன்பு பாராட்டி அருளுடையராக விளங்கி அவைகளைப் பாதுகாத்தலே சிறந்த வழி என்றும் விளக்கினார். ஆகவே ஏனைய உயிர்க்கு இரங்கித் தொண்டு செய்து வாழ்கின்ற தொண்டர் வாழ்வுதான் துன்ப நீக்கத்திற்குச் சிறந்தது என்பது தெளிய வைத்தார்.

**தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க் கின்னா செயல்**

என்பதனால் பிறவுயிர்கட்குத் தீங்கு செய்தால் அத்தீங்கு தனக்கேயா மென்பது விளக்கினார். மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்தால் அதனாலாகிய குற்றமும் தீவினையும் தன்னைப் பற்றி நின்று தன்னுயிர்க்குத் துன்பமாதலை அறிகின்றவன் ஏனை மன்னுயிர்க்குத் துன்பம் செய்தல் யாது பயன் கருதியோ? ஆகவே வினைப்பயன் உயிரைப்பற்றி நின்று துன்புறுத்து மென்பது தெளிவாயிற்று. ஆதலின்,

**தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி**
**தின்னுயிர் நீக்கும் வினை** என்று வற்புறுத்தினார்.

இம் மூன்று குறட்பாக்களும் எப்போதும் மறக்கத் தக்கன அல்ல. உயிர்களிடத்துத் தாம் வைத்த பேரிரக்கத்தினாலே இத்தகைய அருமைத் திருப் பாடல்களை ஆசிரியர் அருளினார். இத்தகைய உயிரைத் தெளிவுடையார் காண்பதும் இயலுமென் பதே நூல்களாலும் தவத்தாலும் அறியப்படுகின்றது.

அவமகல எனையறியேல் எனும் ஐயம் அகல
அடிகாட்டி ஆன்மாவைக் காட்டலானும்

என்கின்ற அருமைத் திருமொழியாலும் மெய்யுணர்வுடையார்க்குத் திருவருள் ஆன்மாவாகிய உயிரைக் காணும் வண்ணம் காட்டும் என்பதே தெளிவாகின்றது.

எனவே உயிர் என்றுமுளது; இயல்பாகவே இருட் கலப்பு உடையது; ஒருக்காலும் அழிவில்லாதது; சார்ந்ததன் வண்ணமாக நின்றிலங்குவது; உணர்த்த உணருவது; நல்வினை தீவினை செய்தால் அதனுலாய பயன் துய்த்தற்கு உரியது; தீவினையினுல் அளாஞ்கிய நரகத் துன்பம் அடைதற்கு உரியது. அருளின்மையினுல் இருள் சேர்ந்த இன்னுவுலகம் புகுதற்கு உரியது; நல்வினையும் தீவினையும் கலந்து செய்யின் இன்ப துன்பம் நுகரக் கூடிய மண்ணுலகில் தோன்றுவது; நல்வினை மட்டும் செய்யின் வானேருலகுக்கும், தாமரைக் கண்ணுனுலகுக்கும் செல்வதற்கு உரியது; மாசறு காட்சியால் வினை மாசு தீர்ந்து யான் எனது என்னும் செருக்கறுத்தால் வானேர்க்குயர்ந்த உலகம் புகுதற்கு உரியது; அதனினும் மேம்பட்ட நோக்குடையதாயின் இறைவன் அடியாகிய அவனது இன்ப ஒளி வெள்ளத்திற் கலத்தற்கு உரியது என்பன வெல்லாம் உணர்ந்து கோடற்கு உரியன. இவையே யன்றித் திருவருள் துணையால் காண்டற்கும் உரியது. அது தவமுடையார்க்குத் தெற்றெ றன விளங்குதற்குத் தடையில்லை. இறைவனருளால் உயிர் இயங்குவதாக இருப்பினும் தான் பெற்ற உடம்பில் இருந்து கொண்டு அதனை உய்த்துக் கொண்டிருக்கின்றது. இனி உயிர்க்குத் துணையாகிய மனத்தை நோக்குவோம்.

## 4. மனம்

மனம் என்ற சொல் மன்னுதலும் மன்னுமையுமாகிய இரண்டு தன்மை உடையது என்று பொருள் தரும். ஆகவே ஓரிடத்தில் உயிரின் பக்கல் மன்னியிருந்து கொண்டே மன்னுமல் அலைந்து கொண்டும் அலைத்துக் கொண்டும் இருக்கும் இயல்புடையது என்று அதன் இயல்பினை அச் சொல் தெளிவாக விளக்குகின்றது. உயிர் உய்த்துக்கொண்டு இருப்பது. மனமோ மன்னியிருந்து கொண்டே மன்னுமலும் அலைவது. உயிரையும் உடம்பையும் அலைப்பது, இவ்வாறு இருந்த இடத்திலேயே

இருந்து கொண்டு ஆட்டி அவலங்காண்கின்ற பொருள் மனத்தைப்போல வேறு ஒன்றும் உலகத்தில் இல்லை. இத்தகைய மனம் செம்மையுற்ருலன்றி உயிர் நன்மையடைதல் ஒரு காலும் இல்லை.

'உணர்ந்துணர்ந் துணரினும் இறை நிலை உணர்வரிதுயிர்காள்' என்று பெரியோர்கள் அருளிச் செய்தனர். அதன் கருத்தாவது: உயிர் தன்னறிவு கொண்டு இறை நிலையை உணர்தல் இயலாது. இறையருளால் இறையறிவு கொண்டு தான் உணரமுடியும் என்பதுவேயாகும். ஆகவே இறை நிலையை உணர்தற்கு உயிர் இறை நிலையை அணுகி வழிபடுதல் வேண்டும். அவ்வாறு வழிபடுதற்கு உயிர் நிலையை அறிதல் வேண்டும்; அதற்கு உதவுவது மனம்தான். ஆகவே மெய்யறிவு பெறுதற்கு விரும்புபவர் முதற்கண் அறிய வேண்டுவது மனநிலை தான். மனத்தினுடைய இருப்புங் குறியுங் குறிப்பும் உணர்ந்து அதனை வழிபட்டு வயப்படுத்தி உயிர்நிலையோடு சேர்த்து ஒடுக்கிப், பின்னர் இறை நிலையை அணுகுதல் வேண்டும். அதற்கு, மன நிலை, உயிர் நிலை, இறை நிலை முதலியவற்றை உணர்த்தும் ஆசிரியர்கள் வெளிப்படையாகப் பேசுவதோ எழுதுவதோ இல்லை. இலை மறை காய்போல எழுதாமலுமில்லை. இவற்றையெல்லாம் மறை மொழியாக வைத்துக்கொண்டு, நேருக்கு நேர் பயிற்சி வாயிலாகத் தவம் செய்யும்போது உணர்த்தி வந்தனர். நூல்களிற் படித்து மன நிலை, உயிர் நிலை, இறை நிலையைத் தெரிந்தும் பயனில்லை. தெரிந்துகொண்டு செய்யவேண்டுவன யாவை என்பன தான் 'மறை மொழி'யாக இருக்கின்றன.

நிறைமொழி மாந்தர்கள் தாம் அந்த மறை மொழியைத் தகுதியும் வேட்கையும் உடையார்கட்கு உணர்த்துவார்கள். நிறைமொழி மாந்தர் பெருமையை இந்த நிலத்து அவர் மறை மொழி காட்டிவிடும் என்று நாயனர் கூறியதும் இவற்றையெல்லாம் குறிப்பிடுவதற்கே யாகும்.

**உணர்வுடை யார்கள் உணர்த்த அக்காலம்**
**உணர்வுடை யார்கள் உணர்ந்து கண்டாரே**

என்று திருமூலர் கூறியதும் இக்கருத்துப்பற்றியே யாகும். இவற்றை யெல்லாம் குறிப்பிடுவதற்குப் பல குறள்களிலே மன நிலையை வற்புறுத்துகின்றார் பொய்யில் புலவர்.

மனமென்னும் அமைச்சன் கொடுங் கோலனாகி விட்டால் உயிரின் பாடு தொலைந்து விடும். இவற்றுள், மனநலம் மன்னுயிர்க்கும் ஆக்கம் — மனநலத்தினாகும் மறுமை என்றெல்லாம் கூறியமை உணர்க. இவற்றையெல்லாம் உணர்ந்து பயின்று பயன் கொள்ளாமல் இருப்பவர்க்கு நூற் பொருளும் தெளிவாக விளங்குதல் இல்லை. அதனாலேதான் அவற்றை ஆசிரியர்கள் நேரில் உணர்த்த உணரும் பழக்கம் நிலவி வருகின்றது. இனி அருளைப் பற்றி நோக்குவோம்,

## 5. அருள்

அருமையாக உள்ளுவது எதுவோ அதுதான் அருள். பிற உயிர்களை அருமையாக நினைத்து அவற்றின் மேல் மனக் கனிவு வைத்துப் பாராட்டி உற்றுழி உதவ அடிப்படையாக உள்ளது அருள். அது இரண்டு வகைப்படும். இறைவன் உயிர்களின் மேல் வைக்கின்ற அருள் ஒன்று. உயிர்கள் ஏனைய உயிர்களிடத்தில் வைக்கும் அருள் ஒன்று.

இறைவனை அறவாழி அந்தணன் — மலர்மிசை யேகினான் — என்று குறிப்பிடுவதனால் அவனது அருட்பெருக்கத்தைக் குறிப்பிட்டார். இனி அடி என்பது திருவருள் என்னும் இறை நிலை என்றும் கூறப்படுமாதலின், அடியடைந்தாரைப் பிறவிக்கடலினின்றும் கரையேற்றுவன் என்று கூறியதனாலும் இறையருள் உணரப்படும். இறைவனருளுக்கும் என்றும் குறைவில்லை. மக்களிடத்திலேதான் அருளுக்குப் பஞ்சம் வருவது எளிதாயிருக்கின்றது. அருளிலும் வறுமைப் படுவது போன்ற பொல்லாங்கு வேறு ஒன்று உலகத்தில் இல்லை. அதனாலேதான் ஆசிரியர் 'அருளாள்வார்க்கு அல்லல் இல்லை' என்றும் 'அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை' என்றும் கூறியதுடன் அமையாமல்

**பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்**
**அற்றார் மற்றாதல் அரிது**

என்றும் எச்சரிக்கை செய்கின்றார்.

தத்துவக் கூட்டங்களை யெல்லாம் உணர்ந்தாலும் மெய்ப் பொருளையே உணர்ந்தாலும் தவமே செய்தாலும் பிறவுயிர்கள் மேல் அருள் செலுத்தாதவன் கொடிய தீவினைகளைச் செய்து கொண்டு, தான் கண்ட மெய்ப்பொருளின் பயனை அழித்து விடுவான். ஆதலால் அருள் கட்டாயம் வேண்டும் என்பதை ஆசிரியர் ஆணித்தரமாகக் கூறுகின்றார்.

## 6. தெருள்

நுட்பத்திலும் நுட்பமாகத் தெரிந்து கொள்வதும் அதனை உள்ளித் தெளிவடைவதும்தான் தெருள். தெருண்ட உள்ளம் வேண்டும். தெருளாகிய தெளிவு இல்லையென்றால் அவன் மெய்ப் பொருளைக் கண்டாலும் தெளிவில்லாததனால் அதனாற் பெறும் பயனை இழந்து விடுவான்,

**தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரின்**
**அருளாதான் செய்யும் அறம்** என்று கூறுவது காண்க.

ஆகவே உயிர், துன்பம் நீங்கி இன்பம் அடைவதற்கு அருளுந் தெருளும் இன்றியமையாதன என்பது தெளிவாதல் காண்க. இந்தத் தெருளுக்கு மறுதலைப்பட்ட சொல் மருள். அந்த மருள் பொருளல்லாதவற்றையும் பொருளாக உணரச் செய்து துன்ப மான பிறப்பிலே தள்ளிவிடும். ஆதலால் மருளில் மயங்கா வண்ணம் தெருளுதல் வேண்டுமென்று பொய்யில் புலவர் தெருட்டுகின்றார்.

## 7. மறுமை

இருமை வகைதெரிந்து, – மனநலத்தினுகும் மறுமை – எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் – எழுமையும் ஏமாப் புடைத்து – என்பன முதலியவாகக் கூறுங் கூற்றாலும்,

**சிறுமையு ணீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பந் தரும்** என்பதனாலும்

மறுமைப் பயனைக் குறிப்பிட்டார். வானோருலகத்தார்க்கு விருந் தாய்ச் சென்றுவாழும் மறுமையும், தாமரைக் கண்ணானுலகுக் குச் செல்லும் மறுமையும் வானோருக்கு உயர்ந்த உலகம் புகும் மறுமையும் ஆகிய மறுமைப் பயன்களைக் கூறியருளினர். அடி யடைதல் என்பது இந்த மறுமைப் பயன்களினும் சிறந்த பேறு ஆதலின் அதனை மட்டும் கடவுள் வாழ்த்தின் கண் குறிப் பிட்டார்.

## 8. ஊழ்

ஊழ்வினை என்பது யாது? இதனைப் பற்றிப் பலர் தவறான எண்ணங்கொண்டிருக்கின்றனர். கடவுளோ பிரமனோ சிவனோ இட்டமுடன் தலையில் எழுதிவிட்டதென்று தவறாக எண்ணி அரற்றுகின்றார்கள். ஒருவன் தான்செய்த வினைதான் ஊழ்வினை. அவன் வினை செய்வதற்கு முன்பு அவனுடைய உயிரினிடத்து உண்மையாகக் கலந்து நிற்கும் ஆணவ இருள் ஒன்று உண்டு.

அதுதான் இவன் வினைசெய்வதற்கு உந்தித்தள்ளுகின்றது. எவ்வளவோ வினைகளைச் செய்து கொள்ளுகின்றான்.

ஒரு பிறப்பிலேயே ஏழு பிறப்பிற்குஞ் சேர்த்து வினைகளைச் செய்து கொள்கின்றான். அந்த வினைதான் ஊழ்வினை.

**ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக் கழுந்தும் அளறு**

என்பதனால் ஒருவன் தான் செய்து கொண்டதே ஊழ்வினை என்று குறிப்பிடுகின்றார். இயல்பாக உயிரைப்பற்றி உள்ள இருளானது அதற்கு அடிப்படையாக இருப்பதனால் ஊழ் வினையை உண்மை என்றும் குறிப்பிட்டார். ஊழ் என்ற சொல் மலர்தல் உதிர்தல் என்ற இரு பொருள்படும். 'இணரூழ்த்தும் நாறுமலர்' என்ற இடத்தில் ஊழ் என்பது மலர்தல் என்ற பொருள் தருகின்றது. 'ஊழ் கோடு' என்னும் போது உதிர்தல் என்ற பொருள் தருகின்றது. தாய் வயிற்றிலிருக்கும்போது பாலுண்ணுவதற்காகக் குழந்தைக்கு வயிற்றில் ஒரு கொம்பு (குழல்) இருக்கின்றது; பிறந்த பின்பு அது உதிர்ந்து விடு கின்றது. கொப்பு இருந்து ஊழ்த்த இடத்தைத்தான் 'கொப்பூழ்' என்று சொல்லுகின்றோம். ஆகவே ஊழ்வினை யானது, மலர் பருவகாலத்தில் மலர்வதுபோல வினையானது பயன் கொடுக்குங் காலத்தில் மலர்ந்து தன் பயனை யளித்து உதிர்ந்து விடுவது என்று பொருள்படுதல் காண்க. இதனைக் கருதியே சாத்தனாரும்

**மாமலர் நாற்றம் போல்மணி மேகலைக்**
**கேது நிகழ்ச்சி எதிர்ந்துளது** என்று கூறினார்.

செடிக்குப் பூ மலர்தலும் உதிர்தலும் காய்த்தலும் வித்து வைத்தலும் மீண்டும் செடியாக முளைத்தலுமாகிய செயல்கள் இயல்பாதல் போல உயிருக்கு ஊழ்வினை அரும்புதலும் மலர் தலும் பிறப்பிற் புகுத்துவதுமாக உள்ளது. ஆகவே இதனைக் கெடுத்தல் மிகவும் இன்றியமையாதது. அதற்குவழி இறைவ னடியை அடைதல்தான் என்று தெளிவாக்குகின்றார். 'இருள் சேர் இருவினையும்' இறைவன் புகழை வழுத்தினவருக்கு இல்லை என்கின்றார்.

ஊழ்வினையின் வலிமையை ஆசிரியர் வலியுறுத்திக் கூறிய தன் காரணம் அவனவன் செய்த வினைப்பயன் அவனவனைத் தாக்காமல் விடாது என்பதனைக் கூறித் தீவினை செய்யக்கூடாது

என்பதனை எச்சரிக்கை செய்வதற்குத்தான். 'வினைப்பகை வீயாது பின் சென்றடும்' என்று கூறித் தீவினையிலிருந்து மக்களை விலகுதற்கு வற்புறுத்துகின்றார்.

**வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்த லரிது**

என்பதனால் 'பால்வரை தெய்வம்' எனப்படும் தெய்வம் அவ்வவ்வுயிர் செய்த வினைகளின் பயன்களை அவ்வவைகளுக்கே கூட்டு விக்கின்றது என்பதுவும் தெளியலாகும். ஆகவே இறைவன் உயிர்களுக்குத் துய்க்கும் பொருளை அமைத்துக் கொடுத்தானேயன்றி உயிர்களைப் படைத்தானென்று யாண்டும் கூறாமை காண்க. 'மன்னுயிர்' என்ற கருத்து உயிர் என்றும் இயல்பாக உளது என்பதனையே விளக்கிற்று.

## 9. தவம்

இல்லறத்தாரும் தவம் புரியலாம்; துறவறத்தாரும் தவஞ் செய்யலாம். இருதிறத்தாரிலும் தவம் புரியாமற் போலியாக நாட்கழிப்போரும் உளர். துறவு பூண்டு தவஞ் செய்யாதவரைப் பற்றி ஐம்பெரும் பூதங்களுமே சிரிக்கும் என்கின்றார், தவம் புரியாமல் மட்டுமன்றி வஞ்சனை முதலிய அவம் புரிவாரேயானால் ஏன் பூதங்கள் அவரை எள்ளி நகையாடாமலிருக்கும்? ஆகவே கூடாவொழுக்கம் முதலிய குற்றம் வாராமல் துறவோர் காக்க வேண்டுமென்று அறிவுறுத்தினார். **தொலைவில் சுற்றமொடு துறவறங்காப்ப** என்ற இலக்கண மொழிப்படி இல்லின் கண் உறவினரொடு இருந்து தவம்புரிதலே பெரும்பான்மை. காட்டிலும் மலையிலும் இருந்து தவம்புரிதல் சிறுபான்மை என்பது பழம் பாடல்களால் தெளிவாம். ஆகவே திருவள்ளுவர் இல்லறத்தார் தவம்புரியாமல் காலத்தைக் கழிப்பது தவறு என்று கருதினார். அவர்களுக்காக மனமிரங்கினார். தவம் புரியாமலிருக்கின்ற நிலையைக் கருதி மெல்லச் சிரிக்கவுஞ் செய்கின்றார்.

**துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
**மற்றை யவர்கள் தவம்**

என்று இரக்கத்துடன் நகைக்கின்றார். இவ்வாறு கூறுவதிலிருந்து இயல்பாகத் துறவு நிலையடைந்த துறவோர் கூட்டத்தையும் இல்லறத்திலிருந்து துறவுநிலையடைகின்ற துறவோர் கூட்டத்தையும் குறிப்பிடுகின்றார். தவத்தின் அருமை நோக்கி மேலும் வற்புறுத்துகின்றார்.

**வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டியற் பால பல**

என்பன போன்ற பல பாக்களால் தவத்தின் தனி மாண்பைப் பன்னிப் புன்னி மொழிகின்ற ஆசிரியரின் திருவுள்ளம் தவத்தின் மேம்பட்டதாக வேறு ஒரு பொருளையும் கருதவில்லை.

தவத்தை உணர்த்துகின்ற நூற்கள் வெறுந் தத்துவக் கூட்டத்தை எண்ணி மொழிகின்ற அளவில் பெருக்கல் வாய்பாடு போல மலிந்துவிட்டன. அவையெல்லாந் திருவள்ளுவர் கூறிய அளவு தெளிவுற இல்லாமலிருப்பதுடன் கலாம் விளைப்பனவாகவும் புரியாதனவாகவும் இருக்கின்றன, அவற்றை நோக்கிய பெரியோர்கள்,

**தத்துவத்தை எண்ணித் தலையடித்துக் கொள்ளாதே**

என்று கூறினார்கள். அவர்கள் அவ்வாறு கூறிய கருத்து, தத்துவங்களை உணரவேண்டாமென்பதன்று. உணரவும் வேண்டும். ஆனால் நடைமுறைப் பயிற்சியைத் தக்க மெய்யுணர்வு நிரம்பிய ஆசிரியன்பாற் பல்காலுங் கேட்டு உணர்ந்து தவஞ் செய்யவும் வேண்டு மென்பதேயாகும்.

மெய்யுணர்வு பற்றிய மெய்ந்நூல்களைப் படித்த அளவிலே பேசிய அளவிலே எழுதிய அளவிலே பிறருக்கு எடுத்து ஓதிய அளவிலே வீடுபேறு கிடைத்துவிடுமென்று கருதியும் மொழிந்தும் வாழ்நாளைப் பாழ்நாளாக்குவாரும் உளர். அந்தோ! 'வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன், வாழ்நாள் வழியடைக்குங்கல்' என்றும்,

**ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்**
**பேதையிற் பேதையா ரில்**

என்றும் வற்புறுத்திச் செயலின்கண் முனையத் தூண்டுகின்ற வள்ளுவரின் உள்ளத்தை இவர்கள் உணரவில்லையே. மெய்ப்பொருளை உணர்ந்து அருந்தவம் செய்து தானென்கின்ற ஆணவ இருள் அறப்பெற்றால் அங்ஙனம் பெற்றவனை ஏனை உலக உயிர்களெல்லாம் தொழும் என்கிறார் ஆசிரியர்.

தவத்தின் ஆற்றலில் மேம்பட்டவர்கள் கூற்றுவனை வெல்லுதலும் இயலும், இந்நிலமிசை நீடு வாழ்தலும் உண்மை என்கிறார். மெய்யுணர்ந்தவர்கள் இந்த நிலமிசை நீடுவாழ்தல் கூடுமென்றாலும் இந்த அழுக்கு மெய்யைச் சுமந்துகொண்டு

அவ்வாறு நெடிதுகாலம் ஈங்கு இருப்பது இல்லை. நூறுண்டுகட்கு மேற்பட்ட பின்பு தாங்கள் விரும்பும் காலம் வரை வாழ்ந்து, பின்னர் இறைவனிடம் கலந்துவிடுவது இயல்பு, அதுவே பிறப்பறுப்பதற்குள்ள வழியாகலான்.

**மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க**
**லுற்றார்க் குடம்பும் மிகை**

என்று கூறுவதினுல் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவரும் துறக்கப்படாத தம் உடலைத் துறந்து இறைவனெடு கலத்தலைக் குறிப்பிடுதல் காண்க. ஆகவே மக்கள் யாக்கையிற் புகுந்த உயிர் இம்மை மறுமை வீடு ஆகிய பேறுகள் பெறுதற்குத் துணை செய்யத் தவத்தினும் மேம்பட்டது வேறு ஒன்றில்லை என்பது தெளிவாதல் காண்க.

## 10. மெய்யுணர்வு

மெய்யுணர்வு பற்றிய கருத்துக்களை யெல்லாம் தெளிவுற எழுதி விடாமல் மறைத்து வைத்துக்கொண்டு 'அந்த மறை மொழியை நிறைமொழி மாந்தரிடம் கேட்டுத் தெளிக' என்று கூறுகிருர்களே இது என்ன பெரிய வஞ்சகம் என்று கருதுவோரும் சொல்வோரும் எழுதுவோரும் உளர். அவர்கள் கருத்துப் பிழைபாடு உடையது. நேரிலே ஆசிரியன் இருந்து பல்கால் பயிற்றும் போதுங்கூட உணர்தற்கு அரிய நுட்பங்களெல்லாம் பொருந்திய தவத்தின் உணர்வைத் தவப்பயிற்சியை எழுதிக் காட்டென்பது இறைவனை எழுதிக் காட்டென்பது போன்று கூறுவதாகும். சிற்றின்பமே வெளியிற் சொல்ல இயலாத நுட்பமுடையது என்று கருதி அகப்பொருள் என்று பெயர் வைத்து அது அகத்து உணர்வினுலேதான் உணர முடியும் என்று சொல்லும்போது பேரின்ப உணர்வினை எங்ஙனம் எழுதிய அளவில் உணருதல் கூடும். அது அரிதே என்க.

மெய்யுணர்வுக்கு மெய்ப் பொருளைத் தெரிந்துகொள்ள வேண்டுவது மிக இன்றியமையாதது. சில சொற்களுக்குக் குழூஉக் குறியாக வேறு பொருள் அமைத்துக் கொண்டு எழுதுவதும் பேசுவதும் தவத்தோர் இயல்பு. ஆணை வாங்கிக்கொண்டு அத்தகைய மறை மொழிகளை விடுவித்தல்தான் பெரியோர் இயல்பு. அதனையே, நிறைமொழி மாந்தர் ஆணையிற் சிறந்த மறைமொழி என்று கூறினர் தொல்காப்பியர். அவ்வாறு உணரும்போது மெய்ப் பொருளை உணர்வது இன்றியமையாதது.

அதனை ஆசிரியன்பால் கேட்டுத் தெளிய வேண்டுமென்னும் வேட்கையைப் பிறப்பிக்க வேண்டி ஆசிரியர்,

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு**

என்றார். மெய்யுணர்வு இல்லாதவர் ஐம்புலன்களையும் வேறு வகைப் பயிற்சிகளால் அடக்கித் தம் வயப்படுத்தினாலும் பயனில்லை. ஆதலால் மெய்ப்பொருளை உணருங்கள். ஐயமில்லாமல் மெய்ப்பொருளை உணர்ந்தவருக்கு வானோருலகம் இந்த மண்ணுலகத்தைக் காட்டிலும் பக்கத்திற் காணப்படும். அவ்வாறு உணர்ந்தால் உங்கள் மனமாசு நீங்கி உயிரில் உள்ள மாசும் நீங்கும். உடனே பேரின்பத்தை இங்கே இருக்கும்போதே பெறுவீர்கள் என்கிறார்.

கேள்வி யுணர்வு உடையவர் தவத்தின் பயிற்சியினால் நன்கு ஓர்ந்து, என்றும் உள்ளதாகிய முதற் பொருளை உணர்வாரெனின் அவர்க்கு இந்த மண்ணிடைப் பிறத்தல் உண்டு என்று கருத வேண்டாம் என்கிறார். அவ்வாறு உள்ளத்தால் உணரக் கூடியதாகிய உள்ளது எது என்றால் அதுதான் செம்பொருள்; அதுவே சிறந்தது. அதனைக் காண்பதே அறிவு. அதனாலே தான் பிறப்பென்னும் பேதமை நீங்கும். ஆதலால் சார்ந்த தன் வண்ணமாகும் உம்முயிரை உலகிற் சாரவிட்டால் அது மண்ணாய்ப் போகும். மனத்தைச் சார்ந்தால் அது கொள்கின்ற ஆசை வழிச் சென்று பிறக்க நேரிடும். ஆதலால் உயிர்க்குச் சார்பாக இருக்கின்ற சார்பினை உணர்ந்து அதனைச் சார்ந்து மற்றை வேண்டாச் சார்புக ளெல்லாம் நீங்க ஒழுகுவீர்களென்றால் உங்களுக்குப் பிறவிக்குக் காரணமான நோய்கள் வந்து தாக்குதல் இல்லை. ஏனெனில் மெய்யுணர்ந்து உயிரானது தனக்கு உரிய சார்வினை அடைந்தால் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய இத் தீங்குகளெல்லாம் நீங்கிவிடும். அதனாலேதான் நோய் வருவதில்லை என்று கூறுகின்றார். இனி, தவ முயற்சியால் மெய்யுணர்ந்து தெளிந்தவருக்கும் அவா வந்து சேருமானால் அது பிறவிக்கு வித்தாகுமாதலால் அவாவினை முற்ற அறுத்துத் தள்ளுங்கள் என்கின்றார்.

## 11. பேரா இயற்கை

மெய்யுணர்ந்து செம் பொருள் கண்ட உயிர் உலகப் பழக்கத்தால் ஒரோ வழி தாக்கப்பட்டு மீண்டும் வினை செய்யலாகாது. பொன்னைச் செய்வேனென்றும் வெள்ளியைச்

செய்வேனென்றும் விண்ணிற் பறப்பேனென்றும் ஆசை கொள்வது உண்டு. அது பேரா இயற்கையாகிய வீடுபேற்றைத் தராது. ஆசைதான் பிறவிக்கு வித்து. ஏதாவது ஒன்றை விரும்பினுல் பிறவாமையைத்தான் விரும்புதல் வேண்டும். அதுவும் ஒன்றையும் விரும்பாமல் இருந்தால்தான் கிட்டும். அவ்வாறு ஒன்றையும் வேண்டாமையைப் போன்ற பெருஞ் செல்வம் இந்த உலகத்திலில்லை. ஏன் வானேருலகத்திலுங் கூட இல்லைதான். அவாவில்லாமைதான் ஒருவனுக்குத் தூய தன்மை. அதுவும் வாய்மையை விரும்பினுல்தானே உண்டாகும். அவாவற்றவர்தாம் பிறவியற்றவர்களாவார்கள். மற்றையோர் பிறவியற்றவராகார். ஆசை ஒருவனது உயிரை வஞ்சித்து இழுத்துக்கொண்டு சென்று பிறப்பில் தள்ளிவிடும். ஆதலால் மிகவும் விழிப்பாகவும் அச்சத்துடனும் அவா வராமற் காத்தல் வேண்டும். ஒருநாளும் நிரம்பாத அந்த ஆசையை நீக்கிவிட்டால் பேரா இயற்கையாகிய வீடுபேறு நிலைத்துவிடும் என்கின்ருர்.

இறைவன் ஒருவனுளன். அவன் அகரம் போன்றவன். உயிரெழுத்துக்கள் போல உயிர்களும் பல. இறைவன் எண் குணத்தான். அவனை அடைந்தார்க்குப் பிறவியறும், உயிர்கள் மன்னுயிர்கள்; மாயா உயிர்கள்; அவைகள் இயல்பாக இருளு டையன; வினையும் உடையன. வினைப்பயன் உயிர்களைச்சார்ந்து இன்பதுன்பங்களை ஊட்டும். உலகம் மண்ணுலகம், வானே ருலகம், தாமரைக்கண்ணுனுலகம், வானேர்க்குயர்ந்த உலகம், இருள் சேர்ந்த இன்னுவுலகம், அளறுகிய நரக உலகம் எனப் பல வகைப்படும். உயிர்கள் வினைகளுக்கேற்ப அங்கங்கே சென்று துன்புறும்.

பொருளில்லாதவர் ஒரு காலத்தில் தேடிக்கொள்ளலாம். அருளில்லாதவர் தீவினை செய்து தம்மையும் மாய்த்துக்கொள்ளு வர்; ஆதலால் அருளற்றவர் அற்றவர்தாம், அவர்கள் மீண்டு ஆதலில்லை. அருட் செல்வமே சிறந்த செல்வம். உயிர் அருளு டன் மெய்ப் பொருளை உணரவேண்டும். அருளில்லாதவன் செய்யும் அறம் பயன்தராது; ஏனெனில் அவனே அந்த அறத்தை அழித்துவிடுவான். மெய்ப்பொருளை உணர்ந்தாலும் தெருளாகிய மெய்யறிவுடையராகித் தெளிதல்வேண்டும்; இன்றேல் அவன் மெய்யுணர்ந்த பயனை அடையான். தவத் தினும் மேம்பட்ட பொருள் எதுவும் உலகில் இல்லை. தவம்

செய்யாத காரணத்தினுல்தான் உலகில் பலர் வறியராக உள்ளனர். வேண்டியவற்றையெல்லாம் வேண்டியவாறே நல்கக் கூடியது தவம். தவத்தினுல் கூற்றுவனையும் வெல்லலாம். தவத்தினுல் இருள் நீங்கப்பெற்றவர்கள் தெய்வத்தன்மையராக இலங்குவார்கள். அவர்களை எல்லா உயிர்களும் தொழும். தவச் செல்வராகிய துறவோர்கள், கற்ருேர் அறியா அறிவினராய்க் கற்ருேர்க்குத் தாம் வரம்பாகிய காட்சியராய், நிறைமொழி மாந்தராக உளர்; அவர்களால் உணர்த்தப்பெறும் மறைமொழி களை உணர்ந்தாலன்றி அவர்கள் பெருமையை யுணர்தலியலாது. ஒன்ருகிய பகைவரை அழித்தலும் உவந்தாராகிய நண்பரைச் செல்வமுடையராக ஆக்குதலுமாகிய செயல்களைத் துறவோர் கருதார்; ஆனுல் அவர்கள் கருதினுல் அவர்கள் தவத்திற்குப் பகைவரை அழிக்கவும் நண்பர்களை ஆக்கவும் வலிமையுண்டு. எனவே துறவோர் பெருமையைக் கூறுவேன்; இல்லறத்தார்க்கு அறத்தை வற்புறுத்துவேன். அரசாள்வோரும் செயற்கரிய செய்யக்கூடிய பெரியோரைத் துணைக் கோடல் வேண்டும். பெரியோரைப் பிழையாமல் ஒழுகவேண்டும். பெரியோரைப் பிழைத்தால் அவர்களால் பேரா இடும்பையுண்டாகும். மக்கள் மனத்தை யுணர்தல் வேண்டும். மனநலமே மன்னுயிர்க்கு ஆக்கந்தரக்கூடியது. மனநலத்தினுலேயே மறுமை நலன் சிறக்கும். உயிரைப்பற்றித் தீவினை தொடர்ந்து வருத்தும். ‘வினைப்பகை வீயாது பின் சென்றடும்.’ காலைச் சுற்றி வேரை அறுக்கும். தீவினை என்னும் செருக்கு ஆகாது. ஓர் உயிரைக் கொல்லுதலோ கொல்லப்பட்ட உடம்பிலுள்ள ஊனைத் தின்னு தலோ கூடாது. அருளுடையாராகிப் பிறப்பினை அஞ்சித் தவம் புரிதல் வேண்டும். தவம் புரிவோர் இறைவனை வாழ்த்து வதினுல் கூற்றங்குதித்தலும் இந்த உலகில் வாழ்தலும் கூடு மெனினும் பிறப்பறுக்கலுற்ருர்க்கு உடம்பும் மிகையாதலால் அதன்கண் வைக்கின்ற பற்றுதலுமாகாது. ஆசையை அடியோடு அறுக்கவேண்டும். அதற்குமெய்ப்பொருளை உணர்தல்வேண்டும். சிறப்பென்னுஞ் செம்பொருளைக் காணல் வேண்டும். தமக்குச் சார்பாகிய மெய்ப்பொருளைச் சார்ந்து காம வெகுளி மயக்கங் களையறுத்தல் வேண்டும். இங்ஙன மெல்லாம் தவம் புரிந்தால் உயிர் பெயர்ந்து பெயர்ந்து பிறந்து அடைகின்ற துன்பத்தி லிருந்து நீங்கிப் பேரா இயற்கையாகிய வீடு பேற்றையடையும்.

**ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்.**

என்று கூறிப் பேரா இயற்கை நெறிபெறச் செய்கிருர் திருவள்ளுவர். அவர் தெள்ளமுதின் தீஞ்சுவைக்கும் மேலான செழுஞ்சுவையுடைய அருமைப் பாடல்களால் நாற்பொருளையும் வழங்கிய முறையை உணர்ந்த முன்னேமுதுவோர்கள், திருக்குறள் 'இருவினைக்கு மாமருந்து' என்ருர்கள்.

---

இன்பத்தையே எல்லோரும் விரும்புவர்; துன்பத்தை எல்லோரும் வெறுப்பர். இலக்கியம் இன்பக் கொள்கலம். எனவே அதனை எல்லோரும் விழைவர். இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்டு மிளிரும் இலக்கியம் பல்வகைத்து. ஒரு சில இலக்கியம் ஆக்கியோனின் புலமையை எடுத்துக் காட்டும். வேறுசில இலக்கியம் படித்தோர்க்குப் படிக்குந்தோறும் படிக்குந் தோறும் தெவிட்டா இன்பத்தை நல்கும். மற்றுஞ் சில கற்பனையிற் றேன்றி கற்பனை ஊற்ருகத் திகழும். இன்னுஞ் சில புன்னெறியதனில் செல்லும் பொழுதினைப் போக்கி மேலாம் நன்னெறி ஒழுகச்செய்து நவையறு காட்சி நல்கும். எஞ்சிய சில வாழ்க்கையினின்றும் மலர்ந்து வாழ்க்கைக் கண்ணுடியாக விளங்கி மக்களை நல்லாற்றுப் படுத்தும். இவ்விலக்கியங்களையெல்லாம் டிகுயன்ஸி* இரு பிரிவின்கண் அடக்குவர். ஒரு சிலவற்றை அறிவு இலக்கியத்தின்பாற்† படுத்துவர். ஏனையவற்றை ஆற்றல் இலக்கியத்தின்பாற்‡ படுத்துவர். மேலை நாட்டுப் பெருமகனுர் ஒருவர் இலக்கியத்தைக் கால வரையறைப் படுத்தி, குறித்த அக்காலத்திற்கு இன்றியமையா இலக்கிய§ மென்றும், எக்காலத்திற்கும் இன்றியமையா இலக்கிய$ மென்றும் இரு கூறு படுத்துவர். இப் பாகுபாடுகளில் ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தத்தைத் தர வல்ல தேவார திருவாசகங்களை உள்ளிட்ட பன்னிரு திருமுறைகளும் ஆற்றல் இலக்கியச் சார்பில் நின்று உலகில் என்றும் நிலவுவன. அவை நிறைமொழி மாந்தராம் இருபத்தெழுவர் ஆணையிற் கிளந்த மறைமொழியாதலில் உளங்கொள ஓதுவாரின் மனங் கரைத்து மலங்கெடுக்கும் பான்மையினவுமாம். யானை அடியிலடங்கா அடியில்லை என்றபடி குறளடியில் அடங்காப் பொருளில்லை என்ற பெருமையினையுடைய வள்ளுவர் இலக்கியமாம் திருக்குறள், அறிவு இலக்கியத்ினுள் நின்று நெறியல்லா நெறிதன்னைத் திரிபுணர்ச்சியால் நெறியென் றெண்ணிப் புன்னெறியில் செல்லும் புல்லரை நல்லவராக்கும் மாண்பினையுடையது.

* De Quincey † Literature of Knowledge ‡ Literature of Power
§ Literature of the Times $ Literature of all Times

திருக்குறள் எந்நாட்டவராலும் எம்மொழியினராலும் எச்சமயத்தவராலும் சென்னிமேல் நனி கொள்ளப்பட்ட ஓர் பேரிலக்கியம். பாவிற் சிறந்த குறளை உலகினுக்கே தந்து வான் புகழ்கொண்டவர் தேவிற் சிறந்தவராகிய வள்ளுவரே என்பது எல்லோருக்கும் ஒப்பமுடிந்த உண்மை, அவர் மாசற்ற நெஞ்சுடையவர்; இல்லறம் துறவறம் எனச் சொல்லறம் இரண்டினுள் நல்லறம் இல்லறமே எனக்கொண்டு ஒழுகிய பெருந்தகையாளர். அவர் வாழ்க்கைச் சோலையில் அரும்பிப் பூத்துக் காய்த்துக் கனிந்த கனிகளே திருக்குறளாம். அக் கனிகள் பாயிரத்திேனாடு ஆயிரத்து முன்னூற்று முப்பது என்ப. அவை உண்டார்க்கு உண்ணுந் தோறும் உண்ணுந் தோறும் உலப்பிலா உவகையோடு பல் சுவைகளைத் தருவன. இக் கனிகளின் நனிசுவை கண்ட மேலை நாட்டவரில் சிலர் தண்டமிழின் மேலாந்தரமான திருக்குறளைத் தத்தம் மொழி களில் மொழிபெயர்த்தனர். பெஸ்கி என்ற வீரமா முனிவர் லத்தீனில் மொழிபெயர்த்தருளினர்; டாக்டர் கிரால் ஜெர்மெனி யிலும், ஜீ.யூ.போப் ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்திட்டனர். ஆனால் தமிழர் அதன் திறனறிந்து ஊன்றிப் படிக்கின்றாரில்லை. அதன்பால் அசைக்கமுடியாத பற்றுக் கொண்டாருமில்லை. சேக்ஸ்பியர் வேண்டுமா அல்லது இந்திய சாம்ராஜ்யம் வேண்டுமா என்று ஒருவர் தன்னைக் கேட்கில்· காமதேனுவாகிய இந்திய சாம்ராஜ்யத்தைக் கைவிட ஒருவேளை சம்மதிப்பேன், ஆனால் சேக்ஸ்பியரைக் கைவிட எந்நாளும் சம்மதியேன் என்ற கார்லைலின்* மொழிப் பற்றும் இலக்கிய உணர்வும் தமிழருக்கு வரும் நாள் எந்நாளோ!

தமிழருக்கு வள்ளுவரின் குறள்மீது அத்தகைய பற்றுவரின் தமிழ் உய்யும் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை.

திருக்குறள் ஓதற்கெளிதாய், உணர்தற்கரிதாய், விழுப் பொருளாய் விளங்குவது. அன்றியும் அஃது சிந்தைக் கினிய தாய், செவிக்கினியதாய், வாய்க்கினியதாய், வந்த இரு வினைக்கு மாமருந்தாய்த் திகழ்வது. எல்லாப் பொருளும் இதன் பாலுள;

---

* Carlyle

Will you give up your Indian Empire or your Shakespeare; you English?............................................ Indian Empire or no Indian Empire; we cannot do without Shakespeare! Indian Empire will go, at any rate, some day; but this Shakespeare does not go, he lasts for ever with us; we cannot give up our Shakespeare!'' (The Hero as poet-Carlyle)

இதன் பாலில்லாத எப்பொருளும் இல்லையால் என்பது ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர் கண்ட வுண்மை. இல்லறம் பெரிதோ துறவறம் பெரிதோ என்று ஐயுறுவார்க்கு இல்லறமே சாலச் சிறந்தது என்று அறுதியிட்டு உறுதிபடக் கூறுவது திருக்குறள். அரசியல் கண்கொண்டு பார்ப்பார்க்கு அரசியலறிவை அங்கை நெல்லியெனக் காட்டுவது மதுவே. சமய உண்மைகளை அறிய அவாவுவார்க்கு, சமயதிட்ப நுட்பங்களை இலை மறை காய்போல் காட்டுவதும் செந்நாப்போதாரின் அருள் வாக்கே. சமயக் கணக்கர் மதிவழி வேண்டாது உலகியலறிவைப்பெற முற்படுவார்க்கு அவ்வறிவைத் தெள்ளிதிற் புலப்படுத்துவதும் தேவரது முப்பாலே. உடற்பிணியையும் உயிர்ப்பிணியையும் போக்க நன்மருந்து நாடுவார்க்கு இன்மருந்தாய்த்தோன்றி எய்தலாகா இன்ப வீட்டினை எய்துவிப்பதும் தெய்வப் புலவரின் உத்தர வேதமே. இத்துணைச் சிறப்புப் பொருந்திய திருக்குறளை நவமணிகள் பதிக்கப்பட்ட ஓர் விலை மதிப்பில்லா வைரமாலை என்று கூறலாம்.

அம்மாலை ஆயிரத்து முந்நூற்று முப்பது அருமணிகளைக் கொண்டு செவ்விதின் ஆக்கப்பெற்றது. இந்நன்மணிகளைத் துளைத்து உட்சென்று எல்லா மணிகளையும் ஒன்ருய்ப் பிணித்துக் கோத்தது நல்லொழுக்கம் என்னும் பொற்கயிறும். வள்ளுவர் நூல் ஒழுக்கத்தையே உயிர் நாடியாக் கொண்டு இலங்குவது. வாழ்வு என்னும் வள்ளுவர் கட்டிடம் ஒழுக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது. எனவே அவ்வடிப் படையில் எழுந்த கட்டிடம் ஊழிக் காற்ருலும், ஊழிக் கனலாலும், ஊழிப்புனலாலும் அழிக்க முடியாத பேராற்றல் கொண்டது என்பது வெள்ளிடைமலை. இவ்வடிப் படையிலே இளஞாயிறுகள் போன்று எழும் நம் சிறுவர்களின் வாழ்வெனும் கட்டிடம் அமைக்கப் பெறுதல் நன்மை பயப்பதாகும். நம் நாட்டுச் சிறுவர்கள் நம் நாட்டிற்கும் நம் மொழிக்கும் உறுதுணையாயிருந்து ஆவனபுரிய வேண்டுமேல் அவர்களுக்கென்று வகுக்கப்பட்ட கல்வித் திட்டம் ஒழுக்கத்தின் அடிப் படையில் எழுதல் வேண்டும். நம் நாட்டின் முன்னுள் ஆரம்பக் கல்வித் திட்டம் ஒழுக்கத்தின் அடிப்படையில் உருவாக்கப் பெற்றிருந்தது; தமிழ் ஒழுக்க நூல்களைப்படிகளாக வைத்து முன்னுள் பள்ளி ஆசிரியர்கள் இளஞ்சிருர்களை முன்னேற்றுவித்தனர். அச்சிருர்கள் ஆரம்பப்பள்ளிகளில் ‘அறஞ்செய

விரும்பு' 'ஆறுவது சினம்', 'ஏற்பது இகழ்ச்சி', 'தந்தைதாய்ப் பேண்', 'தீவினையகற்று' 'தெய்வமிகழேல்' 'தெய்வம் உண் டென்றிரு', 'கண்டொன்று சொல்லேல்' என்பனவற்றைப் பயின்றார்கள். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றி வேற்கை முதலிய ஒழுக்க நூல்கள் அவர்கள் கையில் காணப் பட்டன. உயர்நிலைப் பள்ளிகளில் நீதிவெண்பா, நாலடியார் இனியநாற்பது, இன்னாநாற்பது, திருக்குறள் முதலிய நூல்கள் பாடத் திட்டங்களில் முதலிடம் பெற்றன. 'ஆனால் இந்நாளில் வெளிவரும் பாடப் புத்தகங்களில் 'குதிரை கனைக்கிறது' 'நரி ஊளையிடுகிறது' 'அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' 'கரியமல வாய்வு' 'நாய் குரைக்கிறது' என்பன போன்றவைகளுக்கே முதலிடம் வழங்கப்பட்டிருக்கின்றன. கல்வி பயிலும் இளைஞர் கள் காக்கைப் பாட்டிலும், நரிக் கதையிலும் ஆர்வங் கொண் டுள்ளார்கள்; அவர்களுக்கு ஒழுக்க போதனை இல்லை. செம் பொருள் காணுமறிவு இல்லை; கடவுள் பற்று ஒரு சிறிதும் கிடையாது; கடவுள் நம்பிக்கை இல்லவே இல்லை; நன்னூல் பயில வாய்ப்பு இல்லை.

தமிழ்ப் பயிர் அருள் வித்திட்டு ஒழுக்க நீர்ப்பாய்ச்சி வளர்க்கப்பட்டதோர் நன்மரம். தமிழ்ப் புலவன் வாழ்க்கை யெனும் வன்நிலத்தைப் பண்படுத்த ஒழுக்கபோதனை யெனும் கருவியினை உறுதுணையாகக் கொண்டான். வினையினீங்கி விளங்கிய அறிவினையுடைய தண்டமிழ்ப் புலவோரெல்லாம் தாம் தாம் உலகிற் கீந்த நற்றமிழ்ப் பேரிலக்கியங்களில் ஒழுக்க நெறிக்கே முதலிடம் நல்கினர்; நற்சீலத்தைக் குணமென்னும் குன்றேறி நின்று போதித்தனர். இலக்கியப் பேழையாகிய சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள்

> அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
> உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
> ஊழ்வினை யுறுத்துவந் தூட்டும் என்பதூஉம்

என்ற மூன்று உண்மைகளை எடுத்துக்கூறித் தமிழ் மக்களை நன் னெறிப்படுத்தினர். அணிகெழுபோக்கினையுடைய மணிமேகலை யில் சாத்தனார்

> பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
> பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
> பற்றின் வருவது முன்னது பின்ன

இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது என்று

யாக்கை நிலையாமை, செல்வம் நிலையாமை, அறமே சிற்றுயிர்க் குற்றதுணை என்ற விழுப் பொருள்களை அறிவுறுத்தினர். பக்திச்சுவை நனி சொட்டச்சொட்டப் பாடியகடவுள் மாக்கலைச் செல்வராம் சேக்கிழார் நம் பாக்கியப்பயனாய்ப் பாடியருளிய திருத்தொண்டர் புராணத்தில்

ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் என்று

மெய்யடியார்களாகிய அறுபான்மூன்று கொள்கை வீரர்களின் ஒழுகலாறுகளை நினைப்பூட்டிப் போந்தார். தேன் ஊற்றெடுத்துப் பொங்கித் ததும்பிப் பூரணமாய்ச் சொல்லின்பமும் பொருளின்பமும் நனி ஒழுகும் வண்ணம் கவிமழை பொழிந்த கம்பரும் இராமாயணத்தில்

வெல்லுமோ தீவினை யறத்தை மெய்ம்மையால்
பெரிய பேதைச் சின்மதி பெண்மையால்
கற்றனர் ஞானமின்றேற் காமத்தைக் கடக்கலாமோ

என்று உலக நீதிகளை உலகிற்குக் கற்பித்துக் களித்தார். சங்கத் தமிழ் மூன்றுந்தா என்று நம்மவரெல்லாம் வேணவாக் கொண்டு உள்ளம் உவந்து கற்கின்ற எட்டுத்தொகை நூல் புறப் பாட்டுகளுள் சங்கப் புலவர்கள்,

நீரின் றமையா யாக்கைக் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே.
செல்வத்துப் பயனே ஈதல்.
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்.
புகழெனி னுயிரும் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினும் கொள்ளலர்.
நல்லது செய்த லாற்றீ ராயினு
மல்லது செய்த லோம்புமின்.

என்றவியத்தகு வாழ்க்கைக் குறிக்கோள்களை எடுத்தியம்பினர்.

அருந்தமிழ் அகப்பாட்டுகளுள் சங்கப் புலவர்களெல்லாம் 'காதலை நாடு அல்லது சாதலைத் தேடு' என்ற நுண்பொருளை

உணர்த்துவான் காதற் காமம் காமத்துச் சிறந்தது. கரணந் தப்பினுல் மரணம். என்று காதலற நெறியை வகுத்து உலகை ஈடேற்றினர். வள்ளுவர் இவ்வொழுக்கங்களை யெல்லாம் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையினுலே அறம், பொருள் இன்பமென்று முப்பொருளால் எடுத்துரைத்தார்.

இனி மேலைநாட்டு நல்லறிவாளர்கள் அறநெறிகளை உலக மாந்தர்களுக்கு எடுத்துப் போதித்த முறைகளை வள்ளுவர் ஒரு குறளில் ஏழு சீர்களில் உள்ளடக்கிப் போதித்த வழிகளோடு ஒப்பிட்டுக் காண்போம். மேலை நாட்டறிஞர்கள் செய்யுள் வாயிலால் உலகத்தவர்களுக்கு நீதியைப் புகட்டிய முறைகள் வள்ளுவர் இயம்பிய முறைகளுக்கு முற்றிலும் முரண்பட்டவைகளாகும். அவர்களது ஒவ்வொரு செய்யுளும் விழுமிய வாழ்க்கைக்குரிய குறிக்கோளொன்றையோ அல்லது வாழ்க்கைக்கு வழிகாட்டியாகிய ஒழுகலாறொன்றையோ பாட்டின் அடிப்படைக் கருத்தாகக் கொண்டு எழும். அச்செம்மைசால்நன்னெறியைக் கற்ருேர்க்கும் மற்ருேர்க்கும் உணர்த்த ஒரு அடியையோ அல்லது இருவடிகளையோ அன்னுர் வேண்டிற்றிலர்; பலவடிகளைத் துணையாக வேண்டி நின்றனர். அவர்கள் எல்லோரும் பாட்டின் முற்பகுதியில் பல கருத்துக்களைக் கூறி அக்கருத்துக்களின் பயனுய்ப்போந்த ஒரு ஒழுகலாற்றை ஈற்றிலாவது அல்லது பாட்டின் நடுவணுவது வைத்துக் கூறுவர். ஆகவே ஒரு விழுமிய பொருளை அல்லது செந்நெறிச் செம்பொருளை உலகத்தார்க்கு உணர்த்திக் காட்டப் பலவடிகளைத் துணைக்கொள்ள வேண்டியவராயினர். இவ்வுண்மையை வலியுறுத்த மேல்நாட்டுப் புலவர்கள் யாத்துத் தந்த பல இழுமென் மொழிச் செய்யுள்களை எடுத்துக்காட்டாக ஈண்டுத் தருவாம்.

* பென்ஜான்சன் என்பார் தோன்றினுல் ஒருவன் புகழொடு தோன்றுதல் வேண்டும்; ஊனுடம்பு மறையினும் அன்னுனது புகழுடம்பு என்றும்நிலைபெற்று உலகில் நிலவுதல் வேண்டும். அங்ஙனம் அழியாப் புகழை உலகில் நிலைநாட்ட ஓக் என்னும்

---

* Ben Jonson

உயர் மரம் பல்லாண்டு நின்று இறுதியில் கட்டையாய் விழுதலேயன்றி வேறு எவ்வாற்றானும் பயனுதவா நிலை போன்று, இம் மண்டிணி ஞாலத்து ஒருவன் பல்லாண்டு குறிக்கோளற்று உலகவர்க்கு நற்பயன் போதியாது மறையும் நீண்ட ஆயுள்வாழ்க்கை வேண்டத் தக்கதன்று.* எழுஞாயிறில் தோன்றி படிஞாயிறில் அழியு மாலைத்தாகிய ஒருநாள் வாழ்வினேடு கண்கவர் நல்லெழிலோடு உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் லில்லிப் பூவின் சில்வாழ்நாள் விரும்பத் தக்கது என்று கூறுவர். இவ்வொரு உயர் நீதியை உலகத் தவர்க்கு நினைப்பூட்ட அப்பாட்டில் எட்டு அடிகளை அவ் வாசிரியர் எடுத்துக்கொண்டார். அவர் தாம் அப்பாட்டினுலே படிப்பார்க்கு அறிவுறுத்த எண்ணிய ஒழுகலாறு ஒன்றேயாம். அஃது சில் வாழ்நாள் சில்லுருவிலும் நல்லெழில் காண்டல் கண்கூடு; நற்பயனீதல் முடியும்; சிற்றறிவும் சிறுதொழிலும் பெரும் பிணியுங்கொண்ட சிலவாழ்நாட்களிலும் வாழ்க்கையில் செய்தற்கரிய அரும்பெருஞ் செயல்களைச்செய்து வாழ்க்கையை நல்லாற்றில் வெற்றியோடு முற்றுறச் செய்ய இயலும் என்பதாம்.

*ஜே. செர்லி என்ற மூதறிஞர் முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலொருபிடி சாம்பலாய் மண்ணுதல் உலக இயல்பு; எமன் இளையோன் என எண்ணுன்; பாலன் எனப் பாரான்; முடிகவித்து செங்கோல் ஏந்திய மன்னன் என மதியான்; கைவாள் கொண்டு போர்க்களத்தில் மாற்றார் உயிர் குடித்துக் களவேள்வி செய்து வெற்றிகொண்ட வீரனையும் தனக்குப் பல்லுயிர் நல்கிய உயிர்த்தொண்டன் என விடான்;

---

* J Shirley

" It is not growing like a tree
In bulk, doth make Man better be;
Or standing long an oak three hundred year,
To fall a log at last, dry, bald and sere:

A lily of a day
Is fairer far in May,

Although it fall and die that night:—
It was the plant and flower of Light.
In small proportions we just beauties see;
And in short measures life may perfect be."

எல்லோரும் சம நிலையில் நன்றாய் ஆக்கப்பட்டவர்களே; ஒன்றாய் எண்ணப்பட்டவர்களே; புழுதியில் புழுதியாய் இறக்கப்பட்டவர்களே என்ற கருத்துக்களை உலகியலார்க்கு எடுத்துக் காட்டத் தமது பாட்டில் இருபத்திரண்டு அடிகளை அமைத்துக்கொண்டார். அப்பாட்டின் இறுதியில் மேற் காட்டிய கருத்துக்களின் தொடர்பொருளாய், பயனாய் நமக்குப் போதித்த நல்லாறு ஒன்றேயாம். உலகில் தோன்றுவது புதிதன்று; இறப்பது அதனினும் புதிதன்று; தோற்ற முண்டேல் இறப்பு உண்டு; நேற்றிருந்தான் இன்றில்லை என்பது உலகப் பெருமை; உயர்குலப் பிறப்பினால் பெரியோர் எனப்படார்; இழிகுலப் பிறப்பினால் சிறியோர் எனப்படார்; செய்தொழில் வேற்றுமையால்தான் பெரியோராதலும் சிறி யோராதலும்; எனவே வாழ்நாளில் நன்றே சிந்தித்தல் வேண்டும், நன்றே சொல்லுதல் வேண்டும், நன்றே செய்தலும் வேண்டும்; நன்று ஒன்றே இறப்பினும் எஞ்சி நின்று அன்னா ரது நன்மைம் நவிற்றுவது; அன்னாரது எரிந்த உடம்பின் கைப் பிடிச் சாம்பரை உரமாகக்கொண்டு, அதனின்றும் தோன்றி அகவிதழ் புறவிதழாக மலர்ந்து எங்கணும் நறுமணம் வீசித் தன் பின்தோன்றல்களாகத் தோன்றிய இளைஞர்களுக்கு வீடடைய வழிகாட்டும்.

இன்னுஞ் சில மேலை நாட்டு மேதக்கோர் ஒரு சிறந்த உண்மையினை அல்லது செந்நெறியைப் புலப்படுத்தக் கைக் கொண்ட முறை முன்னையதனினும் மிக எளிதாம். எல்லோரும் மக்களுக்கு வழிகாட்டிகள் தான்; ஒழுக்க போதனை செய்ய நினைந்த அறநெறியாளர்கள் தான். இத்தகையோர் தாம் கண்ட முடிபுகளை உலக நெறியாளர்களுக்கு வலியுறுத்தத் துணை யாகக் கொண்டது கதைகளையே யாம். அக் கதைகளில் அஃறிணைப் பொருள்கள் ஒன்றோடொன்று பேசுவன போலவும் கேட்பன போலவும் உரையாடல்கள் நிகழ்த்தப்பெறும், ஆசிரியன் அவ்வுரையாடல்களின் வாயிலாய் ஒரு நீதியினை உலகத்தவர்க்கு அறிவுறுத்துவான். அக் கதைகளின்

---

Only the actions of the just
Smell sweet and blossom in their dust

(Death, the Leveller — J. Shirley)

அடிப்படையினெழுந்த பாட்டின் வகையை பேபிள்* என்பர் ஆங்கில வல்லுநர். பஞ்சதந்திரக் கதைகளும் ஈசாப் எழுதிய கட்டுக் கதைகளும்† இப்பகுதியின்பாற் படுமென்பர். பேபிள் என்பது ஒரு சிறு கூட்டுக்கதை. அதிலுள்ள கதா பாத்திரங்கள் மக்கள், தேவர்நரகரல்லர்; அஃறிணைப்பொருள்களாகிய விலங்கு களும் பறவைகளுந்தான். ‡எமர்சன்என்பார் §மலையும் அணிலும் என்ற பேபிள் முகத்தால் நமக்குப் போதித்த படிப்பினையை ஈண்டுக் கூறுவாம். இமயம் என ஓங்கி வளர்ந்திட்ட ஒருமலை தன்னுடைய அளக்கலாகா அளவாலும் பொருளாலும் துளக்க லாகா நிலையாலும் தோற்றத்தாலும் கண்மூடி இறுமாந்து அணிலைப்பார்த்து 'அற்பத் திருடா! நீ இருப்பது இவ்வுலகிற்கு இழுக்கு' என்று இழிமொழி கூறிற்றும். அதற்கு அச்சிறு அணில் பின்வருமாறு, ஆம்! நின்

உரைமொழி முற்றும் உண்மையே. ஆயின்
ஒருவகைப் பொருளின் ஒருல காமோ?
ஒருவெயில் மழையின் ஓராண்டு தேறுமோ?
பற்பல பொருளும் பற்பல பருவமும்
ஒன்ருய்க் கூடினே உலகாம் ஆண்டாம்.

என்தொழில் இயற்றவும் யாவர் வேறுளார்!
உன்பெரும் உருவெனக் கில்லை, உனக்கும்
என்சிறு வடிவிலை, மேலும் என்றன்
உள்ளக் களிப்பில் உற்று நோக்கில்
எள்ளத் தனையும் உனக்கிலை இலையே.

வனங்களை முதுகில் வகித்து நின்றிட
வல்லை நீ யாயின் மற்றிங் கெனைப்போல்
நெல்லைக் கொறிக்க நின்னு லாகுமோ?
யாவரே பெரியர் யாவரே சிறியர்
ஒன்றிற் பெரியர் ஒன்றிற் சிறியராம்
ஒன்றிற் சிறியர் ஒன்றிற் பெரியராம்

என்று எதிர்மாற்றங் கூறும் முகத்தால் அப்பாட்டு கடலமுது கரையெடுத்து வைத்தாற்போன்ற ஓர் பேருண்மையினை நமக்கு எடுத்துரைக்கின்றது. அதுதான் யாதெனில்,

---

* Fable † Aesop's Fables

‡ Emerson § The Mountain and The Squirrel

A fable is a short story in which birds and beasts are made to speak and behave like human beings. Like the Allegory and Parable, it teaches some moral truth.

‡ ஆடலும் ஆற்றலும்
ஒவ்வொரு வர்க்கும் ஒவ்வொரு விதமாம்
அறத்தொடும் முறையொடும் ஆழ்ந்த அறிவொடும்
அனைத்துமிவ் வுலகில் அமைக்க லாயின

என்பதாம். ஆற்றல் படைத்த, ஆறறிவு படைத்த ஆடவரா லும் பெண்டிராலும் குருவி கட்டும் கூட்டையோ அல்லது சிலந்தியாக்கும் வியத்தகு பந்தலையோ கட்டமுடியாது. நமக்குரிய ஆற்றல் அஃறிணைப் பொருள்களுக்கில்லை; அவைகளுக்குரிய ஆற்றல் உயர்திணைகளுக்கில்லை. இறைவன் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு ஆற்றலைக் கொடுத்திருக்கின்முன். இக்கருத்தொற்று மையுடைய ஒளவையார் பாட்டின் உள்பொருளை ஓர்மின்.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கரையான்
தேன்சிலம்பி யாவர்க்குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும்
வல்லோ மென்று வலிமைசொல வேண்டாங்காண்
எல்லோர்க்கு மொவ்வொன் றெளிது.

மேற்கூறிய உலகியலறிஞர்கள் போக, மெய்ப்பொருளை நாடித் தேடிக் கண்டுகொண்ட *அகிலவுலக மெய்ஞ்ஞானிகள் மெய்வருந்தி, பசிநோக்காது, கண்துஞ்சாது அல்லும் பகலும் கருமமே கண்ணுயிருந்து தாம் தாம் கண்ட வீட்டு நெறியை அல்லது உயர் ஞான போதத்தைத் தோன்றி மறையும் உலக இன்பத்தில் ஆழ்ந்து கிடக்கும் மக்களுக்கு எம்முறையில் பசு மரத்தாணி அறைந்தாங்கு உளங்கொள உரைத்தார்களென் பதை இனிக் கூறுவாம். அரிஸ்டாட்டில், பிளேட்டோ, புத்தர், மார்க்கஸ் அரீலியஸ், ஷேக்ஸ்பியர், மில்டன் உள்ளிட்ட அகில வுலகம் போற்றும் அறநெறியாளர்களுள் †இயேசுநாதர் பேரபிள் என்ற ஒரு வகையினை உறுதுணையாகக்கொண்டு சில அறநெறிகளைத் தன் சீடர்களுக்கும் மக்களுக்கும் போதித்து வந்தார். அஃது உலகக் கதை போன்றெழுந்து பயின்ருேர்க்குச் செம்பொருள் காட்டி வீடளிக்கும் உயர் குறிக்கோளைத் தன்ன கத்தே கொண்டு மிளிர்வது.

---

‡ Talents differ: all is well and wisely put
*International Seers of the World † Jesus Christ

"A parable is an earthly story with a Heavenly meaning. A moral precept is illustrated by a simple tale of ordinary everyday event."

மக்கள் பல இயல்பினர்; பல திறத்தினர். இவ்வுண்மையை விளக்க, விதை தூவுவோன் வாயிலாய்ப் பல எழுத்துக்களடங்கிய, பல வரிகளமைந்த ஒரு பேரபிள் இயேசுநாதருக்கு இன்றியமையாததாயிற்று.* விதை தூவுகின்ற ஒருவன் விதை தெளிக்கச் சென்ருன். தூவிய விதைகளில் சில வழிப்போக்கில் வீழ்ந்தன; அவைகளைப் பறவைகள் பொறுக்கி விழுங்கின; சில பாறைகளில் வீழ்ந்தன. அவை விரைவில் முளைத்தன, சூரிய வெப்பத்தைத் தாங்க மாட்டாது கரிந்து போயின. மேலும் அவை வேரூன்றி நின்று முளைப்பதற்குச் செழிப்பான பூமியும் உள்ளாழமுமில்லை. சில முட்களுக்கிடையில் சிதறி வீழ்ந்தன, முளைத்தன. ஆனல் தோன்றி எழுந்தவை நெருக்குண்டு தாக்குண்டு விளையா வாயின; சில வளமுள்ள நன்னிலத்தில் வீழ்ந்தன, வீழ்ந்தவை நன்கு நூறு மடங்கும், அறுபது மடங்கும், முப்பது மடங்குமாக நற்பயன்களைக் கொடுத்தன. மேற்சொல்லிய இப் பேரபிள் நல்லோர் சொல்லைக் கேட்கும் மக்கள் நான்கு வகையினர் என்பதை எடுத்துக் காட்டும். சிலர் தீர்க்கதரிசியின் சொற்களைக் கேட்டனர். ஆனல் தீநெறியாளர்களது கைவசமும் சொல்வசமும்பட்டு அச்சொற்களை உடனே மறந்தனர்; இவர்கள் வழியிடையே வீழ்ந்த விதைகளுக்கொப்பானவர்கள். சிலர் மெய்ஞ்ஞானிகளின் சொற்களைக் கேட்டு அச்சொற்களின்வழி நிற்க முயன்றனர். ஆனல் வாழ்வில் இடுக்கண் வந்துழிப் பொறுக்கலாற்ருராய், சகிக்கமாட்டாராய் அச் சொற்களைக் கைவிட்டனர். நெஞ்சில் உரமில்லா நேர்மைத் திறமில்லா இவர்கள் கற்பாறையின் கண்ணே வீழ்ந்த விதைகளுக் கொப்பானவர்கள். இன்னும் சிலர் மெய்கண்டாரின் சொல்வழி நின்று சின்னுள் ஒழுகினர். ஆனல் செல்வத்தின் மாயையாலும் செருக்காலும் அச் சொல்லின் உட்கோளையும் பொருளையும் புறக்கணித்தனர். இவர்கள் முள்ளிடையே வீழ்ந்த விதைகளுக் கொப்பானவர்கள். சிலர் எல்லாம் வல்ல சித்தரின் சொற்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து வீடடைந்தனர். இவர்கள் நன்னிலத்தில் வீழ்ந்து நற்பயன் கொடுத்த விதைகளுக் கொப்பானவர்கள்.

ஆனல் ஒரு குலத்திற்கொரு நீதி கூருது பொது நீதி கூற வந்த நந்தெய்வப் புலமைத் திருவள்ளுவர் தாம் வாழ்க்கை அநுபவத்தில் நுனித்தறிந்து கண்ட ஒழுகலாறுகளை மாட

* Parable of the Sower St. Mathew-Chap. 13.

மாளிகையோடு நிவந்தோங்கிய பெரிய அரண்மனைக்கு அடிப் படை வேண்டுமாப்போல ஒரு ஒழுக்க நெறியை நிலைநாட்டப் பல அடிப்படைக் கருத்துக்களை வேண்டிற்றிலர்; பேபிளை வேண்டிற்றிலர். திருவள்ளுவர் வேண்டியதெல்லாம் சில்வகை எழுத்தில் பல்வகைப் பொருளை அடக்குதற்கு ஒன்றே முக்கால் அடிகள் தான்; ஏழு சீர்கள் தான். அவரது குறள் குறுகத் தறித்தது; முப்பாலில் நாற்பால் மொழிவது; சொற் செட்டும் ஒலிச் செட்டும் கொண்டது; அவரது குறளின் சொற் கிடக்கை முறை, சொல்வைப்பு முறை பல்கால் சிந்தித்தற் குரியது; குறள் நடையழகில்* ஒப்பதும் மிக்கதுமில்லாதது. எவ்வெவர் எக்கோணங்களில் நின்று பார்ப்பினும் அவ்வவர் களுக்கெல்லாம் அவ்வவர் கோணங்களில் அவா முற்றுற அளப்பில் பொருள்களைக் கொடுக்க வல்லது. அரசியலறிவு விழைவோர்க்கு அரசியல் அறிவை நல்குவதும் அது; போர் முறையை வேண்டுவோர்க்குப் போர்முறையைத் தெரிவிப்ப தும் அது. மருத்துவ நூல் அறிஞர்களுக்கு அதனியல்பை எடுத்தியம்புவதும் அது. தத்துவம் காண முற்படுவோர்க்குத் தத்துவத்தை எடுத்துச் சொல்லும் பெரு நூலும் அது.

இப் பெற்றிகளையெல்லாம் ஒருங்கே கொண்டு விளங்கும் திருக்குறளை யாத்துத் தந்த திருவள்ளுவர் மேலைநாட்டுப் புலவர் களின் ஆற்றல்களின் ஒன்றினுக்கேனும் பிற்பட்டவரல்லர். அப்புலவர்களின் மாட்சிக்குரிய நற்பண்புகளெல்லாம் உடனுய் வேருய் ஒன்ருய்க் கலந்திருப்பதை வள்ளுவர் மாட்டும் குறள் மாட்டும் நன்கு நாம் காணலாம். உலக மக்கள் வேத மாகிய குறளினிடத்து மில்டனின் மகத்துவமும், தாந்தேயின் அருள் நோக்கும், ஷேக்ஸ்பியரின் அகிலத்துவமும், அரிஸ்டாட் டிலின் மேலாந்தரமும், பிளோட்டோவின் உயர் குறிக்கோளும், மார்க்கஸ் அரீலியஸின் ஒழுக்க ஆர்வமும் நன்ருய்க் கலந்து இயைந்து நிற்பதைக் காணலாமென்று பிறநாட்டு அறிஞர்களே வீறுகொண்டு கூறுகின்ருர்கள். †

---

* Style

† The grandeur of a Milton, the grace of a Dante, the universality of a Shakespeare, the sublimity of an Aristotle the idealism of a Plato, the moral fervour of a Marcus Aurelius are all to be found in a harmonious blending and appropriate proportion in this Bible of Mankind.

வள்ளுவர் ஓர் ஒழுக்க நற் சீலர். அவரது திருக்குறள் வாழ்க்கையில் மலர்ந்த ஓர் ஒப்பற்ற இலக்கியம், வாழ்க்கையில் முதிர்ந்த அநுபவப் பேரொலி.* அவர் தாம் வாழ்க்கை அநுபவத்தில் கண்ட பேருண்மைகளைத்தான் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கையைச் செம்மையுற நடத்தினர். பிறரும் தம் அநுபவத்தின் விழுப்பயனைக் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும் என்பதே அவரது நன்னோக்கமாகும். ஆபர்கிராம்பி† என்ற தற்கால லண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர் செய்யுளுக்கு இலக்கணம் வகுத்த காலத்து இதனையே வலியுறுத்தினர், செய்யுள் என்பது புலவனின் அநுபவ வெளியீடு‡ செய்யுள் கற்பனையின் விளைவாய்த்§ தோன்றுவதும் உண்டு; புலவனின் வாழ்க்கை அநுபவ வாயிலாய் வருவதும் உண்டு. கற்பனையின் பயனாய் உருப்பெற்ற செய்யுள் புலனின்பத்தைப் பயக்கும்; வாழ்க்கைக்குப் பயன்படா. வாழ்க்கையின் விமர்சனமாக வாழ்க்கையினின்றும் எழுந்த செய்யுள் பல ஒழுக்க நெறிகளை மக்களுக்குச் சுட்டிக்காட்டி மக்களை நல்லாற்றுப்படுத்தும். வள்ளுவரின் இலக்கியமாகிய குறள் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது; அதனின்றும் எழுந்தது. அவர் தம் வாழ்க்கையில் முதிர்ந்த அநுபவத்தைத் தெளியக் கூறினர்; அதனை வாழ்க்கையில் குறிக் கோளாகக்கொண்டு ஒழுகினர்; நீதிகளைப் பிறருக்கு எடுத்துரைத்தார். அவர் வாய்ச்சொல் வீரரல்லர். ஷேக்ஸ்பியரது ஹாம்லெட்‖ நாடகத்தில் பொலோனியஸ் Z லீயார்ட்டஸ் × என்ற தன் மகனுக்கு உலக நீதிகளைப் போதிக்கின்ருன். X அவன் கூறும் ஒழுக்கலாறுகளை யார்தான் மறுக்கமுடியும்; அவை சிறந்த ஒழுக்க நெறிகள்தான். 'உன்னை ஏமாற்றிக் கொள்ளாதே; மனச்சான்றுக்கு உண்மையாயிரு, நட' ∴ என்பதைப்போன்ற ஆப்தமொழிகளை எடுத்துக் கூறுகின்ருன். ஆனல் இச்செவ்விய நீதி போதனைகளையெல்லாம் அவன் மகனுக்கு எடுத்துரைத்தானே ஒழியத் தன் வாழ்க்கையில் அவைகளைக் கடைப்பிடித்து ஒழுகினனல்லன். அவைகள் தன் வாழ்க்கைப் பூங்காவில் அநுபவத்தில் தோன்றி மலர்ந்த மலர்களில்லை. ஒழுக்கச் சட்டங்களைப் பிறர்க்கு வகுத்தான். அதனுற்ருன் அவனைப்பற்றிச் சொல்லவந்த இலக்கிய ஆய்வுரையாளர் ⁝ கோல்ரிட்ஜ் + ஒழுக்கச் சட்டம் எத்தன்மை

* Echo of his personal experience † Abercrombie
‡ Poetry is communicative experience § Imagination.
‖ Hamlet Z Polonius × Laertes X Act 1; Scene iii.
∴ "To thine ownself be true" ⁝ Critic Literary + Coleridge

யது என்பதைக் கூறுமுகத்தால் அவனது ஒழுக்க நலமின்மையைக் கண்டித்துப் போந்தார். அவன் ஒற்றைக் கண்ணையுடைய சைகிளாப்ஸ்* போன்றவன் என்பதோடு அமையாது அவ்வொற்றைக் கண்ணையும் முகத்தின் முன் தாங்காது பின் தாங்கியவன் என்று ஏளனம் செய்தார்.†

நம் வள்ளுவரோ அத்தன்மையரல்லர். சில நீதிகளைத் தம் வாழ்க்கை அநுபவத்தினின்றும் பிறப்பித்தார்; வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டார்; ஒழுகினார்: பிறரும் அங்ஙனே ஒழுகவேண்டும் என, குறள் எனும் இழுமென்மொழியால் வேண்டுகின்றார். அவர் பிறருக்கு அறமுயலும் பெரியார் மாத்திரமல்லர்: ஒழுக்கத்தில்காட்டும் சீரியருமாம்.

'அறம்பாடிற்றே ஆயிழை கணவ' என்ற அடியில் வரும் அறம் என்ற சொல், திருக்குறளையே சுட்டிக் குறித்தது என்று ஆலத்தூர் கிழார் புறநானூற்றுச் செய்யுளால் நினைப்பூட்டுகிறார். அறம் என்ற இத் தூய தமிழ்ச் சொல் அறு+அம் எனப் பிரிந்து அறமென இயைந்து விதியாலும் விலக்காலும் செய்வன தவிர்வனவற்றை வரையறுப்பது அல்லது மக்கள் வாழ்வில் கொள்ளத்தக்கனவும் தள்ளத்தக்கனவும் இவையென வரையறுப்பது என்ற பொருளைப்பயந்து நிற்பது. அறம் என்ற இச்சொல்லை அறியுமாறறிந்து பல்வேறு இடங்களில் பல்வேறு பொருள்களில் செவ்விதில் தேர்ந்து வள்ளுவர் பயன்படுத்திப் போந்தார். வள்ளுவர் அச்சொல்லை 'ஈதலறம்' என்றதினால் ஈதல் என்ற பொதுப் பொருளில் அடியிற்கண்ட குறள்கள் வாயிலாய்,

---

* Cyclops

† "A maxim is a conclusion upon observation of matters of fact and is merely retrospective; an idea or if you like a principle carries knowledge within itself, and is prospective. Polonius is a man of maxims ..........A man of maxims is like a cyclops with one eye, and that eye placed in the back of his head'

(Coleridge - 'On Hamlet' Table Talk, June 24, 1827.)

*சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்*
*காக்கம் எவனோ உயிர்க்கு.*
*அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க.*

'அறத்தா றிதுஎன வேண்டா' 'இன்சொலினதே யறம்' என விளக்கினர். இன்னும் அறம் என்னுஞ் சொல் இல்லறத்தைக் குறிக்கும் என்பதற்கு, அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை- அறத்தால் வருவதே இன்பம், என்ற இக்குறள்களையும், துறவறத்தைக் குறிக்கும் என்பதற்கு

*இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டோர்*

என்ற இக்குறளையும், அறக்கடவுளைக் குறிக்கும் என்பதற்கு

*என்பி லதனை வெயில்போலக் காயுமே*
*அன்பி லதனை அறம்.*
*கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி*
*அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து*

என்ற குறட்பாக்களையும் எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.

இங்ஙனம் பொதுவிலும் சிறப்பிலும் அறம் என்ற சொல்லிற்குப் பொருள் கண்ட வள்ளுவர் பிற மொழியாளர் களெல்லாம் வரையறுத்துக் கூற இயலாத ஒரு இலக்கணத்தை அச்சொல்லிற்குக் கொடுத்துள்ளார். அறமாவது மனமாசற்ற நிலை; அவ்வளவே அறம் என்கின்றார்.

*மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்*
*ஆகுல நீர பிற.*

எவ்வளவு பொருள் ஆழம் கொண்ட சொற்கள்! இச் சொற்களின் கருத்துக்களை மனக்கொண்மின்; பொருள்களின் பெருக்கத்தை ஓர்மின்! வள்ளுவர் உள்ளத்தில் ஒளியுண்டு; எனவே அவர் வாக்கினிலும் ஒளியுண்டு. மனத்தில் மாசின்றேல் அதன் பயனாய்ப் பிறக்கும் சொல்லிலும் வழுவின்றாம்; சொல்லில் குற்றமின்றேல் அதனால் தூண்டப்பெறும் செயலிலும் தவறின்றாம். மனத்தின்கண் மாசு இருக்குமாயின் சொல்லிலும் செயலிலும் பிழையுண்டாகும். எனவே மனமாசு துடைத்தலே அறிஞர் செயலாம். அங்ஙனம் மனமாசினை நீக்க முயலாது புறத்தார்க்கு அறவோர் போல நடிப்பவரின் செயல் போலிச் செயலாம். அதனாற்றான் 'ஆகுல நீர பிற' என்றார். மனம், மொழி, மெய்களில் குற்றமில்லாத செயலே அறம் என்பது

வள்ளுவரது கருத்தாம். இல்லறத்திற்கு ஊன்றுகோலாய் இருக்கும் மாசில்லா மனத்தைச் சிதைக்க அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற அலைகள் அடிக்கடித் தாக்கும். மனம் இத்தாக்குதலுக்கு இடங்கொடாது கலங்கா நிலைமைத் தாய், திண்ணியதாய், அசையாது நிற்குமேல் அறம் வளர் பிறைபோல் வளரும்; இன்றேல் தேய்பிறைபோல் நந்தும். அழுக்காறு என்பது பிறராக்கம் கண்டு பொறாமை; பிறர் செல்வம், கல்வி, பேரழகு முதலியன கண்டு பொறாமையால் துன்புறுகின்றவன் அவைகளைப் பெற முயலுகின்றான். அவை கைவாராக் காலத்து, கிட்டாதாயின் வெட்டன மற என்பதை அறியாதாய் மீண்டும் மீண்டும் அவைகளைப் பெற முற்படு கின்றான்; முற்பட்டும் கிடைத்திலதாயின் அவன் வெகுளி என்னும் வெங்கராவினால் விழுங்கப்படுகின்றான். அவ்வெகுளி பின் கடுஞ் சொல்லைத் தோற்றுவிக்கின்றது. அச் சொல் பின் செயலாய்த் தொழிற்படுகின்றது. அதன் பயனாய் அவன் வாழ்வு அறன் கடைப்பட்ட வாழ்வாய் முடிகின்றது. இக் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கித்தான் வள்ளுவர்,

> அழுக்கா றவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா இயன்ற தறம்

என்று கூறினார்.

வள்ளுவர் வாழ்க்கைக்குரிய ஒழுகலாறுகளை வகுத்த அற நெறியாளர். அவரது ஒவ்வொரு குறளும் ஒரு ஒழுக்க போதனைச் சட்டமே.* அவரது நூல் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலைத் தன்னகத்தேகொண்டு நிவந்தோங்கி நிற்பது. அறத்துப்பால் முப்பத்தெட்டு அதிகாரங்களைக் கொண்டது. நான்கியல்களை உடையது. பாயிரம் நான்கு அதிகாரங்கள். இல்லற இயல் இருபது; துறவற வியல் பதின்மூன்று, ஊழ் இறுதி அதிகாரம். பொருட்பால் எழுபது அதிகாரங்களைக் கொண்டது; மூன்று இயல்களாக விளங்குவது. அரசியல் இருபத்தைந்து அதிகாரங்கள்; அங்கவியல் முப்பத்தி ரண்டு; ஒழிபியல் பதின்மூன்று அதிகாரங்கள்; இன்பப்பால் இருபத்தைந்து அதிகாரங்களோடு மிளிர்வது; இருவியல்களைக் கொண்டது. களவியல் ஏழு அதிகாரங்கள்; கற்பியல் பதினெட்டு அதிகாரங்கள். ஆகவே வள்ளுவரது குறள் ஒரு

* Moral epigram

நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையுடையதாய், ஒன்பது இயல்களைக் கொண்டதாய் ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங் குறள்களோடு நின்று நம்மை உய்யக் கொள்ளும் ஓர் மாண்புமிக்க நூல்.

அறத்துப்பாலைப் பாயிரம் நீங்கலாக வள்ளுவர் துறவறம் இல்லறம் எனச் சொல்லறம் இரண்டாகப் பாகுபாடு செய்தார். இப் பாகுபாடு அமிழ்தினு மினிய தமிழ் நூல்களுக்கே உரியது. ஏனைப் பிற மொழியாளர்களுக்கு ஒரு சிறிதும் இப் பாகுபாடு புலப்பட்டிலது. வள்ளுவர் கருத்தின்படி இல்லறத்திற்கு அடிப்படை அன்பு. துறவறத்திற்கு அடிப்படை அருள். இல்லறத்தானுக்கு வள்ளுவர் கற்பித்த ஒழுகலாறுகள் பல. இல்லறத்தான் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனாக வாழ்தல்வேண்டும். அவன் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐம்புலத்தையும் ஓம்பும் தகைமையுடையவனாய், துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும் துணைவனாய் விளங்குதல் வேண்டும். அவன் நற்குண நற்செய்கைகளையுடைய வாழ்க்கைத் துணைவியையுடையவனாய், இல்லிற்கு நன்கலமாகிய நன்மக்களைப் பெற்று, விருந்து புறந்தந்து, காலத்தினால் பயன் றூக்காது பிறர்க்குதவும் நற்பண்புடையவனாய், 'அகத்தானாம் இன்சொலினதே அறம்' என இன்சொல்லுடையவனாய்த் திகழ்தல் வேண்டும். மனைக்கு விளக்காகிய அம்மடக்கொடியும் தற்காத்து, தற்கொண்டாற் பேணி தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாதவளாய் நாற்குணமும் நாற்படையாக்கொண்டொழுகும் பெற்றியளாய், கணவன் புரியும் நல்லறத்திற்கெல்லாம் உறுதுணையாய் ஒன்றி நின்று காவடியின் இருதலையினும் பாரம் ஒத்ததுபோல், காதலில் கணவனுடன் கருத்தொருமித்து ஆதரவு பெற்று இன்பத்தை நுகர்தல் வேண்டும். இல்லற நெறியில் நிற்கும் ஆடவரும் பெண்டிரும் இம்முறைகளிலே நின்று ஒழுகற்பாலர் என்பதைக் குமரகுருபர சுவாமிகளது சிதம்பர மும்மணிக்கோவை 'பூமலி கற்பகப் புத்தேள்' என்ற இரண்டாவது செய்யுளைப் படித்தறிக.

வள்ளுவர் இல்லறத்தார்க்கு மேற்கூறிய ஒழுக்கங்களிலெல்லாம் இருபாலார்க்கும் இன்றியமையாத பேரொழுக்கம் எனக் கூறியது கற்பெனும் கலங்கா நிலைமைத்தாகிய நல்லொழுக்கத்தையேயாம். இல்லறத்திற்கு அன்பே உயிர்.

அவ்வன்போடியைந்த உயிரை யாண்டும் நிலைபெறச் செய்வது கற்பெனும் ஒழுக்கமே. அவ்வொழுக்கம் இருபாலார்க்கும் பொது. ஆடவற்கு அஃது அத்துணை வேண்டப்படுவதன்று என்ற கூற்று வள்ளுவருக்கு உடன்பாடன்று. கற்பெனும் அந்நல்லொழுக்கம் இருபாலார்க்கும் நனிவேண்டப்படுவது. ஆடவன் தன் மனையாளை மாசிலர்க் குலத்து வந்தாள்; செல் விருந்தோம்பி வருவிருந்து உவப்பவூட்டும் நல்லாள்; பெற்றதே கொண்டுவக்கும் நீராள்; பொற்பில் திரு; கற்பில் அருந்ததி எனக் கண்டு பிறர்மனை நயவாது ஒழுகுதல் வேண்டும். தன் மனைவியை ஆளுந்திறம் அவனுக்கு வேண்டுமேல் பிறர்மனை நோக்காப் பேராண்மை அவன்பால் குடியிருத்தல் வேண்டும். ஆத்த மனையாள் அகத்திலிருக்கக் காத்த மனையாளைக் காமுறுதல் பலாவின் கனியுண்ணமாட்டாமல் ஈச்சம் பழத்திற்கு இடருற்ற வாறு என்ற உண்மையை அவன் உணர்தல்வேண்டும். இக் கருத்துக்களையெல்லாம் உள்ளடக்கித்தான் பேராண்மை என் பதற்கு இலக்கணம் வகுக்க வந்த வள்ளுவர்.

> பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
> கறன்ஒன்றோ ஆன்ற ஒழுக்கு

எனக் கூறிப் போந்தார். அஞ்சா நெஞ்சம் படைத்து அமர்க் களத்தில் வாளோச்சி வெற்றி பெறுதலைப் பேராண்மை என்று வள்ளுவர் கருதிற்றிலர்; ஒரு கொள்கையைக் கடைபிடித்து அக் கொள்கையினின்றும் தவறத் தருணம் வந்துழியும் உயிர் கொடுத்தும் கொள்கையைக் காப்பாற்றும் ஒருவனது வீரத்தை யும் வள்ளுவர் பேராண்மை என்றுரிலர். ஐந்தவித்தான் ஆற்றலே ஆற்றல். உரனென்னும் தோட்டியால் ஓரைந்தும் காத்தலே ஆண்மையினும் ஆண்மை என்பது வள்ளுவர் உலகிற்குப் போதிக்க எண்ணிய சிறந்த கருத்து. காமங் காழ்கொளின் அதனை அடக்குதல் எல்லாமடக்கிய முனிவர்க்கும் அரிதாம்; புறப் பகைளை அடக்கிய படையுடை மாவேந்தர்க்கும் இவ் வகப் பகையை அடக்குதல் இயலாதாம். கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இதனை அடக்குதல் அரிதாம், இதனாற்றான் ''எம்மைஎன்' றதனால் மற்றை மாதரார் தமையும் என்தன் மனத்தினும் தீண்டேன்'' என்று சூளுரை புகன்று வெற்றி பெற்ற திருநீலகண்டரைச் சேக்கிழார் ''வென்றஐம் புலனால் மிக்கீர்'' என்று வீரப்பட்டஞ் சூட்டுவாராயினர். ஆடவர்க்குக்

கற்பு இன்றியமையாதது என்பதைக் கம்பரும் சிறையிருந்த செல்வியாம் சீதை வாயிலாய், தூதுவந்த சொல்லின் செல்வனை,

**வந்தெனைக் கரம் பற்றிய வைகல்வாய்**
**இந்த விப்பிற விக்கிரு மாதரைச்**
**சிந்தை யாலுந் தொடேனென்ற செவ்வரம்**
**தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய்**

என்று இப் பண்பினை இராமனுக்கு நினைப்பூட்டச் சொல்லியதையும் உற்று நோக்குக.

இனி மனைக்கு அரசியாகிய மனையாளும் கற்புக்கரசியாய் இலங்குதல் வேண்டுமென்பது வள்ளுவர் வகுத்த ஒழுக்கத் திட்டங்களில் ஒன்று.

**சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**
**நிறைகாக்கும் காப்பே தலை**

என்றதனால் பெண்டிர் கற்பை வேலியிட்டுக்காத்தல் தங்களது அருங்கடனுமென்பது ஒரு தலை. ஒரு ஆடவனுக்கு அவையில் ஏறுபோல் பீடுநடையை நல்க வல்லது அவன் மனையாளின் கற்பெனும் பொற்பே. அவள் சற்று மாறாக இருப்பளேல் ஆடவன் கூறாமல் சந்நியாசம் கொள்வதே மேலென்பது ஒரு பெண் கவியின் உறுதியான மொழி. தலைவி கற்புடை மடந்தையர்க்குக் காந்தனே கடவுளென்று கொழுநற்றொழு தெழுதல் வேண்டும். 'கற்பில் நின்றன காலமாரியே' என்ற மாட்சி அவள் பிறந்த நாட்டிற்கு ஈட்டிக் கொடுத்தல் மகளிரின் கடனுதல் வேண்டும். வான்தரு கற்பில் நின்ற பெண் பிறர் நெஞ்சு புகாள்; பிற கடவுளர்களைத் தொழாள். கணவனையே முதற் கடவுளாகத் தொழுதெழுவாள். இக் கருத்தையே மில்டன் பெருமகனாரும் சுவர்க்க நீக்கம், நான்கான் புத்தகம் 295—99 வரிகளிலடக்கிக் கூறியதையும் ஒப்பிட்டுணர்க. தமிழ்ப் பெண்டிர் கற்பின் செல்வியர். கணவன் ஓதற்பிரிவுரைக்கில் 'வாழ்வார்க்குரை அல்லது எலும்பைப் பெண்ணாக்கிய திருஞான சம்பந்தர் கற்ற வியத்தகு கல்வி கற்று

---

Thowgh both
Not equal, as their sex not equal seemed;
... ... ... ... ... ... ... ... ... ...
He for God only, she for God in him

வாரும்' என்பர். கணவரையே உள்ளத்தில் ஓவியமாக எழுதி வைத்தமையால் சூடுடை உண்பொருளை உண்டலுமிலர். என்னை? அவர்க்குச் சூட்டை உண்டுபண்ணித் துயரைக் கொடுக்குந் தன்மையாலென்க. எனவே இரு பாலரும் கற்பெனும் பேராற்றல் கொண்டு இல்லறம் எனும் வான்சகடத்தை இழுப்பின் அச்சகடம் இடை நில்லாது முட்டின்றிக் குறிக் கோளிடமாகிய வீட்டினை உரிய காலத்தில் எய்தும் என்பது பெற்றும்.

இனித் துறவற நெறியார்க்கு வள்ளுவர் கூறும் அறநெறியைக் காண்பாம். துறவற நெறியிலுள்ளோர் நீத்தலும், அறுத்தலும், உணர்தலுமுடையோராய் விளங்குதல்வேண்டும். அன்னூர் மூவாசையையும் நீத்து, பிறப்பிற்கு வித்தாகிய அவாவை அறுத்து பொய்கண்டகன்ற மெய்யுணர்வுடையராய் வாய்மை, தூய்மை, கொல்லாமை முதலியன உடையோராய்த் திகழ்தல் வேண்டும். மற்றும் தங்கருமமாகிய தவத்தினைச் செய்தலும் அன்னூரது அறமாம். தவம் என்ற இடத்து நீரில் பலகால் மூழ்கி, நிலத்தசைஇ, தோலுடீஇ, சடைதாழச் சுடரோம்புதல் மாத்திரம் அன்று. அன்னூரும், நீங்கில் தெறூஉம் குறுகுங்கால் தண்ணெனுந் தீயும், நீரிற் குளிப்பினும் குன்றேறி ஒளிப்பினும் சுடும் தீயும், தம்மைப் பற்ருவண்ணம் பற்றற்று இருத்தல்வேண்டும். வள்ளுவர் உள்ளிய துறவு நாட்டை விட்டுக் காட்டிற்கேகும் துறவல்ல. அவர் நினைந்த துறவு உள்ளத் துறவு. ஞானக்களவு அவர்க்கு உடன்பாடன்று. ஊனத் திரளைச் சுருக்கி ஞானத்திரளைப் பெருக்கவேண்டு மென்பது வள்ளுவரது அவா. போலித் துறவை அவர் வன்மையாகக் கண்டிக்கின்றுர் என்பதற்கு,

> வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
> புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.
> தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
> வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

இக்குறட்பாக்கள் சான்றுதல் காண்க.

இனி ஆமைபோல் ஐந்தையும் அடக்கி அவித்த துறவிகள் ஐந்து ஆமைகளைப் பொற் கிரீடங்களாகத் தலைமேல் கவித்து உலவுதல் வேண்டுமென்பார் மாதாநு பாங்கியர். அவை கள்ளாமை, வெஃகாமை, வெகுளாமை, இன்ன செய்யாமை, கொல்லாமை என்பனவாம்.

மெய்ப்பொருள் காண்பதறிவு, செம்பொருள் காண்பதறிவு தீதொறீஇ நன்றின் பாலுய்ப்பது அறிவு என்பதனை நன்குணர்ந்து, பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் என்று பற்றற்றான் பற்றினைப்பற்றி வீடடைதலே அறநெறியாளர்க்கு வள்ளுவர் வகுத்த வழி.

இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் சிறப்புடைய ஒழுக்க நெறி போதித்த வள்ளுவர் பொதுமக்களுக்கும் சில பொது நெறிகளை வகுத்துரைக்கின்றார். உலகில் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே பெற்றோர் ஒரு சிலரே அங்ஙனம் ஒருசிலர் அவைகளைப் பெறுவதற்கு நோற்றோர் சிலர், நோலாதோர் பலர் என வள்ளுவர் காரணங் காட்டுவர். மாசகற்றும் கல்வியை யுடையோரும் பேசுபுகழ் செல்வத்தை ஈட்டியோரும் கல்விச் செருக்கும் பொருள் முனைப்புமின்றி இல்லோர் செம்மலாக இருந்து வறியார்க்கு வழங்கி வாழ்வாங்கு வாழ்தலே சான்றோர் கடன் என்பதைப் பல உவமை முகத்தான் வள்ளுவர் வலியுறுத்துகின்றார். கல்வி நலமுடையோர் ஆங்கோர் ஏழைக்குஎழுத்தறிவித்து, கட்டறுத்து, அவனை எய்தலாகாவீடடையச் செய்தல்வேண்டும். பொருள் நலமுடையோர் பயன் மரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும் ஊருணி நீர் நிறைந்தாற் போலும் ஊர்மக்கட்கு உற்றுழி உதவுதல்வேண்டும். அப்பேரறிவாளன் திரு ஊர் நடுவே நச்சுமரம் இன்னல் விளைத்தாற்போல் ஆண்டுறைவோர்க்கு இடுக்கண் விளையாதிருத்தல் நன்று. செல்வத்துப் பயனே ஈதல் என்ற குறிக்கோளையே வாழ்க்கைச் சட்டமாகக் கோடல் அவர்க்கும் பிறர்க்கும் நன்றாம்.

இன்னணம் அறஞ்செய்கின்றவன் அதனைச் செய்கின்ற காலத்துக் கடுமொழி பகர்தல் அறநெறியாகாது. நுணங்கிய கேள்வியையுடைய அவன் வணங்கிய வாயினனாய்ச் சிறுமையின்நீங்கிய இன்சொலொடு நன்றாற்றுதல் பொன்மலர் நாற்றமுடைத்தாம். பணிமொழி பயிற்றுதலே ஒருவற்கு அணி என்பார் வள்ளுவர். பிறநாட்டாரெல்லாம் பிற பிறவற்றை ஒருவற்கு அணி என்பர்.

வள்ளுவர் உடற்குரிய ஆடையணி, பொன்னணி முதலியவைகளை ஒருவற்கு அணியெனக் கூறார். அவ்வணிகள்

தோன்றி மறைவன, அவை உடலை அலங்கரிப்பன. வள்ளுவர் கூறும் அணிகள் உயிரை அணிவிப்பன. ஒரு இடத்தில் நெஞ்சத்துக் கோடாமை அணியென்பார்; வேறிடத்தில் அணியன்றோ நாணுடைமை என்பார்; பிறிதோரிடத்தில் கண்ணிற்கணிகலம் கண்ணோட்டம் எனப்பேசுவார். எனவே அவர்கூறும் அணிகலங்களெல்லாம் தேடற்கரியன, ஈட்டற்கரியன.

வள்ளுவர் ஓர் சிறந்த பொருளியல் அறிஞர். அரசனுக்குப் பொருளீட்டும் நெறிகளை மாத்திரம் வள்ளுவர் குறித்தாரில்லை குறளில். அறநெறியில் தொகுத்த ஒண்பொருளை மறநெறியில் போக்கி அவமாக்குதல் வேண்டற்பாற்றன்று என்பதையும் அவர் குறளில் ஓரோவழி சுட்டிக் காட்டுகின்றார்: குடிதழீஇக் கோலோச்சும் மன்னன் தன்னடிதழீஇ வாழும் குடிகட்குச் சில தடை விதிகளை விதித்தலும் அரசியல் மரபு, அவன் வண்டிற்றுறக்கும் கொண்டிமகளிரின் நேயம் துன்பக்கடலுள் மக்களை ஆழ்த்தும் எனத் தடை உத்தரவு பிறப்பித்தலும் உண்டு.* கள்ளுண்டார் நஞ்சுண்டார்: விளிந்தாரின் வேறல்லர் என்றதனால் குடியைக் கெடுக்கும் குடியை நிறுத்த ஒரு கட்டளையை அரசன் அமைத்தலுங் கூடும்.† கைவாராப்பொருளைப் பெரிதும் நச்சித் தன்கைப் பொருளை இழக்கும் சூதாட்டத்தினைப் போக்க அரசன் ஒரு திட்டத்தை ஏற்படுத்தலும் இயல்பு.‡ வள்ளுவர் இம்மூன்றையும்

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

என்று கூறி இவை தள்ளற்பாலன என அறிவுறுத்தல் காண்க.

வள்ளுவரின் குறட்பாக்களில் ஆண்மைக் குறட்பாக்கள் பல. பேராண்மை வேளாண்மை, குடியாண்மை, மடியாண்மை. தாளாண்மை, வாளாண்மை, ஊராண்மை, நல்லாண்மை, இல்லாண்மை, வினையாண்மை என்பன அவற்றுள் பல. இக்கட்டுரையில் பேராண்மையைப் பற்றிய வள்ளுவரின் நுண்கருத்தை முன்னர்க் கூறினோம், இனி அவர் கூறும் மற்றொரு பேராண்மையைக் கூறுவோம். வள்ளுவர் போர்க்களத்திலும் அறநெறியையே கோடல் வேண்டுமென்று வலியுறுத்துகிறார். ஒருவன்போரில் காட்ட இருப்பது ஆண்மை,

* Brothel's Act † Prohibition Act
‡ Act against gambling

வீரம், அஞ்சாநெஞ்சம். இங்ஙனம் அஞ்சா நெஞ்சத்துடன் போர்க்களத்தில் எதிர்நின்று போரிடும் பகைவனுக்கும் ஓரிடர் உற்றக் கால்,

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த இடத்து**

என்றாற் போலும் இல்லாது காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுதல். வேண்டும் என்றாற்போலுமில்லாது அமர்க்களத்திலும் மாற்றார்க்குக் கருணைகாட்டுதல் வேண்டுமென்கிறார். போர்க் கருவியற்று நிலைகலங்கி மருளுற்று தசக்கிரீவன் நின்ற ஞான்று தசரதனின் கரிய செம்மலாம் இராமன் 'இன்றுபோய் நாளை நின்தானையோடுவா' என்று செருக்களத்தில் அருணெறி காட்டியது போல் வென்ற வீரன் தோற்ற வீரனுக்குக் கருணை வழி காட்டுதல் வேண்டுமென்பதைக் குறள்

**பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு**

என்று வலியுறுத்துவதைக் காண்க. இதனைக் கூறும் வள்ளுவரது தமிழ்ப்பண்பாட்டினைப் போற்றுமின்; ஏற்றுமின்.

**இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யக்கால்**
**என்ன பயத்ததோ சால்பு**

என்ற குறட் கருத்தையும் இதனோடு வைத்துணர்க.

எனவே வள்ளுவரது நூலாகிய திருக்குறள் ஒரு ஒழுக்கக் களஞ்சியம்.§ அவர் உலகிற்கு ஒழுக்கத்தைப் பல துறைகளிலும் போதிக்க வந்த நவையறு காட்சியர் என்பதை உணர்மின். வள்ளுவரது ஒழுக்க நீதிகள் இயேசுநாதரின் மலைச் சொற்பொழிவையும்$ மோசஸின் பத்துக் கற்பனைகள் அல்லது கட்டளைகளையும்|| நிகர்த்தன. ஆனால் வள்ளுவரது நீதிபோதனைகள் கட்டளைகள் அல்ல; ஏவல்களல்ல; வியங்கோள்களாகவே மிளிர்தல் காண்க. அவரது நீதிகளைக் கற்க; ஒழுகுக; நிற்க. எல்லாம் வல்ல இறைவன் திருவருட்டுணை நிலவுக உலகமெல்லாம்.

---

§ Encyclopaedia of Morals
$ Sermon on the Mount || The TenCommandments of Moses

# திருவள்ளுவர் :: பெருந்தகையாளர்

**அன்பு :**

மலர்தலை உலகத்து மக்கள் ஆறறிவுடைய உயிர்; ஐயறிவுயிரினம் பிறந்து, தின்று, நின்று, மாய்ந்து ஒழிகின்றது. ஆறறிவுயிரினம் தோன்றி உண்டு, உடுத்து, உணர்ந்து, வாழ்ந்து நாகரீகத்தையும் பண்பாட்டையும் வளர்த்து வானளாவ ஓங்குகின்றது. யாவற்றுக்கும் மேலாய், மூலமாய், என்றும் எங்கும் இறையாய்த் தங்கி, எண் உரை உடல் கடந்து இலங்குங் கடவுட் பொருளை இலக்காய்க் கொண்டு வாழத்தூண்டும் இயல்பான ஆர்வவுணர்வே இம் மேன்மைக்குக் காரணம். அக் காரணத்துக்கு உயிராய் ஊக்கமாய் உறு துணையாய் நிற்பன அன்பு, இரக்கம், வாய்மை, நடுநிலைமை, பொறுமை, தாளாண்மை, மானம் முதலிய பண்புகள். இவற்றை உடைமையாகக் கொண்ட பண்புடைய சான்றவரால் நிலை பெறுவது உலகம்;

> **சான்றவர் சான்ருண்மை குன்றின், இருநிலந்தான்**
> **தாங்காது, மன்னோ, பொறை.**

இத்தகு பண்புகளைத் தமக்குத் தகுதியாகக் கொண்ட ஆடவரை ஆண்டகையாளர் என்பர். உலகம் போற்றும் செந்தமிழ் அருமறையாந் திருக்குறளை யருளிய திருவள்ளுவர் ஆண்டகையாளருள் எல்லாம் மாண்டகை மணியெனப் போற்றுதற்குரிய பெருந்தகையாளர்.

அன்பே வாழ்வுக்கு வேண்டிய முதன்மையான விதியென்பது உலகுணர்ந்தது. மக்களுயிர் பெறுதற்கு அரியது; அவ்வுயிர் நம்முடம்போடு தொடர்பு கொண்டு நிற்குமளவும் நாம் உலகில் உயிர்வாழ்கின்ருேம். அங்ஙனம் உயிரானது உடம்போடு தொடர்புறுவதற்குக் காரணம் மக்கள் அன்புடைமையைத் தம் வழக்கமாகக் கொள்ள வேண்டும் என்பதே, என அறிந்தோர் உணர்த்துதலை,

> **அன்போ டியைந்த வழக்கென்ப, ஆருயிர்க்**
> **கென்போ டியைந்த தொடர்பு**

எனக் கூறித், திருவள்ளுவர் திறவோர் காட்சியில் தெளிந்து காட்டுந் திறம் வியத்தற் குரியது. மாண்பு மிகு பண்பாகிய இவ்வன்பு பிறந்து படிப்படியாக வளர்ந்து பயன்படுதற்குரிய

சீரிய முறையில் உலக வாழ்வு இயற்கையாக அமைந்துள்ளது. அம் முறைப்பட்ட நல்ல நெறியை ஆசிரியர் மிகத் தெளிவாய் விளக்குகிறார்.

## வாழ்க்கைத் துணை:

ஒவ்வொரு ஆணும் தன்னைத் தலைமையாக வைத்துத் தக்கதொரு துணையைப் பெற்று இல்வாழ்க்கை நடத்துதலே அந் நெறியின் அடிநிலை. ஆணுக்குப் பெண் துணையாதல் இயற்கை விதி. ஆளும் ஆண், தலைவனும், பெட்புடைய பெண், தலைவியும் ஆகின்றனர். இவர்தம் உறவு தனி அன்பாகிய காதலால் கனிவுறுகின்றது.

> **உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன**
> **மடந்தையொ டெம்மிடை நட்பு.**

தலைவற்குத் தலைவி உயிராகின்றாள்; தலைவிக்குத் தலைவன் உயிராகின்றான். தலைவன் தலைவியிடம் ஐம்புல நுகர்ச்சி பெறுகின்றான்; தலைவி தலைவனிடம் ஐம்புல நிறைவு காண்கின்றாள். இருவரும் ஒருவர் ஒருவரை உள்ளுதலால் உள்ளக் களிப்பு மிகுதலும், காணுதலால் அக்களிப்பு நிறைதலும் பெறுகின்றனர். தன்னைப் புறக்கணித்துத் தலைவன் தான் விரும்பியபடியே நடப்பினும் அவனைக் காணாது அமையலாக் கண்ணளாய்க் கண்ட விடத்து, எழுதுங்கால் கோல் காணாக் கண்ணேபோல், கொண்கன் குறை காணாப் பெருந்தகைமை யுடையாள் தலைவி. தன்மனம் மொழி மெய்களால் தலைவியைப் பேணுதலே தன் தகுதி எனக்கொண்டவன் தலைவன். தலைவன் தலைவியராய் ஒருவரை யொருவர் கண்டு, உள்ளத்தில் வரைந்து கொண்ட அன்றுதொட்டு எஞ்ஞான்றும் பிரிவு அறியாத தமிழ்க் கணவன் மனைவியரையே திருவள்ளுவர் உருவாக்குகின்றார். முதுகுரவர் கற்பித்த வழியே சென்று நிற்பவளாய பெண்ணினும் பெருந் தகுதியுடைய பொன்னோ மணியோ உண்டோ வெனும் ஐயமற்றவன் கணவன். அவனது அருமதிப்புக்குத் தக்கவளாய்த் தன்னைக் காத்துத் தற்கொண்டானை, நற்றாயெனப் பேணியும், குலமகட்கு அழகு தன் கொண்கனைத் தொழுதல் எனக்கொண்டு, தன் பெண்டகைமையுடன் அவன் ஆண்டகைமையைப் போற்றியும், அயராது இல்வாழ்க்கை நடத்தும் பெற்றியளே வாழ்க்கைத் துணை. அம்மடக் கொடி நல்லாள் அல்லளாயின், இல்வாழ்க்கை, கல்வி, அறிவு, பெருமை, அழகு,

நோயின்மை, நெல், பொன், மணி யெல்லாம் இருந்தும் இல்(லாத) வாழ்க்கையே. அப்பொல்லாத இல்லாளை அஞ்சுங் கணவன் நல்லவர்க்கு நல்லது செய்தற்கும் அஞ்சுவான் என் கின்றார் திருவள்ளுவர். மனைமாட்சி உடையாளாகிய தலைவி யைத் துணைகொண்டு தலைவன்,

> **அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்**
> **பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா;- பிறன்தாரம்**
> **நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்**
> **றச்சத்தோ டிந்நாற் பொருள்**

என்பதை நன்குணர்ந்து பிறன்மனை நோக்காத பேராண்மை யுடையனாய் நிறை நின்று ஒழுகி மகிழ்வான்.

**மக்கட்பேறு :**

வாழ்க்கைத் துணையின் குணமுஞ் செயலும் மாட்சி யுறுவதால் இல்வாழ்க்கை உயர்ச்சியுறும்; நன்மக்களைப் பெறு வதால் அது அழகு பெறும்;

> **பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்**
> **றென்னுடைய ரேனும் உடையரோ-இன்னடிசில்**
> **புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்**
> **மக்களையிங் கில்லா தவர்.**

அம்மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பந் தரும்; அவரது மழலை மொழி கேட்டல் குழலினும் யாழினும் செவிக்கு இன்பந்தரும்.

> **குறு குறு நடந்து சிறுகை நீட்டி**
> **நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்து**
> **இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்**
> **மயக்குறு மக்களை யில்லோர்க்குப்**
> **பயக்குறை யில்லைத்தாம் வாழு நாளே**

என்று பாண்டியன்அறிவுடைநம்பி இயம்பிய பொருண் மொழியை மக்கட் பண்பும் தந்தை மாண்பும் உடைய இவ் வாண்டகையாளர் போன்றாரே உணர இயலும். ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம் மக்கட் பேற்றிற் பெறும் பேறில்லை என்று கூறினால் இன்று குடும்பத்திட்டம் என்று கூறுபவருள் வெள்ளை நகைபுரிந்து உள்நடுங்குவாருளர். இத்தனை ஆண்டு களில் மக்கட்டொகை இத்தனை கோடியாயிற்று; இத்தனை கோடியாம் எனக் கணக்குப் பார்க்கிறார்களே யொழிய, உழைப்பின் வாரா உறுதிகளுளவோ எனத் திண்மையொடும்,

கண்ட உண்மையொடும் அமர்ந்து ஆய்கின்றிலர். அன்று உலைவின்றி உழைத்துக் குளந்தொட்டு, வாய்க்கால் வெட்டி, நெல்வயலொடு பல்வகைப் பயிர் வகுத்து வைத்துச் சென்ற நம் முன்னோர், தற்காலத்தில் நாம் பெற்றுள்ள புதுமையான கருவிகளையும், நீராற்றல், மின்னாற்றல், அணுவாற்றல் போன்ற வற்றையுங் கண்டிருந்தாரெனின் சகாராப் பாலைவனத்தையும் விளைவுறுத கழனியாகச் செய்திருப்பாரே!

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்; மற்றது**
**தள்ளினுந் தள்ளாமை நீர்த்து**

எனவும்,

**தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்**

எனவும் ஆண்டகையாளர் உரைப்பர், செய்வர்.

மக்கள் புகழொடு பிறத்தற்கும், நற்பெயரடைய வளர்தற்கும், அறிந்தா ரவையில் முந்தி யிருத்தற்கும் ஆவனவற்றை யெல்லாம், தம்மினுந் தம் மக்கள் மேலான அறிவுடையராதல் இம்மா நிலத்து மக்கட்கெல்லாம் நன்மை யாதலை உன்னிச் செய்யும் முறைமையே தங்கடமை யெனப் பெற்றோர் கொள்வர். பிள்ளைகள், அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை உணர்ந்தவராய், யாவர்பாலும் அன்பும் பணிவும் தயையும் உடையவராய்,

**எவ்வ துறைவ துலகம் உலகத்தோ**
**டவ்வ துறைவ தறிவு**

என வாழ்வர். பொறுத்துப் பொறையுயிர்த்து அருமையாய்ப் பாலூட்டிச் சீராட்டி, ஊணும் உறக்கமுந் துறந்து, தங் கண்ணிற் கருவிழியெனப் புறந்தந்து ஆளாக்கிய தாய்மாரது உயிர்வாங்கும் நோய் காணினும், மைந்தர், "அதைத்தீர்க்கும் வகை அறியோம்; ஆபத்துக்குப் பாவமில்லை" எனச் சோர்ந்து போலி அறத்தைச் சார்பாகக் கொள்ளாது, இன்றியமையாச் சிறப்பின வாயினும் தமிழ்ச் சான்றோர் பழிக்கும் வினைகளைத் தள்ளிவிடுவார் அறிவறிந்த மக்கள். இத்தகைய நன்மக்களைப் பெறுதற்குப் பெற்றோர் செய்த தவம் என்னோ என வியந் துலகம் பாராட்டக் கேட்டுத் தாய் தந்தையர் பேருவகை பெறத் தங்குடியை நிறுவுவார் பண்புடை மக்கள்.

**மக்கள் மாண்பு :**

இல்வாழ்வார் குடித்தனத்தை நிறுவுகின்றார். நல்லாண்மையாளர் விழுப்பந்தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் போற்றிக் குடியை உயர்குலமாக்குவர். அக்குலத்தவர் உள்ளொன்று வைத்துப் புறத்து மற்றொன்று உரையார்; சொல்லொன்றுகூறிச் செயலொன்று புரியாத செப்பமுடையார்; பலகோடி பெறினும் பழியெனின் நாணத்தால் உளங் குன்றி ஒடுங்குந் தன்மானத்தொடு வாழும் பேராண்மையுடையார்; தம்நிலையில் தாழ்வுறின் தலையி னிழிந்த மயிரெனத் தம்மை மதித்துத், தங்குடிப்பண்பைக் கைவிடாது, அவ்விழிநிலை நீக்கும் அருமுயற்சியில் உயிரும் இழக்கத் துணிந்து நிற்பர்.

> **குடிசெய்வல், என்னும் ஒருவற்குத் தெய்வம்**
> **மடிதற்றுத் தான்முந் துறும்.**

குடிப்பிறந்தார் இன்பம் விழையார்; ஆள்வினை யின்மை பழியாதலின் வினையையே விழைவார்; வினைக்கு உடைமை ஊக்கம்; நில்லாது நீங்கும் பொருளையும் ஆக்குவதன்றோ ஊக்கம்? ஆள்வினையுடையார், இடும்பைக்கு உடம்பு இலக்கமாம் எனக் கொள்வார்; துன்பம் இயல்பு மட்டுமன்று, இன்பமும் ஆமெனக் கொண்டு நகை புரிவார்; அத்தகையார்மாட்டு வந்துற்ற இடுக்கண் இடும்பைப்பட்டு ஒழியா தென்செயும்? ஆண்டகையாளர்,

> **அச்சொடு தாக்கிப் பாருற் றியங்கிய**
> **பண்டச் சாகாட் டாழ்ச்சி,**

மருங்கொற்றி மூக்கூன்றித் தாள்தவழ்ந்து போக்கி,

> **வரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்**
> **பெருமிதப் பகடு**

போன்றவர். சகடத்தில் ஏற்றப்பட்டுள்ள பாரம், பல நெல் மூட்டைகளோ, வன்மரத் தடிகளோ, பெருங்கற் றூண்களோ, எவ்வகை, எவ்வளவு என்பதுபற்றி எருது எண்ணுதலில்லை. சேரவேண்டிய துறைக்குப் படருஞ் சாலை பெருமணல் நெறியோ, பாறை செறி சுரமோ, அளறுபடு வழியோ என்பது பற்றியுங் காளை கருதலில்லை; அடையவேண்டிய இடம் எத்துணைத் தொலைவிலுள்ளது என்பதுபற்றியும் நினைத்தலில்லை. சகடத்தைப் பாரத்தோடு துறை சேர்த்தல் தன் பொறுப்பு

என்பதை உணர்ந்ததுபோலப் பெருமிதத்தோடு பகடு நடக்கின்றது. சகடக்கால் மணலிற் புதைந்தாலும், பாறையி லிடித்தாலும் அளற்றி லாழ்ந்தாலும், ஒதுங்கி யிழுத்தும், நிலத்தில் மூக்கூன்றி வாங்கியும், முழந்தாளால் தவழ்ந்து போக்கியும் பிடு நடையொடு இடுக்கண் கடந்து காளை வினைமுடிக்கின்றது. அங்ஙனமே, ஆண்டகையாளர் தாம் மேற்கொண்ட நல்வினையைத் தாழாது உஞற்றுதலே ஆண்மை யெனும் பூட்கையோடு மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண்டுஞ்சாது, செவ்வி அருமையும் எண்ணாது கருமமே கண்ணாகி, எண்ணிய எண்ணியாங்கு எய்துந் திண்மையுடையா ராவர்.

**குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்**
**மாசூர மாய்ந்து கெடும்.**

இடனில் பருவத்தும் வறியார் சென்றக்கால் அகனமர்ந்து முக மலர்தலும், ஈத லிசைபட வாழ்தல் அதுவல்லது உயிர்க்கு ஊதியமில்லையென நடத்தலும், இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதென ஓர்ந்து ஈரமளைந்தனவும் படிறு இல்லாதனவுமாய செம்பொருள் கண்டார் சொற்களையே பயிலுதலும், எல்லாரும் எள்ளும் இல்லாதாரையும் இகழாதிருத்தலுமாகிய ஒழுக்கங்களால் குன்றின்மேலிட்ட விளக்கென விளங்கும் குடிப்பிறந்தாரது நிலைமையும், மனம் மடிந்து ஊக்கங் குன்றுதலால் ஒளி குன்றி அழிந்தொழியும். தனது பிறப்பு உயர்பிறப் பாதற்கு ஏதுவாய நல்ல குடியானது, கேண்மையுடையாரால் இடித்துரைக்கப்படுதலையும், பிறரால் இகழ்ந்துரைக்கப் பெறுதலையும், பகைமை யுடையாரிடத்தும் அடிமைப்படுதலையும் தனக்குமுன் பாழ்படுதலையும் மடியுடையான் காண்பான். இந்நிலை நிகழாதவாறு மடியாண்மை மாற்றி, வினையாண்மை போற்றி, அடிமரஞ் செல்லரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் மதலையாய்த் தாங்குமாறுபோல ஆண்டகையாளர் தங் கேளிரது துன்பந் துடைத்து ஊன்றுந் தூணாகித் தாங்குவர்.

## பொருள் :

செல்வம் அறமும் பொருளும் இன்பமும் ஆற்றும். அன்பு நற்பருவம் அடைந்து அருளைத் தோற்றுவிக்கும். அருள் பொருட் செல்வத்தால் வளர்ச்சிபெறும். வேறு எவ்வகையானும் சிறப்புக்குத் தகுதியற்றவர்க்கும் பொருள் தகுதியளிப்பதாகும்.

**இல்லாரை யெல்லாரும் எள்ளுவர்; செல்வரை**
**யெல்லாரும் செய்வர் சிறப்பு;**
**அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்**
**பிறன்போல நோக்கப் படும்**

எனத் திருவள்ளுவர் முன் மொழிந்த கருத்தை அவர்க்கு ஏறக் குறைய ஆயிரம் ஆண்டுகட்குப் பின், ஔவையார்

**கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்**
**எல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வர்;—இல்லானை**
**இல்லாளும் வேண்டாள்;மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்**
**செல்லா தவன்வாயிற் சொல்**

என வழிமொழிந்து தெளிவிக்கும் திறங் காண்க.

எனவே, ஆண்டகையாளர், தாமுந் தம்மவரும் விளக்க முறுதற்குப் பொருளைத் திறனறிந்து தீதின்றி ஈட்டுவார். படிறு பல இயற்றி மற்றவரை ஏமாற்றிச் செல்வத்தைச் சேர்த்துத் தமக்குந் தம்மவர்க்கும் உறுதி நாடுதல், பசிய மட்கலத்தில் பெய்த நீர் கலத்தையுங் கரைத்துச் சிதைத்துத் தானுஞ் சிந்தியது போல, தம்மொடு தங்கேளிரையும் கெடுத்தலாகும். நடுநிலைமை தவறிப் பொல்லாத வழிவகைகளைச் சூழ்ந்து நல்லார் பழிக்கும் வினையைச் செய்து தமக்கு உரியதாகாப் பொருளை ஒருவர் சேர்த்தால், அதனால் நல்ல பலனடைதல் யாங்ஙனம்?

**அஃகாமை செல்வத்திற் கியாதெனின், வெஃகாமை**
**வேண்டும் பிறன்கைப் பொருள்.**

பிறர்க்குரிமையாம் பொருளை விழைதல் எவ்வகையினும் முறையாகாது என்பதை அறிந்த அறமுடையாரைத் திருமகள் தானே முறைப்படி சென்றடைவாள்; ஆதலின் அவர் செல்வம் பெருகுமேயன்றி அருகாது.

**பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்**
**கழிநல் குரவே தலை.**

என்னெனின், மன்னு வுலகத்து நிலைபெறாத சிற்றின்பத்தின் பொருட்டு இறையொடு என்றுந் துய்க்கும் மறுமைப் பேரின்பத்தை மெய்யறிவுடையார் இழக்கத் துணிவரோ?

**சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டு பவர்.**

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் இளைஞர், குடித்தனம் புரிதற்குத் தம் முன்னோரும் பெற்றோரும் சேர்த்த பொருளைச்

சார்பாகக் கொள்ளாது தாமே தேடிக்கொள்வர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்தொட்டே பண்புடையாராய தமிழ் மக்கள் அப் பூட்கையைத் தம் மரபாகக் கொண்டிருந்தனர் என்பதற்கு, வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு என்ற அகப்பொருட்டுறையே பகலவனெனச் சான்றுகும். தாந் தேடுதலே தம்முணவுக்கு நன்மணமுஞ் சுவையுமாம் எனக் கருதினர் தமிழ் மைந்தர்

> **தெண்ணீர் அடுபுற்கை யாயினுந் தாள்தந்த**
> **துண்ணலி னூங்கினிய தில்.**

## உழைப்பு :

உள்ளத்தில் ஊக்கமுடைமையே பொருளுடைமைக்குக் காரணம். ஊக்கமுடையார் என்றும் மேம்படுதற்கே மனங் கொள்வர்; தம்முயற்சி, தெய்வச் செயலாக மெய்வருத்தக் கூலி தராது போயினும், தளராது உழைக்கும் விடாத ஊக்கமுடை யாரை அடைதற்கு ஆக்கமானது வழிகேட்டுப் போய்ச் சேரும். 'பொருளிலமே, என் செய்வேம்;' எனச் சோர்ந்து மடிந் திருப்பாரை நோக்கி இகழ்ந்து, உழவாற் பண்படுத்தற் கியையப் பயனளிக்கும் நல்லாளாய நிலம் நகையாடும். அடிப்படைத் தேவைகளாம் உணவுக்கும் உடைக்கும் வேண்டிய நெல்லும், எள்ளும், கரும்பும், பஞ்சும், பிறவும் போன்றவற்றை உழவே விளைவித்தளிப்பது. எங்கெங்கோ நடந்த இரண்டாம் உலகப் பெரும் போர்க்கு உறுதுணையாக இந்தியாவிலும் உணவுப் பொருட்களைப் பெருக்கி யுதவியதால் உணர்ந்த உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வெள்ளைக்குடி நாகனார் தெளிவாய் உணர்ந்து,

> **பகடுபுறந் தருநற் பார மோம்பிக்**
> **குடிபுறந் தருகுவை யாயின்நின்**
> **அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே**

எனக் கிள்ளிவளவனுக்கு அறிவுறுத்தினார். திருவள்ளுவரும்

> **பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்**
> **அலகுடை நீழ லவர்**

என மொழிந்ததோடு அமையாது, உழந்தும் உழவே தலை யெனவும், உழவர் உலகத்தார்க்கு ஆணி யெனவும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் எனவும் இயம்பி உழவின் உயர்வை

உணர்த்துகிறார். இத்தகைப் பயிர்த்தொழில்களாலும் பிறவகை கைத்தொழில்களாலும் செயப்படு பொருள்களை இல்லார்க்கு விலைக்கெனக் கொண்டு கொடுத்ததால் வளர்ந்த தொழில் வாணிகம். பிறர் பொருளையுந் தம் பொருள்போற் பேணிக் கொடுப்பதூஉங் குறைகொடாது, கொள்வதூஉம் மிகை கொளாது, நெடுநுகத்துப் பகலாணி போல வாணிகத்தில் நின்று, திரைகடலோடியும் பொருளைத் தேடலாம்,

## விருந்து:

தேடிய பொருளை உறவினர்க் கெல்லாங் கரவாது அளித்தலை, மிக்க இரையைக் கண்டதுந் தன்னினத்தைக் கரைந் தழைத்துக் கூடி யுண்ணுங் காக்கையிடம் தமிழ்மறையவர் கண்டு உணர்த்துகிறார். இவ்வுயரிய பண்பு நோக்கியும்—கா! கா! எனக் கரைதல் கேட்டும், 'காக்கை' (காத்தல்) எனப் பெயரிட்டு அதற்குச் சோறிடும் வழக்கத்தைப் பண்டே வண்டமிழர் கைக் கொண்டனரெனின், அவரது அருளாண்மையும் அறிவாண்மை யும் வியத்தற்குரியதே. — காக்கை போன்றார்க்கே ஆக்கம் உள்ளதாம். செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்; உற்றா ரெல்லாம் நெய்யை மொய்த்த எறும்பெனத் தம்மைச் சுற்றி யிருக்கும்படி கொடுத்து வாழ்தலே செல்வம் பெற்றார் பெறத் தகும் பேறு. வானமாரிக் குளங்கள் கார் காலத்தில் நிரம்பு வதைப் பார்க்கிறோம். குளப் பரப்புக்கு அமைந்த கரையினது அளவுக்கும் உறுதிக்கும் ஏற்பவே நீர் தங்கும்; கரையில்லாத் குளவளா நீர் நிரம்புதலின்று, அங்ஙனமே, கேண்மையொடு கேளிரிடம் அளவளாவுதல் இல்லாதாரிடம் செல்வந் தங்குத லின்று. திருவெல்லாந் தொலைந்து வறுமைப்பட்ட காலத்தும் தம்மொடு அவர்க்குண்டாகிய பழைமையாம் அன்பையும் அளியையும் பாராட்டுந் தன்மை உறவினரிடத்து உள்ளதாகும்.

> பற்றும் வெறுக்கை ஒழிந்துழியும், பழமை யெடுத்துப் பாராட்டும்
> சுற்றம்; அதனைப் பெருங்கொடையால், தூய மொழியால் தழுவலுறின்,
> அற்றம் அவனுக் கொருகாலும் அணுகா தாக்க மிகப் பெருகும்;
> முற்ற நினைக்கும் பகைவர்தொழில் முற்றாது.

ஆண்மைக்குரிய பண்புகளோடு பிற தகைமைகளையும் ஆளும் உரனும் உயர்ச்சியும் உடையவராலன்றி ஏனையோரால்

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

எனத் துணிந்து கூறுதல் கூடுமோ? பழி நாணித் தாளாண்மை யாற்றி ஈட்டிய பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு; எனவே, சுரரும் அசுரருந் திருப்பாற்கடலை வாலியின் துணையாற் கடைந்து பெற்ற அமுது கிடைத்தாலும், கொடுத்து உண்டலாகிய விருந்தயர்தலையும் வேளாண்மை பேணுதலையும் தவறுதல் தகைமைக்கு இழுக்கே. இவ் வேளாண்மையானது தாளாண்மையாலேயே விளக்கம் பெறும். அஞ்சாமை, தறுகண்மை, வீரம் என்பன என்ன வெனக் கேட்கும் பேடி, வாட்பயிற்சியில் தேறினும் போர்க்களங் காணின் வாய்வாள் கையினின்று நழுவ, அடிமுதல் முடிவரை நடுங்கி நிலைகெடுதல்போல், மடியின்மை, அசைவின்மை, அயர் வின்மைகளால் அமைந்த தாளாண்மை இல்லாதாரது வேளாண்மை—ஊணோ, உடையோ, உறையுளோ பிறவோ வேட்டு வாருவார் வேட்கையைத் தீர்த்துக் களித்தலாகிய பண்பு —நிலைகெடும். ஆயும், பாரியும், நள்ளியும், காரியும், பேகனும், ஓரியும், மலையனும், குமணனும் போன்ற வேளாளரை இன்றுங் கண்டு செய்ந்நன்றி யறிவோடு போற்றின் வேளாண்மையைப் போற்றியவராவோம்.

## நன்றியறிவு:

**ஆன்மடி யறுத்த அறனி லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென**
**அறம்பா டிற்று,**

என்பதைக் கருத்திற் கொண்டு, திருவள்ளுவர்

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

என்றெடுத்துக் கூறுங் கருத்துத் தேர்ந்து உணர்தற் குரியது. பல வேறிடங்களில் பற்பல வேறு வகையாக மக்கள் ஒருவருக் கொருவர் நன்றி செய்கின்றனர். அவ்வவ்விடத்துங் காலத்தும், 'நன்றி', 'மிக நன்றி' என்று ஆங்கிலத்தில் உரைத்துவிடுமளவே தற்காலத்துச் செய்ந்நன்றி யறிவு நின்று நிலவுகின்றது.

தாம் முன் யாதொன்றுஞ் செய்யாதிருக்க ஒருவர் செய்த உதவி யாகிய நன்றிக்கு இவ்வுலகையும் அவ்வுலகையுங் கைம்மாருகக் கொடுப்பினும் நிகராதல் அரிதாம்; தாம் யாதேனும் இடருறுங் காலத்தின்கண் செய்த நன்றி நிலவுலகினும் மாட்சியாற் பெரிதாம்; இவர்க்கு இது செய்தால் தமக்கு மேல்வரும் பயன் இன்னது எனச் சீர்தூக்காராய்ச் செய்ததாகிய நன்றி கடலினும் அகலத்தாலும் ஆழத் தாலும் பெரிதாம். நன்மை செய்யப் பட்டார், அன்புடைமை நாணுடைமை, ஒப்புரவுடைமை, கண்ணோட்டமுடைமை, வாய்மையுடைமை யென்ற தூண் களால் தாங்கப்பெற்ற மாளிகையாகிய சான்ருண்மை உடைய ராயின், அந்நன்றி அவரது குணநிறைவின் அளவினதாகி விடும். தினையனைத்து நன்றி செய்யினும், பனையளவாகவும், மலையளவாகவும், வான்சிறிதென்னும் அளவாக்வும் மதிப்பர் சான்ருேர்.

> **நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்**
> **கென்றும் உறுதியே சூழ்க; — எறிதிரை**
> **சென்றுலாஞ் சேர்ப்ப! அதுபோல நீர்போய்**
> **ஒன்றிரண்டாம் வாணிகம் இல்.**

நாழியளவுப் பண்டங் கொடுத்தவர்க்குத் திரும்ப நாழியளவு கொடுத்துவிட வேண்டுமென் றெண்ணுது, எஞ்ஞான்றும் நன்றி செய்தற்கே எண்ணிஞல் ஒருமடங்குக் கிருமடங்கு பயன் கிடைக்கும். எவ்வொருமடங்குக்கு? கண்கண்ட நாழியளவுக்கா? இல்லை; மனத்தில் எண்கொண்ட சூழ்வின்அளவுக்கு. எனவே நன்றல்லாததை அன்றே மறந்து, கொன்றன்ன இன்ஞு செய் தாராயினும், அவர் தமக்குச்செய்த நன்றி ஒன்றெனினும் அதை எண்ணி யெண்ணி, நன்றல்லாததைச் செய்தவுடனேயே மறத் தல் நன்று. உள்ளத்திலும், சொல்லிலுஞ் செயலிலும் மாசற்ற பெரியாரது உறவை மறத்தலாகாததுபோல், துயருற்ற விடத்துப் பற்றுக்கோடாய் நின்றுதவியவரது நட்பைத் துறத் தலாகாது.

## வேளாண்மை :

> **ஈத லிசைபட வாழ்தல்; அதுவல்ல**
> **தூதியம் இல்லை உயிர்க்கு**

என்பது பலகலைகளிலும் வல்லுநராகிய திருவள்ளுவர் தெளிந்து உணர்த்துங் கருத்து. வறியார்க்கு ஊண் உடை உறையுள் உதவும் வகையில் யாதேனும் ஈவதே ஈகையாம்.

வறுமைபோல உறுதுயர் தருவது பிறிதொன்றில்லை.

**மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை**
**தானந் தவம்முயற்சி தாளாண்மை — தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்**
**பசிவந்திடப் பறந்து போம்.**

இத்துணைக் கொடிய உணவின்மையோடு உடையின்மையும் உறையுளின்மையும் உடம்பட்டால் அம்மம்ம! துவ்வாமையால் இம்மையையும், ஈயாமையால் மறுமையையும் இழக்க நேராதோ? யாரும் பேணுதற்குரிய ஆவிற்கு எளிதிற் கிடைக்கும் நீர் வேண்டுமென இரக்க நேர்ந்தாலும் நாவிற்கு மிக நாணமா கின்றதே! யாவுங் கெடவரும் இந்நல்குரவைப் போக்குதற்கு வேறு வழியின்றி இரக்கப் புகுதல் மிகவருந்தி வெறுத்து இழித் துரைக்கத் தக்கதே. உழைத்துப் பிழைப்பதற்கு எத்தனையோ வழி வகைகளுள்ள இவ்வுலகில் இரந்தும் நடைப்பிணம்போல் உயிர் ஒடுங்கிநின்று வாழ்தல் ஒரு வழியாக அமைய வேண்டின் காரறியாப் பாலைவனத்தில் நீர் தேருங் குருவிபோல் பரந்து, ஒரு துளி நீருங் காணாது கெடுக, இவ்விழி நிலைக்கு இடமான இந்த உலகு இங்ஙனம் அமைய இயற்றியான், என ஆண்டகை யாளர் சபிக்க எண்ணுரோ?

**இல்வாழ்வதெல்லாம் வேளாண்மை செய்தற் பொருட்டு;**
**பொருளெல்லாம் வேளாண்மை செய்தற் பொருட்டு;**
**அழிபசி தீர்த்தல் பொருள் வைப்புழி;**
**ஈதல் அல்லது ஊதிய மில்லை;**
**மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று.**

• ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை வைத் திழக்கும் வன்கணவர் என்றெல்லாம் திருவள்ளுவர் கருதுவது போல்பண்டை வண்டமிழ்ப் புலவரும் கருதுதல் காண்க;— இரந்தோர்க்கு ஒன்றீயாமை இழிவு- பெருங்கடுங்கோ; இரப்பார்க்கு ஈயாமை சிறுமை - பாண்டியன் நெடுஞ்செழியன்; இல்லென மறுத்தல் சிறுமை – மதுரைக்குமரனார்; ஈயேன் என்றல் இரத்தலினும் இழிந்தது–கழைதின்யானையார்; ஆற்றல் என்பது அலந்தவர்க்குதவுதல் - நவ்வந்துவனார்; செல்வத்துப் பயனே ஈதல் – நக்கீரனார்; ஈதல் இன்பம் – பரங்கொற்றனார்.

### வேளாண் வாயில் :

இங்ஙனம், ஆய்ந்து தேர்ந்து தெளிந்து 'ஈதல் அறம்' எனத் துணிபு கண்டால் ஏற்பார் வேண்டாமோ? வேளாண்மை

ஆற்றுதற்குச் சிறந்த வழி வேறுஇன்மையாலேயே இரத்தலை 'வேளாண் வாயில்' என்கிறார் நத்தத்தனார்.

**இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்**
**மரப்பாவை சென்றுவந் தற்று**

என வுரைத்து, முன் தாமே செப்பிய சாபத்துக்குத் திருவள்ளுவப் பெருவள்ளலார் விடை கூறி, ஆண்டகைப் பீடு உடையவராகின்றார். இக்குறளாலும்,

**நல்லா றெனினும் கொளல்தீது; மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று,**

என்ற குறளாலும், இவ்வுலகில்; இரக்கம், பொறுமை, இனியவை கூறல் போன்ற மக்கட் பண்புகள் விளங்கி மேலுலகப் பேரின்பங் கிட்டுதற்கு ஈதல் இன்றியமையாதது என அறிகின்றோம்.

'அரசர் வலதுசாரரைப் பார்த்து, "எம் தந்தையால் அருள் பாலிக்கப் பெற்றவரே! வருக! உலகந் தோன்றிய நாள்முதல் உமக்கென்று அமைக்கப்பட்டிருக்கும் அரசகத்தை உரிமையாய்க் கொள்க. ஏனெனின், யாம் பசித்திருக்கையில் உணவளித்தீர்: தாகமாயிருக்கையில் தண்ணீர் தந்தீர்; அன்னியமாய் ஆடையின்றி வந்தேம், உறைவிடமும் உடுக்கையும் உதவினீர்;நோயுற்றிருந்தேம்; வந்து பார்த்தீர்; சிறைப்பட்டிருந்தேம் வந்து கண்டீர்" எனக் கூறுவார். அவர்கள் மறுமொழியாக, "அண்ணலே! தாங்கள் பசித்திருந்ததும், தாகமாயிருந்ததும், நாங்கள் உணவு கொடுத்ததும் தாங்கள் அருந்தியதும் எப்போது? தாங்கள் நொதுமலராய் ஆடையின்றி வந்ததும் நாங்கள் இடமும் ஆடையும் கொடுத்ததும் எப்போது? தாங்கள் நோயுற்றிருந்ததும். சிறைப்பட்டிருந்ததும் நாங்கள் வந்து சந்தித்ததும் எப்போது? எனக் கேட்பார்கள். அதற்கு அரசர் விடையாக, "எம் உடம்பிறப்புப் போன்ற இவருள் மிகவும் ஏழை ஒருவனுக்கு யாதேனும் செய்வது எமக்குச் செய்ததேயாகும் மன்ற," என்று பகர்வார்' எனக் கிறிஸ்து கூறியிருப்பது இங்கே நினைவுகூரத் தக்கது.

ஈயென இரத்தல் இழிந்ததே, ஐயமின்று; ஈயேனென்றல் அதனினும் இழிந்தது, அணுவளவும் ஐயமின்று. 'இல்லை' என்ற சொல்லைக் கேட்டலும்,இரத்தலாகிய இழிதகவுடையார்,

**உண்ணிலா வியதுயரம் பிடித்துந்த, ஆருயிர்நின் றாசல் ஆடக்**
**கண்ணிலான் பெற்றிழந்தான் என**

நின்று வருந்த, கரத்தலாகிய இழிதகவுடை யாரது உயிர் எங்கு மறைந்து, எங்ஙனம் நிலைபெறும் என்று தெரியாமல் திருவள்ளுவர் ஐயங்கொள்வது, எஃகிற் கூரிய மான வுணர்ச்சி யாலேயே. உள்ளம் உவந்து உள்ளது கொடுக்குங் கண் போலுஞ் சிறந்தாரிடத்தும் இரவாமல், வல்லதோர் முயற்சியால் உயிர்பேணல் நன்று எனத் துணிதல் கோடிப் பொருள் பெறும். என்றாலும், எதிர் நோக்கியிருந்து கண்டதும் முக மலர்ந்து ஈயுங்

**கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்**
**றிரப்புமோர் ஏஎர் உடைத்து,**

எனவும்,

**இரத்தலும் ஈதலே போலும், கரத்தல்**
**கனவிலுங் கருதாதார் மாட்டு**

எனவும் காண்பதற்கு நுண் மாண் நுழைபுலம் வேண்டும்! ஈவார் குடிமைப் பண்புடையராயின், இன்மை உரைக்கும் புன்மை நீங்கி,

**நிரயத் தன்னவென் வறன்களைந் தன்றே**
**இரவி னானே ஈத்தோன் எந்தை**
**அன்றை ஞான்றினோ டின்றி னூங்கும்**
**இரப்பச் சிந்தியேன்**

என நன்னாகனார் நல்லியக் கோடனைப் பாடியாங்கு எண்ணி இன்புறும்படி முட்டாச் செல்வம் அளிப்பர்.

## இன்சொல் :

ஈதல் அறத்தின் முடி; மனத்துக்கண் மாசின்மை அடி; இன்சொல் இடை; எனின், சொல்லே உள்ளத்தையும் செயலையுங் காட்டுங் கருவியாதலின்

**அகனமர்ந் தீதலின் நன்றே, முகனமர்ந்**
**தின்சொல னாகப் பெறின்**

என்பர் தெய்வப் புலவர். பொதுவான இன்சொற்களுக்குப் பஞ்சமில்லை. நல்லெண்ணத்தோடு நாவசைத்தால் நல்ல சொற்கள்பிறக்கும். வன்சொற் கூறுதல், அதிகன் ஔவைக்கு ஈந்த

அமிழ்துவிளை தீங்கனி போன்றன தம்மிடம் இருக்க, நஞ்சு விளை காஞ்சிரங்காய் போன்றவற்றைக் கவர்ந்து நுகர்ந்தது போலும் பேதமை யுடைத்து. "செவி சுடச் சொல்", "அழச் சொல்லி" என்ற விடங்களில் திருவள்ளுவர் குறிப்பன வன் சொற்கள் போல் தோன்றினும் இன்சொற்களே.

**இனியவர் என்சொலினும் இன்சொல்லே; இன்னார்**
**கனியும் மொழியுங் கடுவே;- அனல் கொளுந்தும்**
**வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும்; மெய்பொடிப்பச்**
**சிங்கி குளிர்ந்துங் கொலும்.**

புறங்கூறுதல் இன்னாத கூறலின் இழிந்தது. அது தீய வற்றைச் செய்தலினுந் தீமை பயக்கும். ஒருவர் கண்ணெதிரே நின்று இரக்கஞ் சிறிதுமின்றிப் பழித்தானாயினும், அவர் முன்பிலராக மேல்விளையுந் தீமைகளை எண்ணாத சொல்லாகிய புறங்கூற்றைத் தவிர்க்க. எல்லாந் தாங்கும் நிலமும் புறங்கூறு வோரைத் தாங்குத லரிது. பிறரது குற்றத்தைத் தான் காணு மாறு போல நடுநிலைமையுடன் தனது குற்றத்தையும் காணும் ஆற்றலுடையனாயின் புறங்கூற எண்ணான். சொல்லால் உண்டாகும் பலவகை கேடுகட்கும் காரணம் பயனில்லாத சொற்களை வளர்த்தலே. கேண்மை யுடையோர்க்குத் தீமை செய்தலினும் பயனில்லாத சொற்களைப் பலர் முன்னிலையில் பாரித்துப் பேசுதலே தீமை விளைவிப்பதாகும். பெருந்தகை யாளர் பயனில் சொற் பாராட்டுவாரை மிக வெறுப்பர்; அத் தன்மையுடையாரை மக்கள் என்று சொல்லாமல் மக்கட் பதடியர் என மதித்து ஒதுக்கிவிட வேண்டும் என்பார்.

## பொறுமை :

புறங்கூறுதலும் பயனில பாராட்டலும் சொற்கோட்டம்; அழுக்காறு மனக் கோட்டம். பிறர் செல்வங் கண்டு இன்புறுதற்கு ஏலாமல் பொறாமைப்படுபவன் மறுமைக்கு உதவும் அறத்தையும் இம்மைக்கு உதவும் செல்வத்தையும் வேண்டாதான் எனப்படுவான். திருமகள் அழுக்காறுடை யானைத் தன் அக்காளிடம், இதோ உனக்குரியான் எனக் காட்டிவிட்டு அகல்வாள். அவனது செல்வம் அழிந்து தானுந் தன் சுற்றமும் உடுப்பதற்கும் உண்பதற்கும் ஒன்றுமின்றிக் கெட்டு, மறுமைக்கண் அவன், தெறுந்தீ நிரம்பிய நிரயத்தில் ஆழ்வான். பகைவர்மாட்டும் பொறாமைப்படுதலை ஒழித்து

விட்டு, அழுக்காறு இல்லாமையாகிய இயல்பைத் தன் ஒழுக்க நெறியாகக் கொண்டால் அதுபோல் விழுப்பந் தரும் பேறு பிறிதில்லை.

பொறாமை காரணமாக நம்மை இகழ்தலும், பகைமையோடு பலவகையான துன்பங்களும் செய்வா ருளராயின்,

**கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்**
**பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை**

என்பதை உள்ளத்திற்கொண்டு, தீமை தீமையே விளைவித்தல் அறிந்த விழுமியோர், எதிர்மறுப்பாகத் தீவினை செய்யார். வினை நிழல்போல் உடையாரை விட்டு நீங்காதது; அதுபோல் தீமைகள், செய்யப்பட்டாரை அடைவதுபோல் தோன்றினும், செய்தாரை விட்டுப் பிரிதல் இல்லை. ஆதலின், தமக்குக் கேடு வரலாகாது எனக் கருதுபவர் துன்பந் தருமவற்றை எத் துணைச் சிறிதாயினும், தமக்கு வன்மை மிகுந்த காலத்தும் மனம் பொருந்திச் செய்யாமை முதன்மையான அறம்; முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது பெருந்தகையாளரது துணிபு.

பொறை யெனப்படுவது போற்றாரைப் பொறுத்தல். அகழ்வாரை யெல்லாந் தாங்கி நிற்கும் நிலத்தைக் கண்டு, தம்மை இகழ்வாரை யெல்லாம் பொறுக்க வேண்டும் என அறிவுறுத்துவார் ஆன்றோர். பிறர் செய்த பிழைகளைப் பொறுக்காமல் அவரை ஒறுத்தவர் பெறும் இன்பம் சிறு பொழுதே உளதாக, ஒறுக்காது பொறுத்தவர் பெறும் புகழ் உலக வாழ்வு பொன்றும்வரையில் திகழும். பொறுத்தலினும் அவர் செய்த தீதை மறத்தல் நன்று. மறத்தல் அரிதெனின், தம்மனத் திமிரால் மிக்க இன்னா செய்தாரைத் தக்கபடி ஒறுப்பதற்கும் வெற்றி பெறுதற்கும் தெய்வத் தன்மையுடைய திருவள்ளுவர் அருள்நெறி காட்டுகின்றார்; மாணாத வினைகளைச் செய்வார் தாமே நாணமடையும்படி அவர்க்கு இனியவைகளையே செய்து சான்றாண்மையால் வென்று விடுக. நட்புச் செய்ய மாட்டாராய் நயமில செய்யினும், பகைமை கருதி வெறுக்கத் தக்க வினைகளைச் செய்யினும், பாடறிந்து நன்மை செய்யாராதல் இழிந்தது; தீமை செய்யாமையே உயர்ந்தது.

**நண்பு:**

பகைகொளல் மக்கட் பண்பாகாது. மக்கள் ஒருங்கு கூடிப் பழகி நகுதல் புரிந்து வாழும் பண்பினர். இப்பெரும் பண்பைப் பாழ்படுத்தித் துன்பத்தொடு துன்பத்தை வளர்ப்பது ஆதலின் பகையை விளையாட்டாகவும் விரும்ப லாகாது. வாள்போலும் பகைவரை யஞ்சாது, அடுத்திருந்து மாறுதசெய்து கேள்போல் நடிப்பாரது பகை எட்பக வன்னதேனும் அதைப் பொருள் கொடுத்துங் கொண்டு அவர் செருக்கை, வகையறிந்து தற் செய்து தற்காத்தலினுல் மாய்த்து வாழ்தலும், பொதுவாகப் பகையை நட்பாக் கொண்டொழுகலும் பண்புடைப் பெருந் தகையாரது பெற்றியாகும்.

அடுத்துப் பழகுதலே நட்புக்கு இயல்பான முறை. ஆனல் ஒத்த உணர்ச்சி யின்றி எத்தகைப் புணர்ச்சியும் கேண்மையராம் கிழமையைத் தராது. நல்லார் நட்பு வளர்பிறைபோல வரிசை வரிசையாக வளரும்; நுனிதொடங்கி அடிநோக்கிக் கரும்பு தின்பது போன்றும் பலகாலும் நவிலும் நூல்போன்றும் பயிலப் பயிலச் சுவை மிக்கதாம்; எறிந்தவேல் மெய்யதாயிருக்க வால் குழைக்கும் நயமுடைய நாயொடு பழகினுற் போன்றதுமாம். ஒருவரை யொருவர் முகம் நோக்கி உரையாடி நகுதற் பொருட் டன்று, அகநோக்கிப் பழகி, அழச் சொல்லி, மிகுதிக்கண் மேற்சென்று தடுத்தலொடு,

> **உடுக்கை யிழந்தவன் கைபோல் ஆங்கே**
> **இடுக்கண் களைவதாம் நட்பு.**

நட்புக் குரியார் யார்? நல்ல குடிப்பிறந்து தன்கட் பழி நாணும் மானமுடையானை, செவிசுடச் சொல்லித் தகாது தடுக்க வல்லானை அறிந்து, யாதுங் கொடுத்தும் நட்புக் கொளல் வேண்டும்.

> **குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு**
> **இனனும் அறிந்தியாக்க நட்பு.**

கீழ்மக்கள், நட்பில் சிறிது பேணுதல் தவிர்ந்தாலும் பயன் குன்றுங் கமுகுபோல்வர். இடைநிலையார் இடையிடையே பேணுதல் தவிர்ந்தால் பயன் குன்றுந் தெங்கு போல்வர். மேன் மக்கள், நட்டதன்றிப் பின் பேணுத லறியாத பனைமரம்போல் என்றும் பயன்படுவர். அறிவில்லாதவர், உலகத்தோடு

ஒத்தொழுகாதவர், கேடுவரும்போது கைவிடுபவர், இத்தன்மை யாரைக் கையுதறுக.

**உறின் நட் டறின் ஒருஉம் ஒப்பிலார் கேண்மை**
**பெறினும் இழப்பினும் என்?**

நட்பின் தகுதியளவு நோக்காது அதன் பயனளவு சீர்தூக்கும் நண்பர், பொருளையே குறித்து வஞ்சித்தொழுகுங் கணிகையரையுங் கள்வரையும் நிகர்ப்பர்.

பொதுவாக, மக்கட் குணம் குலத்தளவில் அமைந்து, எல்லாம் மனத்துள்ளதுபோல் தோன்றினும், நிலத்தியல்பால் நீர் திரிந்து அந்நிலத்தன்மையைப் பெறுதல்போல் சிறப்பாக, அவர் கூடும் இனத்தால் உள்ளதாகும். தம் அறிவு திரிந்து துன்பம் வருமென் றஞ்சிச் சிறியார் இனத்தினின்றும் விலகி, உயர்ந்த இயல்புடையார் தம்மை யொத்தாரையே சுற்றமாகக் கொள்வர்:

**பொன்னுந் துகிரும் முத்தும் மன்னிய**
**மாமலை பயந்த காமரு மணியும்**
**அருவிலை நன்கலம் அமைக்குங் காலை**
**ஒருவழித் தோன்றியாங் கென்றும் சான்றோர்**
**சான்றோர் பாலர் ஆப.**

தாழ்ந்த இயல்புடையாரும் மன வொற்றுமை காரணமாகச் சிறியாரொடு உறவுகொள்வர்:

**கவிசெந் தாழி குவிபுறத் திருந்த**
**செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா**
**வாய்வன் காக்கையுங் கூகையுங் கூடிப்**
**பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்.**

இனத்தானும் இன்னான் எனப்படுஞ் சொல். பேதைமை நீங்கி மனந்தூய தாதலும், சொல்லுஞ் செயலுந் தூய வாகலும், தாம் இணங்கிச் சேர்ந்த இனத்தின் தூய்மை உறுதுணையாக வரும்.

## அறிவு:

ஆதலின் அறனறிந்து மூத்த அறிவுடையாரது கேண்மையைத் திறனறிந்து தேர்ந்து கொளல் வேண்டும். அறத்தின் நுட்பங்களை நூலானும் உய்த்துணர்வானும் தெளிந்து, அறிவிலும், ஒழுக்கத்திலும், ஆண்டிலும் முதிர்ந்து, நீதியியலும் உலகியலுந் தெரிந்த பெரியோர்களை நன்கு மதித்து, மேன்மைப்

படுத்தி, அவர் விரும்புவன பேணித் துணையாகக் கொள்க. அவ்வான்றோர், யாதேனும் வழியால் நேரிட்டதோர் இடரைக் காணின், அத்துயர் துடைத்து, மேலும் அத்தகைய துன்பம் உறாதவாறு முன்னறிந்து அடைந்தாரைக் காக்கும் ஆற்றல் உடையாராவர். செம்பொருள் உணர்ந்து ஒழுக்கத்தில் நிற்கும் அச்சான்றோரது தீச்சொல் அறியாத வாயினின்று பிறக்குஞ் சொல்லானது, வழுக்குதலையுடைய வழியில் ஊன்றுகோல் போல் தளர்வு வந்த விடத்து உறுதி தருவதாகும்.

> அறிவற்றங் காக்குங் கருவி, செறுவார்க்கும்
> உள்ளழிக்க லாகா அரண்.

அறிவுடையார் ஆவனவற்றையெல்லாம் அறிவார். அறிவு, மனம்போன போக்கிற் போகவிடாது நன்மை பெறும் வழியிலேயே செலுத்தும். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், உரைப்பாரது தன்மையை நோக்காது அவர் கூறும் பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதலோ தள்ளுதலோ புரிவதற்கு அவ்வறிவு துணையாகும். மணல் நிலத்துத் தோண்டிய அளவினதாக நீர் ஊறுவதுபோல் மக்கட்குத் தாங் கற்ற நூலளவே அறிவு வளரும். எனவே, கற்க; குற்றுயிர்ப் பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகாதன விலக்கி, அறம் பொருள் இன்பத்தோடு வீடு என்னும் உறுதிப் பொருள் பயப்பனவாகிய நூல்களுள் தம் கல்வி, ஆண்டு, அலுவல் முதலியவற்றுக்கு இயைபவற்றைக் கற்க; ஐயம் திரிபு மயக்கம் நீக்கி, மெய்ப்பொருளுணரப் பலகாலும் பயின்று கற்க; கற்றபின், அந்நூல் நெறியில் நின்று ஒழுகுக. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகுமாதலின், கல்லாதவர் கண்ணுடையராகார்; அவர் முகத்திரண்டு புண்ணுடையரே; விண்மீனிடைத் தண்மதியென இலங்கும் நூற்களைக் கல்லாதார், அத்தகை மாண் நூல்களைக் கற்றாரோடு நோக்க விலங்காவர்.

நூண் மாண் நுழை புலமுடையாரது பொருள் செறிந்த நூல்களைக்கற்றிலராயினும், கற்றுருங் கேட்க விரும்பும் தெளிந்த அறிவுடைய ஆன்றோர் இயம்பும் முதுமொழிகளைச் சிறிதளவேனுங் கேட்டால் அவ்வளவிற்குச் சிறந்த பெருமை யுண்டாம்.

> பசிப்பிணி என்னும் பாவி
> குடிப்பிறப் பழிக்கும்; விழுப்பங் கொல்லும்;
> பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்;
> நாணணி களையும்; மாணெழில் சிதைக்கும்;
> பூண் அணி மாதரொடு புறங்கடை நிறுத்தும்;

ஆனுல், கேள்வியைக் கெடுக்க மாட்டாது. அக்காரணம் பற்றியும் செந்நாப் போதார்,

> **செவிச்செல்வம் செல்வத்துட் செல்வம்; அச்செல்வம்**
> **செல்வத்துள் எல்லாந் தலை**

எனச் சொல்லினர் போலும்.

**பண்பாடு :**

கல்வியாற் சிறந்த அறிஞர் உரைக்கும் பொருள் நுட்பங் களைக் கேட்டு உணருங் குணமுடையாரே பலரிடத்தும் பணி வுடன் பேசும் நாவினை யுடையராவர். ஒழுக்கமுடைமையே குடிமை; குடிமைக்கு விழுப்பந்தருவது பணிவுடைமை. அற்றம் மறைக்கும் பெருமை; பெருமைக்கு உயர் வளிப்பது பணி வுடைமை; செழுங்கிளை தாங்குவது செல்வம்; செல்வத்துக்குச் செல்வமாவது பணிவுடைமை. தோல்வி ஏற்பது சான்ருண்மை; சான்ருண்மைக்கு வன்மை பயப்பது பணிவுடைமை. எல்லோர்க் கும் நல்லதாவது பணிவுடைமை; பணிவுடைமைக்குப் பயனு வது பண்புடைமை. **பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்.**

பெரியோர் சிறியோரைப் பார்த்து, 'உணர்வு இல்லாத எருமை மாடு' என்றும், 'சொற்கேளாக் கழுதை' என்றும், 'கொள்ளிக்கைக் குரங்கு' என்றும், 'கண்டதன் பின் அலையும் நாய்' என்றும் கூறும்போது மாக்களின் இயல்பை நோக்கியே செப்புகின்றனர். எனவே, பண்புடைமையால் ஒப்பதே தக்கது.

> **உறுப்பொத்தல் மக்களொப் பன்ருல்; வெறுத்தக்க**
> **பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.**

எவ்வகையானும் பாடறிந்து நடத்தலால் யாவராலும் நச்சப்படுபவரிடத்துப் பொருட் செல்வம் பெருக வேண்டும். நிலக்கிழா ரெனினும், தொழிற்கிழா ரெனினும், அரசின ரெனினும், மறையின ரெனினும், பண்பிலார் பெருஞ் செல்வம் பெறுவராயின், மாசுறு கலத்தில் வைத்த நல்லாவின்பால், திரிந்துபோதல் போல் அச் செல்வம் பயன்படாது போம். உலகவாம் பேரறிஞராய ஆண்டகையாரது வண்கையை அடைந்த பெருந் திருவானது ஊருணியாம் பேரேரியில் நிறைந்த நீர், பாழ்போகாது நின்று, ஊர் வாழ்வார் வேண்டும்போது சென்று முகந்து பருகுதற்கு உதவுதல் போல், இல்லாதார்க் கெல்லாம் பயன்படும். வேறிடத்து ஆலமரம் பழுத்துப்

பறவைகட்குப் பயன்படுதல் போல் ஊரிடத்து வேதிகைச் சுற்றுக் கோட்புக்க பனை, மன்றப் பலா, வண்டளிர் மா போன்ற மரங்களில் தீங்கனி பழுத்து எளிதில் நுகரப்படும்; அவ்வாறு அச் செல்வம் பயன்படும். மருந்து மரம், அரிய இடங் களில் உள்ள தாகாமல், மறைந்து நில்லாமல், காலத்தால் இல்லாது போகாமல், எளிதிற் கிடைப்பதாகி இலை, பூ, வேர், பட்டை முதலியவற்றால், வேண்டியார்க்குத் தன்குறை நோக்காது நோய் தீர்ப்பது போல், அப்பொருள் பிறர்க் குண்டாம் இடுக்கண் தீர்க்கப் பயன்படும். எனவே, இத்தகைய சீரெல்லாம் நிரம்பிய திருவுடையார்க் குண்டாகும், செய்யத் தக்கவற்றைச் செய்ய ஏலாமையைத் தரும் வறுமை சிறிதள வெனினும், கைம்மாறு கருதாது வழங்கும் மாரி பொழியாது ஒழிதாலால் விளையும் இடும்பை போன்ற துன்பம் உண்டாம்.

**நூற்பயன்:**

வானம் வழங்காதெனின் தொழிற் கெல்லாம் அச்சாணி போன்ற உழுதொழிலை உழவர் கைவிடுவர். கைவிடவே, உலகத்துள் நின்று உடற்றும் பசி யென்பது உலகுணர்ந்த உண்மை. உயிர்க்கும் உழைப்புக்கும் உறுதியாம் உண்ணீரைத் தரும் வானொடு வளியையும் யாவையும் ஆண்டு நடத்துவான் ஒருவனை அறிந்து தலைவணங்கித் தொழுதலை உலகு ஒழுக் காறாகக் கொண்டு வழக்கப்படுத்த வேண்டாமோ?

> **அகரம் முதல, எழுத்தெல்லாம்; ஆதி**
> **பகவன் முதற்றே உலகு.**

அறியாத, அறிந்தார் சொற் கேளாத பேதையரது அடங்காத நாவால் 'அவன்' இல்லை எனச் சொல்லிவிடுவது எளிது, எளிதினும் எளிது. ஆனால் அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றும், 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்றும் உண்மை யுணர்தலோ அருமையான அறிவு, அறிவினுள் அறிவு. பல நல்ல நுண்ணிய நூல்களைக் கற்று ஆசற்றாரென மதிப்புப் பெற்றாருள்ளும் கடவுள் இல்லை யென்பார் உளரெனின், மாசறு ஆசிரியராகிய வள்ளுவர் அதற்குக் காட்டுங் காரணங் களுட் சில: 1. உண்மையறிவு மிகுதல்—இயல்பாய அறிவானது மேல்நின்று நூலறிவை மறைத்தல், 2. மனம் நல்லர் ஆகாமை —நேர்மை யில்லாமையால் திருந்தாத மனத்தில் அறிவுத்தெளிவு உண்டாகாமை, 3. வெளிறுடைமை—எனைத்துணை நுண்ணறி வாளரும் ஓர்வழி மயங்குதல், என்பன.

**தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது.**

அறிதெனத் தெளிந்த ஆண்டகை, தமிழ்ப் பண்பாட்டுக் கருவூல மாம் திருக்குறளை அருளிய திருவள்ளுவராம் பெருந்தகையார் தந்திருநூலின் முதற்குறட்பாவில், ஆதிபகவன் முதற்றே உலகு எனக்கூறி அடுத்த அரும்பாவில்,

**கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்?**

என வினவுகின்றார். 'கேடில் விழுச் செல்வம் கல்வி யென்றும், 'கற்றனைத்தூறு மறிவு' என்றும், 'அறிவற்றங் காக்குங் கருவி' என்றும் பலவேறு வகையில் விரிவாகத் தமது உலகம் புகழும் ஒரு நூலில் விரித்துரைக்கும் புலவருட்புலவர், வாலறிவன்—அறிவினுள்ளெல்லாம் மேலாய தூய அறிவனும் இறைவன்—தனது அடியார்க்கு எளியவாய் அடைந்தார்க்கு அருள்நிழலாகும் நல்லதாளைத் தொழுதலாகிய விழுப் பயனைப் பெறுவிட்டால், எல்லா வுடைமைக்கும் ஏதுவாம் அறிவுடை மைக்கு ஊற்றாங் கல்வியைக் கற்றதனால் ஆய பயனென்ன? ஒன்று மில்லையே! என்கிறார். ஆகவே, கல்விச் செல்வத்துக்கு உரிமையுடையாராய் நாகரிகமடைந்த மக்கள் யாவர்க்கும், தம் பண்பாட்டின் தொடக்கம் ஆதிபகவன் முதற்றே உலகு என்பதுணர்தலும், அதன் முடிவு, கல்வியின் பயன் கடவுளைத் தொழுதல் என்பதுணர்தலுமாம் எனத் தமிழ்ப் பெரும் பெருந் தகையார் உறுதியாய் உணர்த்துகின்றார். உலகம் போற்றும் அறிஞருள் அறிஞராய தெய்வப் புலமை வள்ளுவர் கல்விக்கு முடிவான பயன் பிறிதொன்ற றியாராயின், வேறு காண்பார் உளரெனின், அவர், கல்லாத மேற்கொண்டொழுகும் புல்லறி வாளரே, ஐயமின்று.

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்' என்ற தமிழ் இலக்கியக் கோட்பாட்டிற்கு இணங்க நூலெழுதித் தமிழ்ப் பண்பாட்டை வடித்து வகுத்துத் தந்து, இப் பண் பாட்டுமுறையே மக்கள் உய்வதற்கு உரியவழி யெனத் துணிந்து விளக்கிய திருவள்ளுவர் பெருந்தகையாளர் போற்றும் பெருந் தகையாளரே.

## முன்னுரை

இரவியும் மதியும் இத் தாரணியும் உள்ளவரை உளதாம் இயல்புடையது வள்ளுவர் என்னும் அத்தமிழர் அன்று கண்ட திருக்குறள் என்னும் இலக்கியம். அந்த அமரத் தமிழ் நூலை ஆக்கிய ஆசிரியர் பெருமானை ஓர் பெருந்தகையாளர், அறநெறியாளர், மெய்யறிஞர், அரசியலறிஞர், பொருளியற் புலவர் என்றும், இன்ன பிறவாறும் கூறுவதனை எவரும் எளிதில் ஏற்பர். ஆனால், உலகம் போற்றும் தனி நூல் செய்த அப் பெரியார் ஒரு கவிஞர்தாமோ என்பதோர் ஐயம் பழங்காலம் முதலே நிலவி வருகின்றது. அதன் காரணமும் வெளிப்படை. நால்வகைப் பாக்களில் முதற்பா வெண்பா. அவ்வெண்பாவில் முதற்பா குறட்பா. அக்குறளால் இயன்ற நூலாயினும் அது ஒரு நீதி நூல்!

எதுகை மோனை முதலிய சொல் அலங்காரங்களுடன் சந்த நயமோங்க அடிதோறும் அமுதச்சுவை கலித்தோடும் கலித் தொகை போன்றதொரு அகத்திணை நூல் அல்ல திருக்குறள் முழுவதும். குறிஞ்சித் தேன் ஒழுகும் கபிலர் பாட்டுக்களுடன் கைகோத்து நடைபோடும் காமச் சுவைப்பாட்டுக்கள் அடங்கியது அதன் காமத்துப்பால். ஆனால் குறளைப் படிப்ப வரிற் பலர் அதன் அறத்துப்பால் பொருட்பால்களுக்கு அப்பால் காமத்துப்பாலின் கடைசிவரை செல்வதில்லை. காமத்துப்பால் ஏடுகளைத் தம் கைவிரலால் புரட்டி, அங்கொரு பாட்டிலும் இங்கொரு பாட்டிலுமாகத் தம் கண்ணைச் செலுத்தித் தம் கருத்தை அதன்பால் செலுத்தாமலே நின்றுவிடுகின்றனர். அது முற்றும் அவர் குற்றமன்று. ஆயிரமாயிரம் அகச்சுவைப் பாட்டுக்கள் நற்றிணை முதலிய தொகை நூல்களில் நிரம்பிக் கிடக்கின்றன. மேலும், குறளைப் படிப்பார் மனத்திலெல்லாம் அது ஒரு நீதி நூல் என்ற எண்ணமே மேலோங்கி நிற்கின்றது.

ஆனால், திருக்குறளின் முழுப் பயனையும் எய்தவேண்டு வோர் அதனை ஓர் கவிதைக் கருவூலமாகவும், அதனை இயற்றிய ஆசிரியர் பெருந்தகையை ஓர் அருந்திறல் கவிஞராகவும் கருதி

அதனைப் படித்தல் வேண்டும் எனக் கூறுதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1. நாயனாரும் கவிஇயலும்.

திருவள்ளுவ நாயனார் நம்போலியரால் அளப்பரியர். ஆழம் அறியமுடியாத, கரைகாணமுடியாத கலைக் கடல். அவரைப் போன்றே கவி என்பதும் நமது கருத்தளவைக்கு அகப்படாதது. கவி என்பது என்ன என்னும் வினாவுக்கு உலகத்தில் யாருமே இன்னமும் முழு விடை கூறவில்லை. தீப் பிழம்பாக ஓங்கிய சிவபெருமானது சிரத்தைத் தரிசிப்பதற்கு அறிவுடைப் பிரமா செய்த முயற்சி போலவே அவ்விடைகள் பலவும் இருக்கின்றன.

மனிதன் செய்யும் செயல்கள் பலப்பல. அவற்றுள் சில அருஞ் செயல்களும் உள. அவையெல்லாம் படித்தல், ஆய்தல், பொருதல், வெல்தல் என்னும் பெயரால் குறிக்கப்படுகின்றன. அவனுடைய கலைச் செயல்களும்கூடப் பாடுதல், நடித்தல், கட்டுதல், வரைதல் என்னும் பெயராலேயே வழங்குகின்றன. கவி புனைதல் ஒன்றே, 'செய்தல், செய்யுள்' என்றும் தனிப் பெயர் பெற்றுள்ளது. மனிதனது அருஞ் செயல்கள் அனைத்தினும் செய்யுட் செய்தலே பேரருஞ் செயல் என்பதும், அதனைச் செய்வோரே பேரருந் திறலோர் என்பதும் இதனால் புலனாகின்றன.

### கவி பிறந்தது:

மனிதனது மாண்புறு செயலாகிய கவிதைதானும் எப்படிப் பிறந்தது, எவ்வண்ணம் வளர்ந்தது? ஆதி மனிதனுடைய காட்டக வாழ்க்கை — மலையும் மரமும் நீரும் நிலமுமாக இயற்கையோடு ஒட்டிய இயற்கை வாழ்க்கை — இன்றுபோல் நெற்றியில் கைவைத்து ஆழ்ந்து சிந்தித்திருக்கும் பெரிய பிரச்சினையாக இருக்கவில்லை. வேட்டையாடி உண்ணுதல், பொழிலாடிப் புனலாடிப் பொழுது போக்குதல், போராடிக் களித்தல் என்னும் தொடக்கத்ததாய், தன் தலையைத் தானே வெட்டிப் பலியிடுதல்வரை விளையாட்டு வெறி விஞ்சிய முருடாக இருந்தது. அதுவே நாளடைவில் காதலும் வீரமுமாக மலர்ந்தது. வீடும் குடும்பமும், உழைத்தலும் உண்ணலும், நாடும் அரசுமாகிய இன்றைய நாகரிக நிலை யாவும் விலங்கோடு

விலங்காய் ஓடி விளையாடிய நம் முன்னோரது விளையாட்டென்னும் முதிரா மனப் புலப்பாட்டில் எழுந்த 'எம்பயர் ஸ்டேட் பில்டிங்கு'களே யாகும். கலப்பற்ற உணர்ச்சிப் பெருக்காகிய காதலும் வீரமும் ஈன்று வளர்த்த நாகரிகக் குழந்தைகளே இன்று நம்மை ஆளும் சட்டங்கள், சமயங்கள். இவற்றோடு பிறந்ததுதான் கவியும்.

அவன் வில்லும் அம்பும் ஏந்தி வேட்டத்தில் வேழத்தினை வீழ்த்தி விளையாடச் சென்றான். அவள் தன் தோழிமாரோடு பூப்பறித்துப் பொழிலாடி வரச் சென்றாள், இருவரும் ஒருவரை யொருவர் காண்கின்றார்கள். துணர் துணராகப் பூத்து மணங் கமழும் மரஞ் செறிந்த காவும், பளிங்குப் புதுப் புனல் பாய்ந் தோடும் யாறும், மயிலாடுதலும் குயில் கூவுதலுமாகிய அவ் வியற்கைப் பின்னணியில் அம்மானிட உள்ளங்களிரண்டும் ஒன்றாய்விடுகின்றன. இருவரும் கூடுகின்றனர். கூடியவர் பிரிகிறார்கள். பிரிந்தவர் ஒருவரை யொருவர் எண்ணி எண்ணி ஏங்குகின்றனர். இருவர் உள்ளங்களிலும் கற்பனை ஊற்றுக் கண் திறக்கின்றது. மீண்டும் கூடும்போது அவன் அவளைப் புகழ்ந்து புகழ்ந்து பேசுவதில் அவனுக்குச் சலிப்பே இல்லை. அவள் அவன் சொல்வதனைக் கேட்டு, வெண்ணிலவின் தண் ணொளியைப் பருகிக்களிக்கும் சகோரப்புள்ளாகின்றாள். அவன் உணர்ச்சியுருவாய்க் கற்பனை புனையும் ஓர்'கவி'யா கின்றான். அவள் ஓர் ரசிகையாகின்றாள். பாட்டு என்னும் பச்சைக் குழந்தை பிறக்கின்றது.

இன்ப விளையாட்டே கவியின் தந்தை. உணர்ச்சிப் பெருக்கே அதன் நற்றாய். மனிதன் கையிலே இப்படி ஒரு மாணிக்கக் கல் கிடைத்தது. அவன் அதை அப்படியே சாணை பிடிக்காத கரட்டுக் கல்லாகவே என்றும் வைத்திருக்கவில்லை. பல வர்ணக் கல்லாக அறுத்து நிறுத்து, அதனை இன்று விலைமதிப் பில்லாத மணியாக்கிக் கொண்டான். அது வளர்ந்த வகையை யும் வளர்க்கும் வகையையும்தான் தொல்காப்பியர் பொரு ளதிகாரத்தில் கூறுகின்றார், உண்மையான உலகியலைச் சொல் வது கவி அல்ல. சிறுபான்மை உலகியலும் பெரும்பான்மை புலவரது புனைந்துரையாகிய கற்பனையும் கலந்து, அப்புலவர் படைக்கும் படைப்பே கவி. அதனாலேயே கவிக்குப் புலநெறி வழக்கென்று பெயர். புலவருடைய புலம் என்னும் அறிவிலே மலர்ந்து, கேட்போரது அறிவை மலர்விக்கும் சொல் ஓவியமே

கவி. கவியினைச் செய்வதும் விளையாட்டு, அதனைக் கேட்பதும் ஓர் விளையாட்டு. இரண்டும் இன்பம். இன்ப சாதனமே கவி.

## கவிக்கு விஷயம் எது?

எப்பொருள் பற்றிக் கவி செய்வது? ஆதியில் காதல்பற்றிக் கவி எழுந்ததென்று சொன்னோம். ஆம், அகத்திணை இயலுள் வரும் 'நாடக வழக்கினும்' என்னும் சூத்திரத்தின் நுண் பொருள் கருத்தும் அதுவே. அதற்கு உரைவிளக்கம் செய்யும் நச்சினார்க்கினியர் 'அகத்திணையாகிய காமப்பொருளே புலநெறி வழக்கிற்குப் பொருளென்றுணர்க' என்று கூறுவதைக் காண்க. கவிஞர்க்கும் கற்பனை வெறியூட்டும் பாரசீகப் பாடல்கள் யாவும் காதல் பாட்டுக்களாகவே இருக்கின்றன. பிற்காலத்தில் நம் தமிழகத்தில் தோன்றிய பக்திப் பிரபந்தங்கள் இறைவனைத் தலைவனாகவும் அவனோடு சாயுச்சியம் எய்த விழையும் ஆன்மாவைத் தலைவியாகவும் வைத்தே தூது, உலா, குறவஞ்சி முதலியனவாக மலர்ந்துள்ளன. மாணிக்க வாசகருடைய குயிற்பத்து முதலியனவும், ஆண்டாளுடைய அமுதப் பாக்களும் காதல் உருப்பெற்ற பக்திப் பாடல்களே யாகும். கண்ணகியின் சோக நாடகமாகிய சிலம்பில் வரும் வரிப்பாட்டுக்கள் அனைத்தும் கட்டற்ற காதல் உள்ளங்களின் காதல் கீதங்களே யன்றோ?

ஆயினும் காலப் போக்கில் கவி காதல் ஒன்றுக்கே இடனாக அமைந்து கிடக்கவில்லை. தொடக்கத்தில் குறிஞ்சி என்னும் ஓரே கூற்றில் இயன்றொழுகிய காதல் பாட்டுப், பின்னர் முல்லை பாலை மருதம் நெய்தல் என்னும் நான்கனுடன் ஐந்தாக விரிந்தது. இவ்வைந்தும் அகத்திணை. அவள் அன்பைப் பெறு வோன் அல்லது பெற்றோன் அவள் பொருட்டுப் பொருள் தேடலும் வீரச் செயல் செய்தலும் வேண்டப்பட்டன. ஆயர் வீட்டிலே ஓர் இளம் பெண். அவளைப் பெறுதல் விருப்புடைய இளைஞர் அவ்வாயர் வீட்டிலே வளர்ந்த கொல் லும் ஏற்றினைத் தழுவி அடக்கித் தம் ஆண்மையை மெய்ப் பித்து, அவள் மண மாலையைப் பெறல் வேண்டும்.

> **கொல் ஏற்றுக் கோடுஅஞ்சுவானை மறுமையும்**
> **புல்லாளே ஆயமகள்**

'உயிரைக் கேவலம் காற்று என்று கருதாது, பெரிதாக மதித்து ஏற்றின் கொம்பினுக்கு அஞ்சுவார்க்கு ஆயர் மகள் தோள் புல்லு தற்கு எளியனவாகாள். தான் விரும்பும் காதலியினுடைய

மார்பிடை விரும்பிக் குளிப்பதுபோல, கொல்லும் தன்மையுடைய ஏற்றின் இரு கோடுகளிடையே புகுந்து, அதனை அடக்கும் வீரனிடம் அவள் பெற்றோர் 'முதலிய ஆயர் முலை விலையாக வேறு பொருள் வேண்டார்'.

## கவி வளர்ந்தது :

ஆதியில் தனியே பிறந்த காதல் பாட்டுப் பின்னர் வீரத்துடன் இணைந்து, நெடுங்காலம் இரட்டைக் குழந்தையாக வளர்ந்தது. கடைச்சங்க காலம்வரை இங்நிலை இருந்தது. அது அகமும் புறமுமாய், அவற்றுள் குறிஞ்சி, வெட்சி என்னும் பல்வேறு திணைகளாய், திணையுட் பலதுறைகளாய் விரிந்து கிடந்த காலத்தில் தொல்காப்பியர் அதற்கு இலக்கணம் செய்து அழியாமை அளித்தார். அவர் காலத்துக்கும் சங்க காலத்துக்கும் பின்னர் அகமும் புறமும் எய்தியிருக்கும் மாறுதல்கள் அளப்பில. இவ்விரண்டனுள்ளும் அடங்கித் தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை போல அடங்கியிருந்த கவிதையின் சிற்றுருவம் பேருருப் பெற்றது. ஒரு தலைவியினுடைய அன்புத் திறம், அல்லது ஒரு தலைவனுடைய வீரத் திறம் பற்றிய உணர்ச்சிச் சித்திரமாக விளங்கிய சில அடிச் சிறு பாட்டு, காதை காதையாய்ப், பெருங் கதையாய், காப்பியமாய் ஒரு தலைவன் அல்லது தலைவியினுடைய பிறப்புமுதல் இறப்புவரை பேசும் 'விசுவரூபம்' பெற்றது.

கவிதையின் உருவம் மாறியதுபோலவே அதன் உட்கிடக்கையும் மாற்றம் ஏய்திற்று. ஒன்றுக்கொன்று உயிர்த் துணையாய் இருந்த காதலும் வீரமும் சமணர் முதலியோரால் கடியப்பட்டன. எனவே, பழைய மரபில் எழுதப்பட்ட சங்கப் பாட்டுக்கள் மறையத் தொடங்கின. சமணர் முதலியோருடைய நீதியுரைகள் கவியுருப்பெற்று, மக்கள் மனத்தைத் திருத்தி அவர்களை வீட்டின்பத்துக்கு ஏற்றிச் செல்லும் ஏமப் புணைகளாயின. சாத்தனார் காப்பியத்தில் காதலை வேட்ட சிறுமி மணிமேகலைக்குத் துறவு அளிக்கப்பட்டது. தமிழரது இயற்கை இன்ப வாழ்க்கையிலும், இயற்கை இன்பக் கவிதையிலும் சுவைகுன்றத் தொடங்கிய நிலை அது.

பழங்காலத்திலே காதலையும் வீரத்தையும் உட்கொண்டு, மக்களை மகிழ்விக்கும் ஒரே பணியினைச் செய்து வந்த கவி, சமூகத்தின் நாகரிக வளர்ச்சிக்குரிய பலதுறைச் செய்திகளையும்

எடுத்துரைக்கும் சாதனமாகவும் பயன்பட வேண்டிய பொறுப் பினை ஏற்றது. பெற்றோர்கள் எளியோர்களாயினும் அவர் களுக்குத் தவமகனாகப் பிறந்து, துரையப்பன், சுந்தரராசன், மாணிக்கம் முதலிய செல்வப் பெயர்களைப் பெற்றுச் செல்ல மாய்ச் சீராட்டி வளர்க்கப்பெறும் சிறுவன், வயது வந்தபின் வாழ்க்கைப் பிரச்சினைகளை ஏற்கும் வீரனாதல்போல, காதல் விளையாட்டிற் பிறந்த சிறுகவி வளர்ந்து, வரலாறு (பத்துப் பாட்டு, புறநானூறு) உரைத்தது; அறிவுரை (நாலடியார்) கூறிற்று; சமயத் தத்துவங்கள் (மணிமேகலை, சிந்தாமணி) வரைந்தது; கதைகள் (சிலப்பதிகாரம், கம்பராமாயணம்) சொல்லியது; நாட்டுப் பற்றை வளர்த்துச் சுதந்தரப் போருக்கு ஊக்கம் அளித்தது. இன்று அது சமூகப் பிரச்சினைகளை நேரடி யாகத் தாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது. இவற்றுள்ளே, கவிக் குழந்தையின் பிறப்பருமை அறிந்து அதனை அன்புடன் பேணி அதன்பால் வேலைகொண்ட புலவர் பெருமக்களும் உளர். கவியின் இயல்பு அறியாமல் தம் கொள்கைகளை அதன் இன் தலையில் வன்புடன் ஏற்றி அதனை நலிவிக்கும் 'புலவர்களும்' உளர்.

## நாயனார் மூவரில் ஒருவர் :

இவர்களுள் கவியின் அருமை அறிந்த புலவரினத்தைச் சேர்ந்தவர் நம் தேவர் திருவள்ளுவர். இதனை நமக்கு நினை வுறுத்தியவர் பாரதியார்.

> **யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
> **வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்**
> **பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை.**

இதற்கு, பிறநாட்டுப் பெரும் புலவர்களைப்பற்றிச் சிறிதேனும் அறிந்தவர்கள், இம்மூன்று புலவர்களையும் போல இந்நில வுலகத்திலேயே எந்தக்காலத்திலும் எந்தமொழியிலும் புலவர் கள் தோன்றியதில்லை எனப் பொருள்கொள்ளார். ஆம், தமிழ் உலகிலே எங்கணும் அம்மூவரையும் போன்ற புலவர்கள் தோன்றியதில்லைத்தான். காரணத்துடனேயே பாரதி அங்ஙனம் குறிப்பிட்டார்.

இளங்கோ, வடவேங்கடம் தென்குமரி எல்லைக்குள் அமைந்து மூன்று தனி நாடுகளாக மூவேந்தர் ஆட்சியில் பிளவு பட்டுக் கிடந்த தமிழ் மக்களிடையே முத்தமிழாலும் ஒற்றுமை

காண முயல்கின்றார். வடநாட்டுச் சமயங்கள் தெற்கே வந்த பின், வடநாட்டரசர்களும் என்றுமில்லாத புதுமையாய்த் தெற்கே படையெடுத்து வருவதைப்பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். தமிழ் நாட்டரசர்கள் முன்னைப் போலவே தம்முள் இகலிப் போர் விளைத்துக் கொண்டிருத்தல் கூடாது. தமிழனுடைய வாழ்க்கை, அவன் வாழும் ஊர் அல்லது நாட்டகத்தே மட்டும் கட்டுப்பட்டு நின்றுவிடுவதில்லை. அது தமிழகம் முழுவதும் பரவியது. காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்த செட்டியார் குடும்பம் ஒன்று மதுரைக்கு வாணிபம் செய்து பிழைக்க வருகிறது. பாண்டிய மன்னன் அவர்களுக்கு நீதி வழங்கத் தவறுகிறான். உண்மையுணர்ந்த சேரமன்னன் அக்குடும்பத் தலைவிக்குத் 'தன்நகரிலே அமரத்துவம் அளிக்கின்றான். இளங்கோ தமிழகத்துப் 'படேல்'. மன ஒருமையை வளர்த்து அதன் மூலம் இன ஒருமை காணமுயன்ற அரசியலறிஞர். ஆனாலும், அவர் கவி அருமை அறிந்த ஓர் கவிஞர். கானல்வரி முதலிய அமுதப்பாடல்கள் இன்பக்கனிகள். அவர் வாக்கு தேனொழுகு தீந்தமிழ்.

கம்பர் தமிழகம் முழுவதும் சோழப்பேரரசின் கீழ் ஒரே நாடாய் இருக்கக் கண்டவர். தமிழன் ஒவ்வொருவனும் ஓர் இலட்சிய புருடனாக வாழக்கூடும், வாழவேண்டும் என்னும் இலட்சியக் காட்சியாளர். அவர் காட்டும் குடும்பம் ஓர் இலட்சியக் குடும்பம். அவர் காணும் நாடும் நகரும், பரதனும் குகனும் அனுமனும் முதலிய மக்கள் அனைவரும் இலட்சிய எல்லைகள். இலட்சிய உலகில் இராவணபலத்துக்கு இடமில்லை. இலட்சிய உலகில் இலட்சிய மனிதரைப் படைக்கும் 'கம்ப முயற்சியே' அவர் பாடிய 'இராமாவதாரம்'. அம்முயற்சிக்கு ஆயிரமாயிரம் கவிகள் அவருக்குத் துணை செய்கின்றன. அவை யாவும் இன்பக் கனிகள். தமிழ்க் கற்பகத்தின் வாடா நறுமலர்கள். இளங்கோ, கம்பர் ஆகிய இவ்விரு பெருமக்களுடைய காவியங்களில் அகத்துறை புறத்துறை மரபுகளும், அவற்றுக்கேற்ற மெய்ப்பாடுகள் பொலியும் சுவைப்பாட்டுக்களும்தாம் எத்துணை, எத்துணை!

### நாயனார் தனிச் சிறப்பு:

இப்புலவர் பெருமக்கள் ஒவ்வொருவரும் தத்தமக்கே தாம் ஒப்பாவாராயினும் நாயனாரை நடுவண் வைத்ததற்குத் தக்க காரணம் இல்லாமல் இல்லை. கம்பரும் இளங்கோவும் கதை

சொல்லிய புலவர்கள். எழுத்தாணி இழுத்த போக்கெல்லாம் சிறிது போகும் உரிமைப் பேறு உடையவர்கள். நாயனுர் நீதி நூலாசிரியர். தமிழகத்துத் தன்னெப்பில்லாச் சட்ட வகுப்பாளர். அவருடைய ஒவ்வொரு எழுத்துக்கும், சொல்லுக்கும், அவற்ருேடு தொகும் மன், ஏ, ஓ முதலிய அசைகட்கும் கூட ஆன்ற பொருள் உண்டு. அன்றியும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்கட்கும் உயிர் ஒன்றே. அவ்வுயிரோட்டம் நூல் முழுவதும் ஒழுங்காகச் செல்லுதலும் வேண்டும். அதாவது கோடாநு கோடியான இரண்டு பெருந்தொகைகளே அரைக் கணத்தில் மனத்திற் பெருக்கி விடையளிப்பதோர் அருந் திறலேப்போல், எல்லாப் பால்களேயும், இயல்களேயும், அதிகாரங் களேயும், குறள்களேயும், அவற்றின் தொடர்கள் சொற்கள் எழுத்துக்களேயும், அவற்றின் பொருட்டொடர்புகளேயும் மனக் கண்முன் மறவாமல் வைத்து நூல்யாக்கும் நுண்ணறிவு வேண்டும். கவிதை வானில் கற்பனேச் சிறகு கொண்டு இட்டம் போல் பறக்கும் ஏனேப்புலவர்க்கும், அணுவளவும் வகுத்த நெறி விலகாமல் கருத்துடன், கத்திமேல் நடப்பார் போலச் செல்ல வேண்டிய பொறுப்பினேயுடைய நாயனுர்க்கும் எத்துணே வேறுபாடு!

## குறளின் தனித்தகுதி :

வண்ண வகைகளுடன் பரந்தோடும் விருத்தப் பாட்டு அற நூல் கூறுதற்கு இசைவதன்று.

> ‘நுண்மையொடு புணர்ந்த ஒண்மைத் தாகித்
> துளக்கலாகாத் துணேமை எய்தி
> அளக்க லாகா அரும்பொருட்டாகிப்
> பலவகை யானும் பயன்தெரிபுடைய’

தாக உரைப்பதற்குக் குறளுருவமே ஏற்புடையது. இந்தப் பொருத்தத்தினே யுணர்ந்து, உலகனேத்தினேயும் இரண்டடியால் அளப்பதற்குத் திருமால் குறள் உருக் கொண்டவாறே, நாயனுரும் தம் குறளால் மக்கள் மனத்தில் எண்ணுவன எல்லா வற்றையும் அளந்துவிட்டார்.

நீதி ஓதும் பொறுப்புரிமையால் நாயனுர் யாப்பு விதிகளே மீறினுர் அல்லர். பாவண்ணம், தாவண்ணம் முதலிய இருபது வண்ண விகற்பங்களும்,

வனப்பியல் தானே வகுக்குங் காலை
சின்மென் மொழியால் தாய பனுவலொடு
அம்மை தானே அடிநிமிர் பின்றே

என்ற அம்மை வனப்பும், உவமை முதலிய அணி விசேடங்களும் அமைந்த காப்பியமெனவே அறுதியிட்டுரைக்கின்றார் புலவர் நச்சுமனார்.

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்புஅணி வண்ணம் - இழுக்கின்றி
என்றுஎவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றுஇவர் இன்குறள்வெண் பா.

அறம் பொருள் இன்பம் வீடு எனும் நான்கின் நுட்பம் உரைக்கும் அருஞ்செயற்கிடையே கவிதைப் பண்புகளும் கலந்து கலந்து நூல் இயற்றிய பெருந்திறலை வியந்து, கம்பர்க்கும் இளங்கோவுக்கும் இடையிற் பெய்து, அக்கவிமன்னர் இருவரோடும் ஒப்ப வீற்றிருக்கும் உரிமையை அவர் நாயனார்க்கு அளித்தமை வியப்பன்று. கற்றாரும் கல்லாருமாகிய தமிழ் மக்களும், உலகத்து மக்கள் அனைவருமே அறிந்திருப்பது நாயனார் திருக்குறள். அது ஆங்கிலம் முதலிய பல மேனாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பெற்று, காலம் நாடு நிறம் சாதி சமயம் நாகரிகம் முதலிய எல்லாப் பேதங்களையும் கடந்து, குவலயத்து வாழ்வார் அகந்தோறும் உலாவுகின்றது. தமிழனுக்கும் அவன் மொழிக்கும் இத்தகைய உலகப் புகழைக் கொண்டுவந்த தமிழ் நூல் வேறு எதுவும் இல்லை. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்டது தமிழ் நாடு.

## திருக்குறள் தனித்தமிழ் இலக்கியமே:

வள்ளுவர் நூலை வடமொழியின் தழுவல் என்பர் சிலர். அன்னார் அதற்குச் சான்றுகளும் காட்டுவர். ஆனால், அக்கூற்றினை மெய்ப்பிக்கும் குறிப்பு எதுவும் திருவள்ளுவமாலை முதலிய பழையபாட்டுக்களில் இல்லை. உண்மையை மறைத்துப் பெருமை கொள்ள நினைப்பார் தமிழர் அல்லர். என்னை? நூல்களை முதல்நூல் வழிநூல், சார்புநூல் என வகுத்து, ஒவ்வொன்றனையும் உள்ளவாறே வழங்கிவருதல் ஓர் பழந்தமிழ் மரபு. கம்பன், தண்டி முதலிய இலக்கிய இலக்கணங்கள் தமிழுடை உடுத்திய வட நூல்கள் என்பதனை நாம் மறைக்க விரும்பவே

இல்லை. நாயனார் தமிழ் இலக்கணத்தைத் தழுவிச் செய்துள்ள காமத்துப்பாலையும், அதன்கண்வரும் களவு கற்பு ஒழுக்கங் களின் தலைவி, தலைவன், தோழி ஆகிய அகத்திணைப் பாத்திரங் களின் மூச்சும் பேச்சும் தனித்தமிழாகவே இருப்பதனையும் அறிவார், குறள் முதல்நூ லெனவே சாதிப்பர். காமப்பகுதி பிறநூலவர்க்கும் உடன்பாடே எனினும் வள்ளுவர் வாக்கில் மலரும் காமச்சுவை காலம் காணாத் தனித் தமிழ்க் காமமே யாகும்.

கபிலர் முதலிய சங்கப்புலவர்கள் உளத்திலும் உரையிலும் முற்றிய காமச் சுவையே—கவிதை இன்பமே ஈரடிக் குறளிலும் இருந்து நடம் செய்கின்றது. அறத்துப்பாலில் தவமும் துறவும், மெய்யுணர்தலும் அவாவறுத்தலும் உரைத்த ஞானவள்ளுவர் தமிழ்ச் சிறுவர் உள்ளத்தில் அலைமோதும் காமக்களியினைப் பாடும் பாவலர் என்பதைக் கண்டு மருட்கை யுறுகின்றோம். அரசியலும் அமைச்சியலும் விதந்தோதிய பொருளியல் நிபுண ராகிய நாயனாரா, விளையாட்டு விருப்பால் பொழிலிடத்து வந்து தமியளாய் நின்ற சிறுமியைப் பார்த்து 'ஆஹா, இவள் என்ன தெய்வ மகளோ, ஒரு மயில் விசேடந்தானோ, அன்றி ஒரு மானிடமாதரோ, ஒன்றும் துணியமாட்டாது என் நெஞ்சு மயங்கா நின்றது' என்று அவள் அழகில் ஈடுபட்டு வியக்கும் அழகுக் கலை அறிஞர்! காதல் விளையாட்டிலே, அதனால் பொங்கிவரும் உணர்ச்சிப் பெருக்கிலே அவருடைய கவிமலர்கா பூத்துள்ளது. கவியின் பிறப்பிட முணர்ந்த நாயனார் அதன் இயல்பும் அருமையும் அறிந்து சுவைநலம் கனிய அதனை வளர்ப்பதில் எவர்க்கும் பிந்தியவர் அல்லர். குறளில் கவிதை நலம் இல்லை என்பார் எவராயினும், அவர் காமத்துப்பால் குறள்களை—அவற்றுள் ஒன்றிரண்டையேனும் காண்பா ராயின் தம் பிழைபாட்டினை உணர்ந்து நாணுவர் என்பதற்கு ஐயமில்லை.

## 2. திருக்குறளின் கவிப் பண்பு

இனி, நாயனாரையும் கவி இயல்பையும் பற்றி இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்து, சில கவிப் பண்புகளையும், அவை குறளில் அமைந்திருப்பதனையும் சுட்டி இக் கட்டுரையை முடிப்பாம்.

## கவி ஒரு நாடகம்

புலவரது கற்பனைச் சித்திரமே கவி என்பது இதன் பொருள். அதற்கு,

> **திணையே கைகோள் கூற்றுவகை எனாஅக்**
> **கேட்போர் களனே காலவகை எனாஅப்**
> **பயனே மெய்ப்பாடு எச்சவகை எனாஅ**
> **முன்னம் பொருளே துறைவகை எனாஅ**

உறுப்புகள் வேண்டும். அதாவது, பாத்திரங்களும் அவை சந்திக்கும் சந்தர்ப்பமும், சந்திக்கும் இடமும், கொள்ளும் உணர்ச்சியும், உணர்ச்சி புலப்படப் பேசும் பேச்சும் முதலியன கவியில் இடம்பெறல் வேண்டும். இக்காலத்து நடையிற் சொன்னால் அரங்கு* காட்சி† பாத்திரங்கள்‡ உணர்ச்சி ஓட்டங்கள்§ பேச்சுக்கள்$ இவற்றுக்கெல்லாம் உயிராய் இவற்றைத் தொகுத்து உருவாக்கும் கற்பனை|| ஆகியவை வேண்டும். சூரியகலை சந்திரகலை ஆகிய இரண்டும் மனிதனுக்கு உயிர். உணர்ச்சிகளும் கற்பனையும் கவிக்கு உயிர்.

## ஒரு காதல் நாடகம்

அவனும் அவளும் ஊழ்வயத்தால் தனியிடத்தில் ஒருவரையொருவர் கண்டு இருவரும் கூடிப்பிரிந்தனர். இப்படியே பின்னரும் சில நாட்கள் மலையடியிலும் மரத்தடியிலும் கூடிப்பிரிகின்றனர். நாடகத்தின் முன் காட்சிகள் இவை. இந்தக் காட்சி, ஒரு நாள் இரவு முழுமதியின் தண்ணிலவு பாலாகப் பொழிகிறது. புவனமங்கை அந்தப் பொன்னொளியில் சொக்கிக் கிடக்கின்றாள். ஊரும் உறங்குகின்றது. அவனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. முன் ஏற்பாட்டின்படி அவளை எதிர்பார்த்து இரவுக்குறி வருகின்றான். ஏற்கனவே அவள் அங்கு வந்திருப்பதும், அல்லது அவன் ஒரு புறமிருந்து வரும்போது அவள் மற்றொரு புறமிருந்து வந்து, இருவரும் ஒரே வேளையிற் சந்திப்பதும் நாடகச்சுவை தரா. ஆகவே, அவள் இன்னமும் வரவில்லை. தண்ணொளி மதியும் அதனைச் சூழ்ந்தோடும் தாரகைகளும் அமைந்த நீலவானின் கீழே அவன் தமியனாக நிற்கின்றான். அவனைச் சூழ்ந்துள்ள மரங்களும் மலர்ச் செடிகளும் அவன்

---

* Stage † Scene ‡ Characters
§ Feelings or Emotions $ Expressions || Imagination

கண்ணிற்படவில்லை. நிலவே அவனைக் கவர்ந்து கொண்டு விட்டது. நிலவு தானே காதற்கடலைப் பொங்கி எழச் செய்வது! வள்ளுவர் என்னும் தெள்ளியர் திரை அமைப்பு இது.

சும்மா ஆடும் குரங்கு கள்ளும் அருந்திவிட்டால் என் செயும்? அந்நிலையை அடைந்துவிட்டான் அக்காதலன். காதலி யின் நினைப்பே அவன் உணர்வாகி உயிருமாகி இப்போது பேச் சாகவும் வருகின்றது. அவள் முகம்போல் ஒளிவீசும் மதியைப் பார்த்தே பேசுகின்றான். சந்திரனின் தண்ணொளி தன்னை வெதுப்புதலால் அதன்மீது அவனுக்குண்டான எரிச்சலும் இகழ்ச்சியும் தோன்றக் காதல் வெறியில் சொல்கிறான். 'மதியே, அவள் முகம்போல நீயும் ஒளிவீச வல்லையாயின், உனக்கும் என் காதல் சித்திக்கும். ஆனால் பாவம், அந்த மாசறு ஒளிதான் உன்பால் இல்லையே, என் காதல் உனக்கு எப்படிக் கிடைக்கும்? ஆனால், அவள் முகம் ஒத்து விளங்க உனக்கோர் உபாயம் சொல்வேன் கேள். அவள் முகம் இவ்வுலகத்தில் நான் ஒரு வனே கண்டு அநுபவிக்கும் தனி உரிமையுடன் இருக்கிறது. நீயும் இவ்வாறு பலரும் காணத் தோன்றாது, என் ஒருவனுக்கே உரியையாய் மறைந்து வாழ்தி..........அப்படியானாலும்தான் உனக்கு ஒரு குறை இருக்கின்றதே. அதை நீ எப்படிப் போக்கிக் கொள்வாய்? மலர் போன்ற அவள் கண்கள் உனக்கு ஏது? உன் அதிட்டமே அவ்வளவுதான்'

**மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்**
**காதலை வாழி மதி**

**மலரன்ன கண்ணாள் முகம்ஒத்தி யாயின்**
**பலர்காணத் தோன்றல் மதி**

இவ்வாறு அவன் சந்திரனோடு பேசி முடித்தான். அப்போது அவளும் மெல்லென நடந்து வருகின்றாள் அரங்குக்கு, அதாவது அவன் முன். வெறியுலகில் சஞ்சரித்த அவனுக்குத் தெளிவு பிறக்கிறது, அவள் வருகை அவன் உள்ளத்தில் பேருவப்பு உண்டாக்கினதென்பதைச் சொல்லவேண்டா. அவள் உடல் தன்பால் இல்லையேனும், அவள் உயிரும் உள்ளமும் எப்போதும் அவன்பாலே இருக்கின்றன. ஆதலின் அவள் வருகையைப் பாராட்டி அப்போது அவன் யாதும் பேசவேண்டியதில்லை. 'மென்மையுடைத்தாகிய மலர்ச் சாதியிலே மிகவும் மென்மை யுடைய அனிச்ச மலரின் மீதும், புணர்ச்சியின்போது நெகிழ்ந்து அன்னம் உதிர்க்கும் அதன் தூவியின்மீதும் நடந்தாலும், அவை

நெருஞ்சிப்பழம்போல வருத்தம் செய்வதாகிய மெல்லிய உன் பாதங்கள் கன்றுமாறு நடந்துவரும்படி உனக்குச் சிரமம் கொடுத்து விட்டேனே' என்று சொல்கிறான்.

**அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்**
**அடிக்கு நெருஞ்சிப் பழம்**

மனமொத்த ஒரு காதலனும் காதலியும் இரவில் சந்திக்கும் காட்சி இது. இதன்மேல் யாவரும் காணும்படி அக்காட்சி நீள்வது நாகரிகமல்ல. நாயனாரும் அதனோடு திரைபோட்டு விடுகிறார். இக்குறளைப் பத்தாவது பாட்டாக வைத்து, அவ்வதி காரத்தை முடித்துக் கொள்கிறார்.

## ஒரு வீர நாடகம்

ஒரு போர்க்களம். இருதிறத்துப் படைகளும் அணி வகுத்துப் போருக்கு ஆயத்தமாக நிற்கின்றன. நமது தலைவனாகிய வீரனையும் அங்கே முன்னிடத்தில் காண்கின்றோம். அவன் 'வீரர்களே — என் முன் வராதீர்கள். முன்னர்ப் பல போர்களில் என்னை எதிர்த்து வந்து உயிர் துறந்து வீரக்கல் ஏறியவர்கள் பலர். உங்களுக்கும் அந்த துர்க்கதி நேர வேண்டாம்' என்று பகைப் படைவீரர்களை எச்சரித்து வஞ்சினம் கூறிக்கொண்டு போர் தொடங்குகின்றான். போர் கலப்பற்ற வீரப் போராக நடக்கின்றது. காட்டு முயலைப் போலத் தன்னைக்கண்டு பயந்தோடும் 'வீரரைத்' தாக்காமல், வெஞ்சின வேழம்போல் தன்னை எதிர்த்து வரும் வீரரையே தாக்குகின்றான். அவன்மீது பகைவர் எறியும் வேல்கள் வந்து பாய்ந்து குத்திக்கொண்டிருக்கின்றன. அவற்றைக் கவனிக்கவும் அவனுக்கு நேரம் இல்லை. ஆனால் இப்போது அதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்துவிட்டது.

தன்மேல் வந்த பகைப்படை யானை ஒன்றைத் தன் கை வேலால் எறிந்தான். அந்த வேலை வாங்கிக்கொண்டே யானை பிளிறிக்கொண்டு ஓடி விழுந்தது. ஆயினும் படைவெள்ளம் இன்னமும் அவன்மீது வந்து தாக்குகின்றது. அவன் கையில் வேறு படை இல்லை, தன்மெய்யில் தைத்திருந்த வேல்கள் அவன் நினைவுக்கு வருகின்றன. அவற்றைப் பறித்துக்கொண்டு தன்கையில் வேல்கிடைத்ததற்கும், மேலும் போர் கிடைத்ததற்கும் மகிழ்கிறான். பகைவர் வேல் மார்பில்வந்து தாக்கும் போதும் விழித்த கண்ணை அழித்து இமையாது அருஞ்சமர்

ஆற்றுகின்முன். சில சமயங்களில் அரசனே தடுத்துரைத்தும் கேளாது சமர்க் கடலில் புகுந்து உழக்குகின்முன். அவன் கூறிய வஞ்சினம் இன்னமும் முற்றிலும் நிறைவேற்றப்படவில்லை. அவனுக்கே வெற்றிகிடைக்கவேண்டுமென்று நாமும் விழைகின்ருேம். ஆனுல் விதியின் நினைவு வேருக இருக்கின்றது,

வீரனுவான் பிழைத்துவருதலினும் போர்முனையிற் செத்து மடிதலே வீரத்தில் வீரமென்பது நாயனுர் என்னும் நமது நாடகாசிரியர் கருத்துப்போலும்! அதோ, போர்க்களத்தில் நம் கண் எதிரே அவன் சாய்ந்துவிட்டான். போர்க்களத்தின் ஒலி அடங்கிய மற்ருேரிடத்திலே அரசனும் பிற ஆண்டகையோரும் சூழ அவர்கள் நடுவே நம் வீரன் பிணமாகக் கிடக்கிருன். இங்கே யாரும் பேசவில்லை. ஆனுல் அவன் பிணத்தைப் பார்க்கும் உள்ளங்கள் சோகத்தால் பொங்குகின்றன. அரசன் கண்ணீர் வடிக்கின்ருன். எல்லோரும் கண்ணீர் வடிக்கின்ருர்கள். ஒரு அரசனே, அரசாங்கமோ தனக்காக அழும்படியான சாவு ஒருவனுக்குக் கிடைப்பதாயின், அது இரந்தாயினும் பெற்றுக்கொள்ளவேண்டிய பெருவாழ்வு அன்ருே?

> **புரந்தார் கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு**
> **இரந்துகோள் தக்கது உடைத்து**

காட்சி முடிந்து திரைவிழுந்து விடுகின்றது இந்தப் பத்தாவது குறளிலே. இது படைச்செருக்கு என்னும் அதிகாரம்.

## ஒரு சிறு நாடகம்

இந்தக் குறள் நாடகத்தில் வரும் பாத்திரங்கள் மனிதரேயாயினும், அவர்கள் யாருமே தம் உணர்ச்சி வெளிப்படப் பேசாது, ஒரு மெய்ப்பாட்டு நாடகமாகவே அது நிகழ்தலின் அதனை ஒரு பொம்மைக் கூத்து என்றுகூட நாம் சொல்லலாம். மேலும், நாடகத்துக்கு மட்டுமல்ல, 'ஓர் அழகிய உயரிய கருத்தினை அழகிய சொல் ஓவியமாக உரைப்பதே கவி'* என்னும் கவிப் பண்புக்கும் இக் குறள் நாடகத்தை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

*Poetry, is the elevated expression of beautiful or elevated thought, imagination or feeling

பிறர்பால் இரந்து பொருள் பெற்று உயிர் வாழ்தல் ஓர் இழி தொழில். உலகியலிலே, இரக்கும் வறுநிலையில் இருப்பவனுடைய மனப்பான்மை நமக்குத் தெரியும். அது மிகவும் இழிந்தது. கொடுக்கும் நிலையில் இருப்பவனது மனப்பான்மையும் பெரும்பாலும் இழிந்ததே. உயிரைக் கொடுத்தாலும் ஒரு அணுவைக் கொடுக்க மாட்டான்! ஆனால், கவியில் வரும் புலவர் படைப்பாகிய இரப்போனும் கொடுப்போனும் இலட்சிய பாத்திரங்கள். கொடுப்போன் தன்னிடம் உள்ளது ஒன்றனைக் கரத்தல் அறியாத உயர் மனம் உடையவன். அது மட்டுமன்று, வறியவனுய்த் தன்பால் வந்து இரப்பவனுக்கும் பெருமையும் மானமுமுண்டு என்று அறிந்து, அவனது மனிதத் தன்மையை மதிக்கும் நாகரிக மாண்பு உடையவன். அவன் பால் நம் இரப்போன் சென்று, அவன்முன் தன் வறுமை தோன்ற நிற்கின்றான். நிற்பதே தவிர, தன்மானம் போகத் தன் இழிநிலையைப் பன்னுதலும் பொருளுடையானைப் புகழ்ந்து பல் காட்டுதலும் இலன். அவன் நிற்கும் நிலையே இரத்தலாகி விடுகின்றது. கொடுப்போன் கொடுக்கின்றான். இருவரிடையும் பேச்சு நிகழ்தல் இன்றியே கொடை நிகழ்கின்றது. இந்நாடகத்தில் மூன்றாவது பாத்திரமாகப் பக்கத்தில் நின்று நாம் இக் காட்சியைக் காண்கிறோம். காணுதற்கரிய அழகான காட்சி! அழகிய இரப்போன், அழகிய கொடுப்போன். நம் உள்ளம் வியப்பெனும் மெய்ப்பாட்டால் குழைகின்றது, குழைவுற்ற உள்ளங்களையுடைய இரப்போனையும் கொடுப்போனையும் போல இந்தச் சித்திரத்தினையுடைய குறள் இது:

> **கரப்பிலா நெஞ்சின் கடனறிவார் முன்னின்று**
> **இரப்புமோர் ஏஎர் உடைத்து.**

[கடனறிவார் - பிறர் மானத்தை மதித்தொழுகும் மதிமாண்புடையோர்; ஏர் - அழகு] வள்ளுவர் வாக்கிலே ஏற்றம் எய்திய இரத்தல் படிப்பாரை இன்புறுத்திப் பண்படுத்தும் பாங்கினைப் பார்மின்.

## உணர்ச்சி உருவம் – கவி

சொல்லும் பொருளும் உணர்ச்சி உருவாக இருத்தலே கவி முத்திரை உடையது. முத்திரை இல்லாக் காசு செல்லாதது போல உணர்ச்சியில்லாக் கவி உயிரற்ற கவி. கவியின் அடி வடிவம் அதன் உடல் மாத்திரமே யாகும். பொருளில்

பொங்கும் உணர்ச்சியே அதன் உயிர். கவி நாடகத்துக்குப் பொருளாகக் களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனை யும், அதற்குப் பாத்திரங்களாகத் தலைவன் தலைவி தோழி முதலியோரையும் கூறிய தொல்காப்பியர் அப்பாத்திரங் களுக்கு உணர்ச்சியாய் மெய்ப்பாடுகள் கூறியதன் நோக்கம் இதுவே. புணர்ச்சிக்கு முன் நிகழும் மெய்ப்பாடுகள் முதல் ஒப்புடைமையாகிய மெய்ப்பாடுகள் வரையுள்ள அகவொழுக்க மெய்ப்பாடுகளையும், ஏனைப் புற ஒழுக்கத்துக்குரிய மெய்ப் பாடுகளையும் அவர் விரித்து ஓதியுள்ளார். கவிநாடகத்தில் நடிக்கும் அல்லது பேசும் பாத்திரங்களை அந்தந்தத் துறைக் கேற்ற மெய்ப்பாடுகள் உடையோராய்ச் சித்திரித்தலே கவி மரபாகும். இதனை எடுத்துக்காட்டும் பொருட்டே சங்க இலக்கியங்களுக்கு உரைவகுத்த பேராசிரியர் நச்சினார்க்கினியர் போன்ற பெருமக்கள் ஒவ்வொரு பாட்டிற்கும் உரிய துறை யினையும் மெய்ப்பாட்டினையும் ஆங்காங்குக் குறித்துள்ளார்கள்.

கவியில் உணர்ச்சி என்பது கவிப்பாத்திரங்களின் சந்தர்ப்ப உணர்ச்சிகளை உள்ளவாறு வெளியிடும்படியாகச் சொற் களிலும் வண்ணங்களிலும் அடிவடிவிலும் புலவரால் பொருள் அமைக்கப்படுவது. அதனைச் சுவைத்து உணர்ச்சியால் நெகிழ்தலே கவியினைப் படிப்பதாகும். மார்பு விம்மலும், மயிர் பொடித்தலும், கண்ணீர் அரும்பலும், குரல் தழதழத் தலும், உள்ளம் எழுந்து வானில் தாவுதலும், கவியினைப் படிப்பவனது அநுபவமாக இருத்தல் வேண்டும். இதனாலேயே 'எங்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை இழந்தாலும் இழப்போம்; எங்கள் ஷேக்ஸ்பியரை இழக்க ஒருப்படோம்' என்பர் ஆங்கி லேயர். தமிழர் ஒருவர் 'இருந்தமிழே உன்னால் இருந்தேன். தேவர் விருந்தமிழ்த மானாலும் வேண்டேன்' என்றார்.

**சில உணர்ச்சிச் சித்திரங்கள் :**

1. படைவலிமிக்க ஓர் அரசன் தன்பகைவன் மீது படை எடுக்கும் கருத்துடன் இருக்கின்றான். ஆனால் அவன்மீது செல்லற்குரிய காலம் இன்னமும் வரவில்லை. பொருதற்கு நேர்ந்த வலிமிக்க கடா ஒன்று தன்பகைத் தகர்மீது மோது தற்குப் பின்னே கால்வாங்கும் தன்மைபோல அவன் பின்வாங்கி நிற்கின்றான். அதனை அறியும் கூர்மை இல்லாத அப்பகை யரசன் 'இவன் எனக்கு அஞ்சிப் பதுங்கினன் போலு'மென

எண்ணி அவனுக்கு ஊறு ஒன்று செய்துவிட்டான். அப்போது படைவலிமிக்க அவ்வரசனது மனநிலை:

> பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
> உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்

அறிவுடைய அரசன் வினைசெய்வதற்குக் காலம் கருதியிருக்க வேண்டும். அத்தகையோன் ஞாலமே தன் குடைக்கீழ் வர விரும்பினாலும் அது அவனுக்குச் சாத்தியமாகும். எனவே, அவன் தன் உள்ளம் கனல்வதைப் பகைவன் அறிந்து கொள்ளா வண்ணம் மறைத்துக் கொள்கிறான். 'அவன் சீற்றம் கொண்டிலன் போலு'மென வெண்ணி அப்பகையரசன் போதிய காப்பினைச் செய்து கொள்ளாது வாளா இருத்தற்கே இவன் தன் கோபத்தை வெளியே காட்டாது அங்ஙனம் உள்ளே புழுங்குகின்றான். வெடியாத குண்டுபோல் வெகுளி உருவாய் இருக்கும் காலமறிந்த அரசனது அடங்கி எரியும் பேராற்றல் இது!

2. வறுமையால் வாடும் ஓர் மானி. நேற்றைத் தினம் உணவு பெறுதற்கு அவன் பட்ட பாடுகள் பல. நெடுநேரம் எண்ணிக் கொண்டேயிருந்தவன் பின்னர் எழுந்து ஒரு செல்வர் வீட்டை நோக்கி நடந்தான். அங்கே அவரைக் காணுதல் அவனுக்கு எளிதாக இல்லை. மிகவும் சிரமம் உற்றுக் கடைசியாக அவரைக் கண்டான். அவரும் மறுக்காமலே அவனுக்குச் சில பொருள் கொடுக்கிறார். புலவர்கள் கவியிலே காட்டும் வறியர்கள் பண்பிலும் வறியராக இரார். வறிய நிலையிலும் பெருமையுடன் ஒழுகவேண்டும் என்று நமக்குக் காட்டுதல் தானே புலவரின் உட்கோள். எனவே, நமது வறியன் அச்செல்வர் தனக்குப் பொருள் கொடுக்க இசைந்த போதும், அவரையும் வருத்தித் தான் உயிர் வாழ நேர்ந்த தன் ஊழுக்கு நொந்து, அப்பொருளைப் பெற்றுக் கொண்டுவந்து அன்றைப் பொழுதைத் தள்ளினான். இரவு வந்தது. உணவுக் கவலை இல்லாதவர்க்கு எளிதிற் கிடைக்கும் இன்ப உறக்கம் அவ் ஏழைக்கு ஏது? ஏதோ இரவெல்லாம் தூங்கியும் தூங்காமலும் பொழுதைப் போக்கினான். விடியும் வேளையும் வந்து விட்டது. சில நேரம் உறக்கத்தில் உணர்வற்றுக் கிடந்த உள்ளம் மீண்டும் கவலை கொள்ளத் தொடங்கிற்று. 'இன்று யாரிடம் செல்வது? ஒருவரிடம் சென்று ஒன்று கேட்பதென்றால் உயிரே போகின்றதே! நேற்று என்னை

வருத்திய வறுமை இன்றும் வருமோ, வந்தால் யாது செய்வேன்?'

**இன்றும் வருவது கொல்லோ நெருநலும்**
**கொன்றது போலும் நிரப்பு**

வறுமைக்கு அஞ்சி அஞ்சிச் சாகும் அச்ச உருவம் அவன்.

3. ஒரு இளம் வயது மனைவி. அவள் கணவன் பொருள் தேடி வருமாறு அவளை விட்டுப் பிரிந்து வேற்றூர் சென்று விட்டான். அவள் அல்லும் பகலும் அவனையே நினைத்துக் காதல் நோயால் மெலிந்து போய் விட்டாள். அவள் தோழி அவளைத் தேற்றித் தேற்றிச் சலித்துப் போய், ஒரு முறை 'ஏனடி, இப்படி அநியாயமாய் மெலிந்து போகிறாய்? எப்போதும் அதே நினைவுதானா உனக்கு? நாணமாக இல்லையா?' என்று சிறிது இடித்துப் பேசிவிட்டாள். தனது வருத்தம் அறியாது தன்னை அவ்வாறு உரைத்த தோழிக்குத் தலைவி இரங்கிக்கூறும் பதில் நமக்கும் இரக்கமாகவே இருக்கின்றது. 'நான் என்னடி செய்வேன். நாணம் இல்லாமல் இல்லை நான். என் வேட்கையைப் பிறர் அறிந்து கொள்வார்களோ என்று நாணி, அதனை நானும் மறைத்து மறைத்துத்தான் பார்க்கிறேன், ஊற்று நீரை வற்றவைக்கும்படி அதனை இறைக்க இறைக்க அது நில்லாது மேலும் மேலும் ஊறுவது போல என் வேட்கையும் அடங்காது மிகா நின்றதே, நான் யாது செய்வேன்'

**மறைப்பேன்மன் யான்இஃதோ நோயை இறைப்பவர்க்கு**
**ஊற்று நீர் போல மிகும்**

இவளைக் கணவன் பிரிவால் வாடும் துன்ப உரு என்பதா, அவனோடு கூட்டத்தை நாடும் வேட்கை உரு என்பதா? அவள் கூற்றைக் கேட்டு உள்ளமே இல்லாதவரன்றோ உருகாதிருப்பர்!

## உண்மை உரைப்பது கவி

கவிக்கு விஷயமாகிய அகத்திணையைப் பொதுவகையால் கூறும் தொல்காப்பியர் அவ்வியலின் முடிவில் இரண்டு எச்சரிப்புச் சூத்திரங்கள் வைத்து நம்மிடம் விடைபெற்றுக் கொள்கிறார்.

**மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்**

*புறத்திணை மருங்கிற் பொருந்தின் அல்லது*
*அகத்திணை மருங்கின் அளவுதல் இலவே*

'செய்யுளின் நாடக வழக்குப்பற்றி ஊர் பெயர் முதலியன அதன்கண் விலக்கப்பட்டன' என்று உரையாசிரியர் நச்சினார்க்கினியர் கூறுவர். ஆம், கவி என்பது பொது: காலப்பொது, இடப்பொது, யாவர்க்கும் என்றும் பொதுவான நிலையே றுடைய பேருண்மைகளைச் சொல்லும் பொதுமையே கவி தர்மம். ஒருவர்க்கு அல்லது ஒருபாலார்க்கு ஓரிடத்துக்கு, ஒருகாலத்துக் குரியவற்றைப் பற்றிய சிறிய விஷயம்—அற்ப விஷயம் வானம்போலும் வளிபோலும் நீர்போலும் நிறம் மணமற்றுப் பொதுவின் விளங்கும் கவிமண்டலத்தில் கால் வைத்தல் கூடாது.

நாயனார் தமது காலத்திலிருந்த சமூகத்தின் நிலை நோக்கி யாவர்க்கும் என்றும் பொதுவான அறம் உரைத்தார். ஊன் உண்ணல், கள்ளுண்ணல், பரத்தையர் தோளுண்ணல் முதலிய தீநெறிகளைக் கடிந்த சீர்திருத்தவாதி அவர். அறத்தோடும் பொருளோடும் ஒப்பக் கவிதை இன்பத்தையும் விரும்பும் தமிழனுக்குக் காமத்துப்பால் பாடிக்கொடுத்து, அவன் கவிச்சுவையைக் குறளமுதம் வார்த்து வளர்த்த வண் தமிழ்ப் புலவர். அவருடைய குறளில் வரும் அகப்பாட்டுக் களும் புறப்பாட்டுக்களும் பிறவும் ஒருவரை அல்லது ஒரு இனத்தைச் சுட்டுபவையல்ல. உயிர்களுக்கு உயிராக இருக்கும் வளியும் நீரும்போல அவர் குறள்கள் மக்களுக்கெல்லாம் பொதுவாக அமைந்து அவர்களை விளக்குவன. பொதுவான அழியாத் தருமங்களைச் சொல்லிய தன்மையாலேயே அவரும் அழியாப் புலவராக என்றும் வாழ்கிறார்.

நாயனாருடைய குறள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழியாப் பேருண்மையினையே சொல்வது. குறள் ஏடுகளைப் புரட்டி எந்த ஒரு பாட்டிலும் விரல்வைத்துக் காண்பாரும் காண எளிய உண்மை இது. நாமும் ஓர் குறளில் விரல்வைத்து எடுத்து, அது கூறும் அழியாப் பொதுப் பேருண்மையினைக் காண்போம். கயமை அதிகாரத்தில் வரும் கடைசிப் பாட்டு அது. மனிதர் யாவரும் நல்லோராகவே பிறக்கின்றார்கள்; ஆனால் அவர்கள் நல்லாராகவும் பொல்லாராகவும் இருப்பதற்குச் சூழ்நிலையே காரணம். ஆதலின் மனிதரைச்சொல்லிக்

குற்றமில்லை என்று பேசிக்கொள்கிறோம். பொறுப்பற்ற போலி வாழ்க்கை நடத்துவதற்கு இது ஓர் போலிச் சமாதானம். நாயனார் இத்தகைய மடி வேதாந்தத்துக்கு உடன்படுவாரா? அன்றி, நம்மையும் உடன்பட விடுவாரா?

அவர் அறத்துப்பாலிலும் பொருட்பாலிலும் இல்வாழ் வார்க்கும் துறந்தார்க்கும், அரசர்க்கும் அமைச்சர்க்கும் பிறர்க் கும் உரிய நீதிகள் எல்லாம் ஓதி முடித்து, காமத்துப் பாலுக்குப் போகுமுன், ஆயிரத்து எண்பதாம் குறளாகிய இக் கடைசிப் பாட்டில் அவர்களிடம் வழியனுப்பிக் கொள்கிறார். அக் கடைசிப் பாட்டு அறத்துப்பாலும் பொருட்பாலும் கேட்ட யாவர்க்கும் ஓர் வலிய எச்சரிப்பாக இருக்கின்றது. அது முற் கூறிய மடி வேதாந்திகளுக்குத் தக்க விடையாகவும், அனைவரை யும் நல்லறத்தில் ஊன்றி நிறுத்துவதாகவும் இருக்கின்றது. 'குறள் கேட்ட மக்காள், உலகத்தின்மீதும் சூழ்நிலையின் மீதும் பழியைப் போட்டுவிட்டுப் பிழை செய்து சிறுமை எய்தாதீர். சூழ்நிலைக்குப் பணிந்து வாழ்வோர் சாமானியர். நீவிர் சூழ்நிலையை வென்று வாகை சூடுவீர்' என்று இறுதி அறவுரை புகல்கின்றார்.

> *எற்றிற்கு உரியர் கயவர், ஒன்று உற்றக்கால்*
> *விற்றற்கு உரியர் விரைந்து*

சந்தர்ப்ப வசப்பட்டுத் தடுமாறுவோர் கயவரே. இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது ஒழுக்கமே, அதனால் அது உயிரினும் ஓம்பப்படும்.

## அணி அழகுடையது கவி

கவிக்கு உணர்ச்சி வேண்டுமென்ற தொல்காப்பியர் அதற்கு உருவ அழகும் வேண்டும் என்றார். அதன் பொருட்டே செய்யுளியலுக்கு முன்னர், முப்பானேழு சூத்திரங்களால் உவமவியலும் சொன்னார். அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப முதலிய முப்பானான்கு உவம உருபுகளும் தந்தார். கவிக்கு அழகு ஏறும்பொருட்டு, 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என, உவமிக்கப்படும் பொருளைக் காட்டிலும் உவமைப் பொருள் உயர்ந்த பொருளாதல் வேண்டுமென்றும் வகுத்தார். கவி என்பது உலகியல் கூறும் வரலாறு, அல்லது பொருளியல் அம்சமுடையதல்ல. புலவன் தன் கற்பனைத் திறத்தால் எழுப்பும் ஓர் அழகுப் படைப்பு. அதற்கு அணிகள் வேண்டும்.

நாயனார் குறள் ஒரு நீதி நூல். ஆனால் வாழ்க்கையின் இன்பங்களைக் கண்டு மருண்ட அமணர் செய்த பிற நீதி நூற்களைப் போலாது, தமிழ் மரபின் அடிப்படையில் எழுப்பப்பெற்ற தமிழ் நீதி மன்றம், கலைக் கோவில். எனவே, அக்கோவில் ஓர் அணியகமாகவும் விளங்குதல் இயல்பே.

> அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு

என்று அணியிலேயே அடிவைத்து நடக்கத் தொடங்கி, அணிவளத்திலேயே செல்கிறது இறுதிவரை.

'ஆழ நீரில் மற்றவற்றை வெல்லும் முதலை, அந்நீரை விட்டு வெளியேறினால் மற்றவை அதனை வென்றுவிடும். தரையில் ஓடும் சக்கரங்களையுடைய தேர் கடலில் ஓடாது, கடலில் ஓடும் மரக்கலம் தரையில் ஓடாது. பாகற்கு அடங்காது சீறி, வேல் ஏந்திய வீரர்களைத் தன் கொம்பிலே குத்திவரும் போர் யானையாக இருப்பினும் கால் ஆழ்வதாகிய சேற்றில் இறங்கி விட்டால் ஒரு சிறு நரி அதனைக் கொன்றுவிடும்.' பகைவரை வெல்லுதற்குக் காலம் பார்த்தல் வேண்டுமென்று கூறிய நாயனார், அதற்கு இடமும் பார்த்தல் வேண்டும் எனக் கூறுமிடத்து இம் மூன்று குறள்களும் வருகின்றன.

> நெடும் புனலுள் வெல்லும் முதலை, அடும் புனலின்
> நீங்கின் அதனைப் பிற
>
> கடலோடா கால்வல் நெடுந்தேர், கடலோடும்
> நாவாயும் ஓடா நிலத்து
>
> காலாழ் களரின் நரிஅடும், கண் அஞ்சா
> வேலாள் முகத்த களிறு

பொது வகையால் இடமறிதலை விளக்கும் உவமைகள் இவை.

உவமைகள் கூறுவதில் சிறப்பில்லை. ஆனால் தொல்காப்பியர் கூறுமாறு, உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும். சிறப்பெல்லாம் உவமையும் பொருளும் ஒத்திருக்கும் தன்மையறிந்து உலகினரை உள்ளமகிழச் செய்வதிலேயே இருக்கின்றது. இராமனுக்கு அரசில் ஆசை இல்லை. தந்தை சொன்னதை மறுப்பதற்கு அஞ்சியே அந்தப் பாரத்தைச் சுமப்பதற்கு இசைந்திருந்தான். மாட்டினை உடையவன் ஒருவன் வண்டியில் பாரம் ஏற்றி அதனை நுகத்திற் பூட்டினால் அது யாது

செய்யும்? என்ன சொல்லும்? வாய் பேசாது இழுத்துச் சென்று இளைக்கும், வருந்தும். அதே நிலையில் இருந்தான் இராமன். கைகேயி அவன் எதிர்பாரா வண்ணம் அவனுக்கு விடுதலை அளித்தாள். எக்காலத்திலும், அப்போதுதான் மலர்ந்த புதிய தாமரை மலரினை ஒத்திருக்கும் அவன் முகம், அச் செய்தியைக் கேட்டபோது அத்தாமரை மலரினையும் வென்று விளங்கிற்று. அவன் உள்ளத்தின் மகிழ்ச்சி முகத்தில் புத்தொளி வீசிற்று.

> **உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரேறு**
> **அருளுடை ஒருவன் நீக்க அப்பிணி அவிழ்த்தது ஒத்தான்**

பாரம் இழுத்துச் சோரும் கார் ஏற்றின்மீது கருணை கூர்ந்து அருளுடையான் ஒருவன் அவிழ்த்து விட்டால் அது எவ்வாறு மகிழ்ந்து நிற்குமோ அவ்வாறே இராமன் கைகேயியின் முன் மனமகிழ்ந்து அடங்கி நின்றான். கம்பர் தரும் உவமை இது. இவ்விடத்தில் இராமனது மனப்பான்மைக்கும் சந்தர்ப்பத்துக்கும் பங்கமில்லாமல் பொருந்தும்படி வேறு என்ன உவமை கூறமுடியும்?

கற்றோர் குழுமிய அவையிலே கல்லாதான் ஒருவன் சென்று அவரோடு இருத்தல் நாய் இருத்தல் போலாம், அவர்களிடையே அவனும் வாய்திறந்து பேசுதல் அந்த நாய் குரைத்தது போலாம் என்று நாலடியார்ப் பாட்டு ஒன்று கூறுகிறது. இதே செய்தியை நாயனாரும் ஓர் உவமை முகத்தான் உரைக்கின்றார்.

> **கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர்**
> **குழாஅத்துப் பேதை புகல்**

'சான்றோர் அவையிலே பேதை ஒருவன் புகுதல், தூய அல்ல மிதித்துக் கழுவாத காலை இன்பந்தரும் அமளிக்கண்ணே வைத்தாற் போலும்' என்பது அதன் பொருள். சமணர் சபையில் புகுந்த பேதை புகுந்ததனோடு அமையாது அவர்களோடு தானும் பேசுமளவுக்கு வந்துவிட்டான். நாயனாரோ தம் சபையில் கல்லாதவன் எட்டிக் கால் வைத்தலைச் சீச்சீ என்று தடுத்துத் தள்ளுகின்றார். இனி, அவன் அவர்களிடையே இடம் பெறுவதெங்கே, பேசுவது எப்படி? அறிவில்லார்க்குரிய மதிப்பு இது! இங்ஙனம் பொருள் தெளிவு செய்வது பொருத்தமான அவ்வுவமையேயாகும். அதனை,

'கழாஅக்கால்' என அவையல் கிளவியில் எத்துணை நாகரிகமாகக் கூறியுள்ளார்.

> கடாஅக் களிற்றின் மேல் கட்படாம் மாதர்
> படாஅ முலைமேல் துகில்
>
> பாலோடு தேன்கலந் தற்றே பணிமொழி
> வாலெயிறு ஊறிய நீர்

இவை எண்ணற்ற உவமைக் குறள்களில் ஓரிரண்டு. 'அவளது சாயா நகில்களின் மேல் இடப்பட்ட துகில் கொல்லாமல் காப்பதால், கொல்வதாகிய மதயானையின் மேலிட்ட முகபடாம் போலாம். மெல்லிய மொழிகள் பேசும் அவளது வெள்ளிய எயிற்றில் ஊறிய நீர் பாலும் தேனும் கலந்தாற் போலும் அவனுக்குச் சுவையாகின்றது. இவற்றின் நயத்தினையும் பொருத்தத்தினையும் உண்மையையும் விரித்துரைக்கவேண்டா. அவை வெளிப்படை.

## இன்பம் ஊட்டுவது கவி

கவியின் முடிவான பயன் இன்பம் செய்தலே* என்பர் மேனாட்டறிஞர் ஒருவர். கவியமுதுண்டு வளர்ந்த தமிழ்ச் சமூகத்துக்கு இது புதிய உண்மையல்ல. 'கம்பநாடன் கவிதையிற்போல் கற்றோர்க் கிதயங் களியாதே' என்பதின் பொருள் என்னே? தேவருலகில் கற்பகத்தருவின் நிழலிலே வேண்டுவன எல்லாம் எய்தி இந்திரபோகம் நுகர்ந்திருப்பதைக் காட்டினும் தமிழ்நாட்டிலே கவிதை துய்த்திருப்பதே சாலச் சுவைதருவது என நம்மவர் கருதினர். கம்பர் பாட்டு இன்பமும் கபிலர் பாட்டு இன்பமும் இளங்கோ பாட்டு இன்பமும் நாம் அறியாதனவல்ல. அவரெல்லாம் மக்களைப் பொதுவகையான் வைத்து அவர்களை மகிழ்வித்தோர்.

நாயனர் சிறப்புவகையில் மக்களை மகிழ்விக்கும் குறட் கவியாத்தவர். அவர் காப்பியத்திலே இல்வாழ்வார் படித்தின்புறும் குறள்கள் உள. துறந்தார் கண்டுவக்கும் சுவைக் குறள் உள. அந்தணரையும் அரசரையும் வணிகரையும் உழவரையும் அமைச்சரையும் தூதுவரையும் பிறபிற தொழில் செய்வார் பலரையும் அவரவர்க்கு ஏற்பன கூறி இன்புறுத்தும்

*The end of poetry is to please

இன்குறள்கள் எண்இல. இளங் காதல் உள்ளங்களைக் களி வெறி கொள்ளச் செய்யும் உணர்ச்சிச் சுரங்கங்களான குறள்கள் பல. குறளைப் படித்து இன்புறாதார் கள்குடியரும் கயவரும், கணிகை நண்பரும், பிறருமாகிய பூரியரேயன்றிச் சீரியர் யாருமல்லர்.

மகனைப்பெற்று அவன் அளாவிய கூழமுதைக் கண்டும் உண்டும் களிக்கும் ஓர் இல்வாழ்வான் எய்தும் இன்பம்.

அமிழ்தினு மாற்ற இனிதே தம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்

சிறுமகனை எடுத்துத் தம் மடிமீது வைத்து அவன் மழலை கேட்கும் தாய்தந்தையரது தனி மகிழ்ச்சி:

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு

தவத்தால் வாடும் துறவியின் மனதை ஆற்றி அவனை ஊக்கும் இனிய மருந்து:

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

கற்றுப் பேரறிவுடையவனாய்ப் பொருட் குறையுடையான் ஒருவன் இன்புறும் காரணம்:

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

நன்மனமுடைய வணிகன் கண்டு உவக்கும் குறள்:

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்

களவொழுக்கம் பயிலும் புதிய காதலர் இருவர் தாம் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்வதை நாம் பார்த்து வியக்கும் இன்பம்:

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள

முயன்று முயன்று தோற்றுச் சலிப்புற்றிருப்பானைத் தேற்றி, மீண்டும் முயலுமாறு ஆள்வினையுடைய அவ்வாடவனை ஊக்குவது:

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

இங்ஙனம் வரம்பின்றி அடுக்கிக்கொண்டே செல்லலாம். அது மிகவும் விரியும். ஆதலின் புலவர் கவுணியனார் கூற்றினை நினைவுறுத்தி நிறுத்துகின்றேன்.

**சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய**
**வந்த இருவினைக்கு மாமருந்து-முந்திய**
**நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்**
**பன்னிய இன்குறள் வெண் பா**

ஆம், தமிழ்ப்பெருமகனார் திருவள்ளுவர் இயற்றிய குறள் ஓதுவார் நாவுக்கின்பம், கேட்பார் செவிக்கின்பம் சிந்திப்பார் உளத்துக்கின்பம்.

**பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்**
**பாவிற்கு வள்ளுவர்வெண் பா.**

---

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி—1-'54.